# திரிபுவாதத்திற்கு எதிராக...



த.நா.அ.க.
இ.பொ.க.
(மா-லெ)

# திரிபுவாதத்திற்கு எதிராக

திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்தில்
சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின்
ஒற்றுமையைக் கட்டியமைப்போம்!

தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி
இந்திய பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்)

ஆகஸ்ட், 1987

ரூ. 10-00

வெளியீடு :
கேடயம்,
11, வடஅகரம் 2வது சாலை,
மேத்தா நகர்,
சென்னை-29.

நீட் பிரிண்டர்ஸ், சென்னை-600 002.

# திரிபுவாதத்திற்கு எதிராக

## உள்ளடக்கம்

பக்கம்


1. திரிபுவாதத்தின் பொருளாதார அடிப்படையும் அரசியல் உள்ளடக்கமும் — 3
2. ஏகாதிபத்தியமும் யுத்தமும் — 15
3. யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினையில் குருச்சேவ் திருத்தல்வாதம் — 20
4. ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் மூன்று சமாதானக் கோட்பாடுகள் — 31
5. ரசிய சமூக நவீன காலனியாதிக்கம் — 43
6. உலக அரசியல் சக்திகளை வகைப்படுத்தும் கோட்பாடு பற்றி — 59
7. மூன்றுலகக் கோட்பாடும் டெங் கும்பலின் திருத்தல்வாதமும் — 71
8. சோசலிசமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் – ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்தல்வாதம் — 81
9. சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவ உரிமையும், இடது வலது திரிபும் — 91
10. சோசலிசமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டமும் — 101
11. சோசலிசத்தில் வர்க்கப் போராட்டம்: லியூ-டெங் திருத்தல்வாதம் — 129
12. திருத்தல்வாதத்துக்கு எதிராக தேசிய, சர்வதேசிய ரீதியில் கம்யூனிஸ்டுகள் அய்க்கியப்பட வேண்டும் — 142

மேற்கோள் நூல் பட்டியல் — 151

# திரிபுவாதத்திற்கு எதிராக

மார்க்சியத்துக்கு முற்பட்ட 'சோசலிசம்' அனைத்தும் மார்க்ஸ் காலத்திலேயே முற்றாக நொறுக்கப்பட்டு விட்டது. அதிலிருந்து கம்யூனிச இயக்கத்தின் வரலாறு முழுவதும் மார்க்சியத்துக்கும் திரிபுவாதத்துக்கும் இடையிலான போராட்டத்தின் வரலாறாகவே இருந்து வருகிறது. இந்தப் போராட்டத்தில் எப்போதும் திரிபுவாதம் தோல்வியடைந்து மார்க்சியம் மேலும் மேலும் புதிய வெற்றிகளைச் சேர்த்துக் கொண்டு வருகிறது.

மார்க்ஸ் - ஏங்கல்ஸ் மறைவுக்குப் பின் சர்வதேச கம்யூனிச இயக்கம் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளால் சூழப்பட்டிருந்தபோது அதைத் தகர்த்தெறிந்து மார்க்சியத்தைப் பாதுகாத்து வளர்த்து நிலைநாட்டினார் லெனின். லெனின் மறைவுக்குப் பின் டிராட்ஸ்கி, காமனெவ், புகாரின், ஜினோவிவ் துரோகக் கும்பலுக்கு எதிரான போராட்டத்திலேயே உலகின் முதல் பெரிய சோசலிச நாட்டை சர்வதேச எதிர்ப்புரட்சி சக்திகளின் எதிர்ப்புகளிடையே கட்டியமைத்தார் ஸ்டாலின். ஸ்டாலின் மறைவுக்குப் பின் இந்நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளில் குருசேவ் துரோகக் கும்பலால் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு ஆபத்தேற்பட்டபோது அதை முறியடித்து மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாப்பதில் தலைமைப் பாத்திரம் ஆற்றினார் மாவோ.

இன்று ரசியாவின் குருசேவ் துரோகக் கும்பலால் மட்டுமல்லாது, சீனாவின் லியூ - டெங் திருத்தல் வாதக் கும்பலாலும் சர்வதேச கம்யூனிச இயக்கம் சூழப்பட்டுள்ளது. இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை முறியடித்து லெனின் மார்க்சியத்தைப் பாதுகாத்தது போல், குருசேவ் திருத்தல்வாதத்தை முறியடித்து மார்க்சிய- லெனினியத்தை மாவோ பாதுகாத்ததுபோல், இன்று ரசிய -சீன திருத்தல்வாதிகளை முற்றமுழுக்க முறியடித்து, அவர்களின் சமாதிகளின் மேல் புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தைப் பாதுகாக்கும் மாபெரும் கடமை இன்று உலகெங்கும் இருக்கும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களைச் சார்ந்திருக்கிறது.

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை எதிர்த்த போராட்டத்திலேயே சர்வதேச கம்யூனிஸ்டுகளின் அய்க்கியத்தை மூன்றாவது அகிலத்தில் சாதித்தார் லெனின். இன்று ரசிய - சீன திருத்தல்வாதிகளை எதிர்த்த போராட்டத்திலேயே சர்வதேச கம்யூனிஸ்டுகளின் அய்க்கியம் சாதிக்கப்பட வேண்டும்.

அறுபதாம் ஆண்டுகளில் முன்னணிக்கு வந்த ரசிய திருத்தல்வாதமும், எழுபதாம் ஆண்டுகளில் முன்னணிக்கு வந்த லியூ - டெங் திருத்தல்வாதமும், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் லெனினால் முறியடிக்கப்பட்ட இரண்டாம் அகில சந்தர்ப்பவாதங்களின் புதிய பதிப்புக்களே அன்றி வேறல்ல. அவற்றின் அரசியல் உள்ளடக்கமும், பொருளாதார அடிப்படையும் பருண்மையான வரலாற்றுக் காரணங்களால் எழுந்திருக்கும் வேறுபாடுகளில் தவிர அடிப்படையில் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளிடமிருந்து வேறுபடவில்லை.

# 1. திரிபுவாதத்தின் பொருளாதார அடிப்படையும் அரசியல் உள்ளடக்கமும்

திரிபுவாதம் என்பது தொழிலாளி வர்க்க இயக்கத்துள் இருக்கும் முதலாளித்துவப் போக்கேயாகும். 'திரிபுவாதம் முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஒருவடிவம்'(1) என்றார் மாவோ. இது உதட்டளவில் மார்க்சியம் பேசுகிறது. உண்மையில் மார்க்சியத்தின் புரட்சிகர சாராம்சத்தை தூக்கி எறிந்துவிடுகிறது. தொழிலாளி வர்க்க இயக்கத்தில் புரட்சிகர நடவடிக்கைகளையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் கைவிட்டு, பாராளுமன்ற வாதத்தையும், சட்டவாதத்தையும், சீர்திருத்தவாதம் மற்றும் பொருளாதாரவாதத்தையும் இது பிரச்சாரம் செய்கிறது. இதன் வர்க்க அடிப்படை தொழிலாளி வர்க்கத்தில் இருக்கும் குட்டி முதலாளிய தொழிலாளி வர்க்க 'பிரபுகுல' பிரிவே. 'திரிபுவாதம் ஆட்சிக்கு வருவது என்பது முதலாளித்துவம் ஆட்சிக்கு வருவதாகும்' (2) என்றார் மாவோ. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், புரட்சிகர நடவடிக்கைகளையும் கைவிட்டு முதலாளிவர்க்கத்துடன், அதன் சித்தாந்தத்துடன் சமரசம் செய்து கொள்ளும் இந்த 'பிரபுகுலம்' உண்மையில் புதுவகை முதலாளி வர்க்கமேயாகும்.

இது குறித்து 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே ஏங்கல்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார். 1858 அக்டோபரில் அவர் மார்க்சுக்கு எழுதிய கடிதம் (3) ஒன்றில் 'இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கம் மேலும் மேலும்

முதலாளித்துவமயமாகி வருவது' பற்றியும் 'முதலாளித்துவ தொழிலாளி' வர்க்கப் பிரிவு ஒன்று உருவாகி வருவது பற்றியும் குறிப்பிட்டார். 1858க்கும்1892க்கும் இடையே இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்திடம் ஏற்பட்ட இந்தப் போக்கு பற்றி மார்க்ஸ், ஏங்கல்ஸ் இருவருமே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இக்காலத்தில் பிரிட்டன் மட்டுமே தொழில்துறையில் முன்னேறிய நாடாகவும், காலனிகளிலும் உலகச் சந்தையிலும் ஏகபோகம் பெற்ற நாடாகவும் விளங்கியது. பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம், தனது சொந்த தொழிலாளி வர்க்கத்தைவிட கூடுதலாக உலகை நாடுகளை கொள்ளையடித்து சேர்த்த வருமானத்தில் ஒரு பகுதியை 'லஞ்சமாக' கொடுத்து தொழிலாளி வர்க்கத்தில் மேல்தட்டு பிரபுக் குலம் ஒன்றை உருவாக்கி இருந்தது.

இவ்வர்க்கப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்புகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், வர்க்கப் போராட்டமும் இல்லாமல் சீர்திருத்தங்கள் மூலம் சோசலிசம் அடைவது பற்றிப் பேசின. இத்தகைய அமைப்புகளை 'முதலாளித்துவ தொழிற்கட்சிகள்'(5) என்று ஏங்கல்ஸ் ஆழ்ந்த அர்த்தத்துடன் குறிப்பிட்டார். 'இவற்றின் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தினால் விலைக்கு வாங்கப்பட்டு விட்ட அல்லது அவர்களால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்கள்'(6) என்றும் 'இந்த ஆட்களை தமக்குத் தலைமை தாங்க அனுமதிக்கும் அந்தப் படுமோசமான ஆங்கிலேயத் தொழிற் சங்கங்கள்'(7) என்றும் அவர் எழுதினார். 'இக்கும்பல் முழுவதையும் தொலைத்து தலைமுழுகுவது' (8) பற்றி மார்க்ஸ் 1874ல் எழுதினார்.

19ம் நூற்றாண்டின் இறுதியில் ஏகாதிபத்திய சகாப்தத்துக்கான மாற்றம் ஏற்பட்டது. ஒன்றல்ல பல வல்லரசுகளது நிதி மூலதனம் இப்போது ஏகபோக

நிலையை அடைந்தது. அவை அனைத்தும் எல்லா முன்னேறிய நாடுகளிலும் சலுகை படைத்த 'தொழிலாளர் பிரபு குலம்' ஒன்றையும் 'முதலாளித்துவ தொழிற்கட்சிகளை'யும் உருவாக்கின. ஏகபோகங்களின் நிலையில் கிடைத்த பெரும் லாபங்களில் ஒரு பகுதி இதற்கு 'லஞ்சமாக' ஒதுக்கப்பட்டது. இவ்வாறு பொருளாதார வழியில் 'தொழிலாளர் பிரபு குலம்' ஒன்று தோன்றி முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து விடும் நிகழ்ச்சிப் போக்கு முதிர்ச்சியுற்று எதார்த்தமாகியது. 'தொழிலாளி வர்க்கத்திலும் அதன் மிகப் பெரும்பான்மையினரிடமிருந்து பிரிந்து நிற்கக் கூடிய சலுகை பெற்ற மேல்தட்டு பிரபு குலம் ஒன்றை தோற்றுவிப்பது ஏகாதிபத்தியத்திற்குரிய போக்காகும்' (9) என்று லெனின் எழுதினார். இந்த பொருளாதார உண்மை - வர்க்க உறவுகளில் ஏற்பட்ட இந்த மாறுதல்- இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதப் போக்கு என்ற அரசியல் வடிவம் பெற்றது.

1914-18ல் முதல் உலக யுத்தம் வெடித்தபோது சந்தர்ப்பவாதப் போக்கு 'தாயகத்தைப்பாதுகாப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் பிளக்கானவ் போன்றோர் தலைமையில் சமூக தேசியவெறி மற்றும் சமூக ஏகாதிபத்தியமாகவும் (10) காவுட்ஸ்கி தலைமையில் அதற்கு ஆதரவான 'மையவாதமாகவும்' (11) வெளிப்பட்டது. சமூக தேசிய வெறியர்கள் என்போர் சொல்லில் சோசலிஸ்டுகளாகவும் செயலில் தேசிய வெறியர்களாகவும் இருப்பவர்கள் என்பதாகும். 'இந்தப் பேர்வழிகள் நமது வர்க்க விரோதிகள், முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்' (12) என்றும 'தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் இருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தினர்' (13) என்றும் இவர்களை லெனின் குறிப்பிட்டார்.

இவர்களைப் பற்றி மேலும் லெனின் கூறினார்: ''அவர்கள் (நல்ல ஊதியம், கௌரவப் பதவிகள் மூலம்) எதார்த்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தால் லஞ்சம் தரப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் அடுக்குகள், குழுக்கள் அல்லது பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இந்தப் பகுதிகள் தமது முதலாளிகளின் கொள்ளையில் பாகம் பெறுவதற்காக போராடவும், தமது 'சொந்த' முதலாளி வர்க்கம் சிறிய பலவீனமான மக்கள் பிரிவுகளை சுரண்டவும், ஒடுக்கவும் உதவுகின்றன'' (14). 'முதலாளிகளாக மாறிய இந்த தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர் பிரபு குலத்தோர், தங்கள் வாழ்க்கை முறையிலும், ஊதியத்தின் அளவிலும், தங்கள் கண்ணோட்டம் முழுவதிலும் அற்பவாதி (Philistine) மனப்பான்மை கொண்டவர்கள்...பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளிவர்க்கத்துக்கும் இடையில் நடைபெறும் உள்நாட்டுப்போரில் இவர்கள் தவிர்க்க முடியாமல் பெரிய எண்ணிக்கையில் முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்பை ஏற்கின்றனர்' (15).

இவ்வாறு கூறிய லெனின் சமூக தேசியவெறி மற்றும் சந்தர்ப்பவாதத்தின் வர்க்க அடிப்படை பற்றி பின்வருமாறு கூறினார்:

'சலுகை பெற்ற ஒரு சிறு பகுதி தொழிலாளர்கள் அவர்களுடைய தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் திரளான தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக அமைத்துக் கொள்ளும் கூட்டணி, சுரண்டப்படும் வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்துக்கும் அதன் குற்றேவலர்களுக்கும் இடையே ஏற்படும் கூட்டணி' (16).

இவ்வாறு இரண்டாவது அகில சந்தர்ப்பவாதத்தின் பொருளாதார அடிப்படையை விவரித்த லெனின், அதன் அரசியல் உள்ளடக்கத்தை பின்வருமாறு தொகுத்துரைத்

தார். "வர்க்கங்களின் ஒத்துழைப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுத்தல், புரட்சிகர நடவடிக்கைகளை மறுத்தல், முதலாளித்துவ சட்ட முறையை நிபந்தனை இன்றி ஏற்றுக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்திடம் நம்பிக்கை இன்மை, முதலாளி வர்க்கத்திடம் நம்பிக்கை போன்றவை' (17) என்றும் 'சந்தர்ப்பவாதம் முதலாளித்துவ சோசலிசமேயன்றி பாட்டாளி வர்க்க சோசலிசம் அல்ல' (18) என்றும் தொகுத்துக் கூறினார்.

அறுபதாம் ஆண்டுகளில் சோவியத் யூனியனில் குருசேவ் திருத்தல்வாதிகள் அதிகாரத்துக்கு வந்தனர். பாட்டாளி வர்க்க கட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் கைவிட்டு அனைத்து மக்கள் கட்சி - அனைத்து மக்கள் ஆட்சி என அறிவித்தனர். சர்வதேசப்புரட்சியை கைவிட்டு தமது ஏகாதிபத்தியக் கொள்கையைச் செயல்படுத்த 'மூன்று சமாதானக் கோட்பாடுகளை' அறிவித்தனர். இதன் மூலம் சர்வதேச உழைக்கும் மக்களை கைவிட்டு பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டனர். உலகமெங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பிளவுபடுத்தி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், புரட்சிகர நடவடிக்கைகளையும் கைவிட்ட பாராளுமன்றவாத முதலாளித்துவ கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைத்தனர்.

குருசேவ் திருத்தல்வாதத்தை அம்பலப்படுத்திய மாவோ ரசியாவில் கட்சி, அரசாங்கம், தொழில் நிறுவனங்கள் மற்றும் அறிவாளிகளிடையே 'சலுகை பெற்ற ஒரு பிரிவு' இருப்பதையும் அது 'சீரழிந்த நபர்களைக்' கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார். இப்பிரிவு "தொழிலாளர்கள், விவசாயிகள் மிகப் பெரும்பான்மையான அறிவாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக இருக்கிறது' என்றார். 'இந்த சலுகை பெற்ற பிரிவான

பூர்சுவாக்களின் பிரதான பகுதியே குருசேவ் கும்பலின் சமூக அடிப்படை' என்றும் 'இதுகட்சி, அரசு ஆகிய வற்றின் தலைமையைக் கைப்பற்றியிருக்கிறது' என்றும் கூறினார். மேலும் 'சோவியத் மக்களுக்கும் இந்தசலுகை பெற்ற பிரிவுக்கும் இடையிலான முரண்பாடே தற்போது சோவியத் சமுதாயத்தின் பிரதான முரண்பாடு' (19) என்றும் ரசிய திருத்தல்வாதிகளின் ஆட்சியை 'முதலாளி வர்க்க சர்வாதிகாரம், ஜெர்மன் பாசிச ரக சர்வாதி காரம், ஹிட்லர் ரக சர்வாதிகாரம்' என்றும் சோவியத் யூனியன் ஒரு 'சமூக ஏகாதிபத்தியம்' என்றும் 'அதன் சமூக அடிப்படை புதுரக அதிகார வர்க்க ஏகபோக முத லாளித்துவ வர்க்கம்' என்றும் வரையறுத்தார். (20)

சமூக ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பு புதிய விசயமல்ல. பிரிட்டனில் 'உலகச் சந்தையிலும், காலனி களிலும் இங்கிலாந்துக்குள்ள ஏகபோகத்தின் விருந் துணவில் பங்கு பெற்று களிப்புறுவதற்காக' (21), ஏகாதி பத்திய முதலாளிகளின் லாபத்தில் பங்குபெறும் சலுகைக் காக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு சீர்திருத்தவாதம் பேசிய 'பேபியன் கழகத்' தலைவர்கள் 'பேபியன் ஏகாதிபத்தியவாதிகள்' (22) என்று பொருத்த மாக அழைக்கப்பட்டு வந்ததை லெனின் சுட்டிக் காட்டு கிறார்.

இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள், 1914—18ம் ஆண்டு உலக யுத்தத்தின் போது 'தாயகத்தைப் பாதுகாப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் தத்தம் நாட்டு 'சொந்த' ஏகாதிபத்திய பூர்சுவா வர்க்கத்துக்கு ஆதர வளித்தனர். புரட்சிகர நடவடிக்கைகளையும், எழுச்சி களையும், பாட்டாளி வர்க்கசர்வாதிகாரத்தையும் அவர் கள் எதிர்த்தபோது அவர்களை சமூக ஏகாதிபத்தியவாதி கள் என லெனின் அழைத்தார். 'ஏகாதிபத்திய சித்தாந் தம் தொழிலாளி வர்க்கத்துள்ளும் ஊடுருவி விடுகிறது'

(23) என்று எழுதினார். யுத்தத்தின் போது சொந்த தேசத்தின் பாதுகாப்பு என்ற பெயரில் தமது ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தை—அதன் உள்நாட்டு மற்றும், காலனிய சுரண்டல் ஆதிக்கத்தை—பாதுகாத்து நின்றதால் அவர்கள் ஒரே நேரத்தில் சமூக தேசிய வெறியர்களாகவும், சமூக ஏகாதிபத்தியவாதிகளாகவும் இருந்தனர்.

19ம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டனில் இருந்த பேபியன் ஏகாதிபத்தியத்திற்கும், இரண்டாவது அகில சந்தர்ப்பவாத ஏகாதிபத்தியத்துக்கும் இருந்த ஒற்றுமையைப் பற்றி லெனின் கூறினார். 'பேபியன் ஏகாதிபத்தியம் என்பதும், சமூக ஏகாதிபத்தியம் என்பதும் ஒன்றே. இரண்டும் சொல்லில் சோசலிசம், செயலில் ஏகாதிபத்தியம் என்பதே. சந்தர்ப்பவாதம் ஏகாதிபத்தியமாக வளர்கிறது என்பதே...சந்தர்ப்பவாதமும், சீர்திருத்தவாதமும் தவிர்க்கமுடியாமல் சமூக ஏகாதிபத்தியம் அல்லது சமூக தேசியவெறி என்ற உலகம் தழுவிய நிகழ்வாக வளர்கிறது' (24) என்று கூறிய அவர் 'ரசியாவில் பிளக்கானவ் வகையறா, ஜெர்மனியில் ஷெய்டெமன்கள், பிரான்சில் றெனடேவ் ஜெட்டு செம்யி வகையறா, இத்தாலியில் பிஸ்ஸொலாட்டி வகையறா, பிரிட்டனில் ஹைண்ட்மன், பேபியன்வாதிகள், தொழிற் கட்சியினர் (தொழிற் கட்சி தலைவர்கள்), ஸ்வீடனில் பிரான்டிஸ் வகையறா, ஹாலந்தில் ட்ரூஸ்திராவும் அவரது கட்சியும், டென்மார்க்கில் ஸ்டானிங்கும் அவரது கட்சியும், அமெரிக்காவில் விக்டர்பெர்கரும் இதர 'தாயகத்தின் ஆதரவாளர்களும்' இன்னும் இதுபோல' (25) என்று உலகம் முழுவதும் இருந்த சமூக ஏகாதிபத்தியவாதிகளை பட்டியலிட்டுக் காட்டினார்.

அறுபதாம் ஆண்டுகளில் குருசேவ் திருத்தல் வாதம் இரண்டாவது அகிலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட

சூழ்நிலையில் சமூக ஏகாதிபத்தியமாக வெளிப்பட்டது. இரண்டாவது அகில சந்தர்ப்பவாதிகள், தமது சொந்த நாட்டின் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டதன் மூலம் சமூக ஏகாதிபத்திய மாக வெளிப்பட்டனர். ஆனால் குருசேவ் திருத்தல்வாத கும்பல் லெனினாலும், ஸ்டாலினாலும் கட்டி வளர்க்கப் பட்ட கம்யூனிஸ்ட் கட்சியையும், சோவியத் சோசலிச நாட்டையும் கைப்பற்றி அதிகாரத்துக்கு வந்ததன் மூலம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை திருத்தல்வாதக்கட்சி யாகவும், சோசலிச ரசியாவை சமூக ஏகாதிபத்தியமாக வும் மாற்றியமைத்தனர். எவ்வாறாயினும்இரண்டுக்கும் சலுகைபெற்ற 'பிரபு குலமே' வர்க்க அடிப்படை என்ப தும், இரண்டும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், புரட்சிகர நடவடிக்கைகளைக் கைவிட்டு முதலாளிய வர்க்கத்துடன் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு எதிராக கூட்டு சேர்ந்து கொண்டவை என்பதிலும் வேறு படவில்லை. எனவேதான் லெனின் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளையும், மாவோ ரசிய குருசேவ் புரட்டல் வாத கும்பலையும் 'முதலாளிய வர்க்கத்தினர்' என்றும் 'வர்க்கவிரோதிகள்' என்றும் அடையாளம் காட்டினர்.

சோசலிச நாடுகளில் திரிபுவாதம் முதலாளித்துவப் பாதைக்காகப் போராடுகிறது. மீண்டும் முதலாளித் துவத்தை மீட்டெடுக்க முயல்கிறது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் குருசேவ் புரட்டல்வாதத்துக்கு எதிராக போராடிக் கொண்டிருந்த போது உள்நாட்டில் முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிரான போராட்டத்தையும் நடத்திக் கொண்டிருந்த மாவோ கூறினார், 'திரிபுவாதிகள் சோசலிசத்துக்கும் முதலாளித் துவத்துக்கும் இடையிலான வேறுபாட்டை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் முதலாளிவர்க்க சர்வாதி

காரத்துக்கும் இடையிலான வேறுபாட்டை மறுக்கிறார்கள்.' முதலாளித்துவப் பாதையை சோசலிசப்பாதை என்பதாகக்கூறுகிறார்கள்' (26). முதலாளித்துவப்பாதை என்பது சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் கைவிடுவதாகும். கலாச்சாரப் புரட்சியின் போது 'அதிகாரத்திலிருந்து முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் நபர்களே' (27) தாக்குதல் இலக்கு என்று சுட்டிக் காட்டினார். அவர்களை 'எல்லாத்தலைமைப் பதவிகளிலிருந்தும் அகற்றி விட்டுப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் தலைமையைக் கைப்பற்றும்படி' (28) அறைகூவல் விட்டார்.

மேலும் குருசேவ் திருத்தல்வாத கும்பலுக்கெதிரான போராட்டத்தின் போது குட்டி முதலாளித்துவ சூழ்நிலையில் புதிய முதலாளித்துவ மூலகாரணங்கள் இடைவிடாது தாமாகவே உற்பத்தியாவது பற்றியும் "முதலாளிய செல்வாக்கின் விளைவாகவும், குட்டி முதலாளிகளின் பரவலாக இங்கு பயக்கும் சூழ்நிலையின் விளைவாகவும் அரசியல் சீரழிவுவாதிகளும், புதிய முதலாளித்துவ கர்த்தாக்களும் தொழிலாளி அணிகளிலும், அரசு நிர்வாகிகள் மத்தியிலும் தோன்றுவதை' (29) யும் சுட்டிக் காட்டினார்.

கட்சி உறுப்பினர்களில் பலர் தொடர்ந்து புரட்சியை நடத்த விரும்பவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய மாவோ அதற்குக் காரணம் 'அவர்கள் உயர் அதிகாரிகளாக இருக்கிறார்கள்; தமது அதிகார நலன்களை காத்துக் கொள்ள விரும்புகிறார்கள்' (30) என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கட்சியினுள்ளும், பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினுள்ளும் தொடர்ந்து முதலாளிகள் உருவாகி வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு 'அவர்கள் பாட்டாளி வர்க்க

அணிகளுள்ளும், அரசு மற்றும் பிற அமைப்புகளின் அலுவலர்களுள்ளும் முதலாளித்துவ வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்' (31) என சுட்டிக்காட்டினார்.

இன்னொருமுறை அவர் சொன்னார்: ''நீங்கள் சோசலிசப் புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் முதலாளிகள் எங்கிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியவில்லை. அவர்கள் கட்சிக்குள்ளாகவே இருக்கும் வலதுசாரிகள். அவர்கள் அதிகாரத்தில் இருந்து கொண்டு முதலாளித்துவப் பாதையை மேற்கொண்டிருக்கிறார்கள்'' (32)

மாவோவின் மறைவுக்குப் பின் படிப்படியாக அதிகாரத்துக்கு வந்த முதலாளித்துவப் பாதையாளரான திருத்தல்வாதி டெங் கும்பல், உள்நாட்டில் வர்க்கப் போராட்டம் இனியும் பிரதானமானது அல்ல என்றும் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது பற்றிய கோட்பாடு தவறானது' (33) என்றும் அறிவித்திருப்பதன் மூலம் உள்நாட்டில் வர்க்கப் போராட்டத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் கைவிட்டிருக்கிறது. மேலும் மாவோவின் 'மூன்றுலகக் கோட்பாட்டை' மேலாதிக்கவல்லரசுகளுக்கு எதிரான யுத்ததந்திர ரீதியான அய்க்கிய முன்னணியாக விரித்துரைத்திருப்பதன் மூலம் (34) சர்வதேசப் புரட்சியைக் கைவிட்டிருக்கிறது. உலகெங்கும்உள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டிருக்கும் அனைத்து திருத்தல்வாத, சீர்திருத்தவாத கட்சிகளையும் (யூரோ கம்யூனிஸ்ட் கட்சி, போலந்து, ருமேனியா, செக்கஸ்லோவேகியா கட்சிகள் உட்பட) தனது நட்பு, சகோதர முகாமில் சேர்த்துக் கொண்டிருக்கிறது. உலக முழுவதும் உண்மையான புரட்சிகர இயக்கங்கள், கட்சிகளுடன் தனது உறவைத்துண்டித்துக் கொண்டிருக்கிறது. இக்

கும்பல் சீனத்தில் இருக்கும் "புதிய முதலாளித்துவ வர்க் கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.'

இவ்வாறு பேபியன் கழகத்திலிருந்து காவுட்ஸ்கி, பிளக்கானவ் போன்ற இரண்டாவது அகில சந்தர்ப்ப வாதிகள் மற்றும் குருசேவ், லியூ—டெங் திரிபுவாதிகள் வரை சாரம்சத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் தையும்—வர்க்கப் போராட்டத்தையும் கைவிடுவதன் மூலம் முதலாளிவர்க்கத்துடன் அணி சேர்ந்து கொள்ளும் தொழிலாளி வர்க்கத்துள் இருக்கும் 'முதலாளி வர்க்கமே' என்பதில் எந்த வேறுபாடும் இல்லை.

அன்று ஏங்கல்ஸ் சலுகை படைத்த சிறுபான்மை யோரான பழைய தொழிற்சங்கங்களது 'முதலாளித்துவ தொழிற் கட்சியையும்' மெய்யான பெரும்பான்மையோ ரான அடிமட்டத்து பெருந்திரளையும் வேறுபடுத்தி, 'முதலாளித்துவ உயர்குல மனப்பான்மையால்' நச்சுப் படுத்தப்படாத பின்னவர்களுக்கே வேண்டுகோள் விடுத் தார்(35). "ஒரே கட்சியில் புரட்சிகர பாட்டாளி வர்க்கத் தின் முன்னணிப் படையும் தொழிலாளி வர்க்கத்தின் குட்டி முதலாளித்துவ பிரபு குல பிரிவும்—அதாவது 'சொந்த' தேசத்தின் 'பேரரசு' அந்தஸ்த்தால் கிடைக் கும் தனியுரிமைகளில் சில கவளங்களைப் பெற்றுக் கொள்ளும் இந்த பிரபு குலமும்—ஒருங்கே இருப்பதற்கு ஏகாதிபத்திய சகாப்தம் அனுமதிப்பதன்று' (36) என்று முடிவு செய்த லெனின் ('சந்தர்ப்பவாதமே நமது பிரதான எதிரி' என்றும் "சந்தர்ப்பவாதத்தோடு தீர்மானகரமாக முறித்துக் கொள்ளாமல் அதன் தவிர்க்க முடியாத படு தோல்வியை திரளான மக்களுக்கு விளக்கிக் கூறாமல் இன்றைய கட்டத்தில் சோசலிசத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது, தொழிலாளர்களின் உண்மை யான சர்வதேசியத்தை, ஒற்றுமையை அடையமுடியாது) (37) என்றும் பிரகடனப்படுத்தினார். சர்வதேச ரீதியில்

குருசேவ் திருத்தல்வாத துரோகிகளைத் தூக்கி எறிந்த மாவோ உலகம் முழுவதும் இருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும், சோவியத் மக்களுக்கும் அறைகூவல் விடுத்தார். உள் நாட்டில் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் கட்சிக்குள்ளிருந்த அதிகாரத்தில் இருந்த 'முதலாளித்துவ பாதையாளர்களைத் தூக்கியெறிய' போராடினார். இங்கெல்லாம் தொழிலாளிவர்க்க அமைப்புகளின், அவற்றின் உறுப்பினர்களின் பெரும்பான்மை அல்லது சிறுபான்மை பற்றி இவர்கள்கவலைப்படவில்லை. மாறாக 'அதன் கொள்கை பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறதா, அவர்களுக்கு சேவை புரிகிறதா, அதாவது அவர்களை முதலாளித்துவத்திலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறதா, அல்லது சிறுபான்மையினரின் நலன்களையும் முதலாளித்துவத்துடனான அதன் இணைக்கத்தையும் பிரதிபலிக்கிறதா' (38) என்பதைப் பற்றி மட்டுமே கருத்தில் கொண்டார்கள். என்றுமே—இன்றும் கூட கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விசயம் தான் இது. ●

# 2. ஏகாதிபத்தியமும் யுத்தமும்

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் தனியொரு கட்டம்; உச்ச கட்டம்; ஏகபோகக் கட்டம் ஆகும். இதன் காலனியாதிக்கப் பண்பு இதற்கு முந்திய முதலாளித்துவம் மற்றும் அதற்கும் முந்திய சமூக அமைப்புகளின் காலனியாதிக்கப் பண்புகளிலிருந்து குணாம்ச ரீதியிலேயே வேறுபாடு கொண்டதாகும். இதன் தனி இயல்பு மூலதன ஏற்றுமதியாகும். மூலப் பொருட்கள் கிடைக்கும் இடம் உலகின் எந்த மூலையில் இருப்பினும் அங்கெல்லாம் மூலதனத்தை ஏற்றுமதி செய்ய ஏகாதிபத்தியம் பேயாய் அலைகிறது. பின் தங்கிய நாடுகளில் மட்டுமல்ல அதன் மூலதன ஏற்றுமதிக்கு முன்னேறிய நாடுகளையும் வேட்டையாடிச் சேர்த்துக் கொள்கிறது. மூலதன ஏற்றுமதி மூலம் அந்நாடுகளை உத்திரவாதமாக கொள்ளையிடவும், சுரண்டவும் அவற்றைக் காலனிகளாக யும், செல்வாக்கு மண்டலங்களாகவும் மாற்றி அமைக்கிறது.

லெனின் கூறினார், ''நிதி மூலதனமானது காலனியாதிக்கக் கொள்கைக்குரிய மிகப்பல 'பழைய' நோக்கங்களுடன்கூட மூலப் பொருட்களின் ஆதாரங்களுக்கும், மூலதன ஏற்றுமதிக்கும், செல்வாக்கு மண்டலங்களுக்குமான போராட்டத்தையும், அதாவது லாபகரமான பேரங்கள், சலுகைகள், ஏகபோக லாபங்கள் முதலானவற்றுக்குரிய மண்டலங்களுக்கும், பொதுவாகப்பொருளாதார பிரதேசங்களுக்குமான போராட்டத்தையும் சேர்த்திருக்கிறது'' (1).

இவ்வாறு ஏகாதிபத்தியங்களுக்கிடையில் காலனிகளுக்காகவும், செல்வாக்கு மண்டலங்களுக்காகவும் நடக்

கும் போட்டியில் உலகம் முழுவதும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஏகாதிபத்தியங்களுக்குள் பங்கிடப்படுகின்றன. ஏகாதிபத்தியங்கள் தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் விரிவுபடுத்த இனிமேல் தமக்குள் ஒருவரை ஒருவர் வீழ்த்துவதைத் தவிர வேறு வழியில்லை எனும்போது தமது இராணுவ பல நிலைமைகளால், யுத்தங்களால் அவற்றின் பலத்திற்கேற்ப உலகை மறுபங்கீடு செய்து கொள்கின்றன. முதலாளித்துவம் ஏகபோகமாக உருவாவதற்கு முன்பு உலகில் 25கோடிமக்கள் மட்டுமே காலனியாதிக்கத்தின் கீழ் இருந்தனர். ஏகாதிபத்தியம் உருவான பின் முதல் உலக யுத்தத்திற்கு சற்று முன்னதாக 60கோடி மக்களும், யுத்தத்திற்குப் பின் ஏறக்குறைய 125 கோடி மக்களும் காலனியாதிக்கத்தின் கீழ் வந்தனர். என்ற உண்மையும், காலனிகளையும் செல்வாக்கு மண்டலங்களையும் மறு பங்கீடு செய்து கொள்வதற்காக மனித குலம் இதற்கு முன் கண்டிராத நாசம் விளைவிக்கும் இரு பெரும் உலக யுத்தங்களை ஏகாதிபத்தியங்கள் கட்டவிழ்த்து விட்டன என்ற உண்மையும் ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்க வெறித்தனத்தை தெளிவாக எடுத்தியம்புவனவாகும்.

ஏகாதிபத்தியம் என்பது இச்சகாப்தத்தில் ஆக்கிரமிப்புப் போர்களை முன்னனுமானிக்கும் காரணியாக இருக்கிறது. எனவேதான் லெனின் சொன்னார், ''இத்தகைய பொருளாதார அமைப்பின் கீழ் உற்பத்தி சாதனங்களில் தனியார் உடமை நீடிக்கும் வரை ஏகாதிபத்திய யுத்தங்கள் கண்டிப்பாக தவிர்க்க முடியாதவை'' (2).

அதே நேரத்தில் ஏகாதிபத்தியம் அதற்கேயுரிய எதிர்ப்பண்புகளையும் உருவாக்கி இருக்கிறது. ஏகாதிபத்தியம் என்பது லெனின் குறிப்பிட்டது போல 'அழுகத் தொடங்கிவிட்ட' 'அந்திமகால' முதலாளித்

துவம்; ஏகபோக முதலாளித்துவம். அது உழைப்பை மகத்தான அளவுக்கு சமூகமயப்படுத்தியிருப்பதால் சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான பொருளாயதத் தேவைகளை நிறைவு செய்திருக்கும் முதலாளித்துவம். எனவேதான் ஏகாதிபத்தியம் என்பது ''சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான கட்டத்தின் துவக்கத்தைக் குறிக்கிறது'' (3).

ஏகாதிபத்தியம் என்பது தங்கு தடையற்ற போட்டி நிலவிய முதலாளித்துவத்துக்குப் பதில் இந்த இடத்தில் ஏகபோக டிரஸ்டுகள், சிண்டிகேட்டுகள், வங்கிகள், நிதி மூலதன குறுங்குழுக்களின் சர்வ வல்லமையை இடம் பெறச் செய்கிறது என்று அர்த்தமாகும். இது தொழிலாளி வர்க்கத்தை என்றுமில்லாத அளவுக்கு சுரண்டவும் ஒடுக்கவும் சக்தி பெற்றதாகிறது. இது ஏகபோகங்களை எதிர்த்து முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் புரட்சிகர போராட்டங்களுக்கு-உள்நாட்டுப் புரட்சி யுத்தத்திற்கு-தயாராகும்படி செய்கிறது.

அதே நேரத்தில் ஏகாதிபத்தியத்தின் நிதி மூலதன ஏற்றுமதி பின்தங்கிய நாடுகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியையும், அதனால் தொழிலாளி வர்க்க வளர்ச்சியையும் அதிகப்படுத்துகிறது. இதன் மூலம் அது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தையும் விரைவுபடுத்துகிறது.

எனவே முதலாளிய நாடுகளின் தொழிலாளி வர்க்கப் போராட்டமும் பின்தங்கிய காலனிய நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டமும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரே முனையில் ஒன்றுபடுகின்றன, இது உலக சோஷலிச புரட்சி இயக்கத்தை மேலும் துரிதப்படுத்துவதாகும்.

எனவே இந்த சகாப்தத்தில் 'தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்த போட்டம், முதலாளிவர்க்கத்தை

எதிர்த்த பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம், இதன் பின்விளைவாக முதலில் புரட்சிகரமான தேசிய கலகங்கள் மற்றும் போர்கள், இரண்டாவதாக பாட்டாளி வர்க்கப் போர்கள் மற்றும் முதலாளித் துவத்தை எதிர்த்த கலகங்கள், மூன்றாவதாக இருவகையிலுமான புரட்சிகர போர்களின் இணைப்பு ஆகியவற்றின் சாத்தியப்பாடு மற்றும் தவிர்க்கவியலாத தன்மை' (4) குறித்து லெனின் வலியுறுத்தினார்.

இவ்வாறு ஏகாதிபத்தியத்தால் உருவாகும் ஆக்கிரமிப்பு யுத்தங்களும், பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட தேசங்களில் உருவாகும் புரட்சிகர யுத்தங்களும், இச்சகாப்தம் - ஏகாதிபத்தியமும் சோசலிசப் புரட்சியுமான சகாப்தம் - முழுமையிலும் அதாவது ஏகாதிபத்தியம் முற்றாக ஒழிக்கப்படும் வரையிலும் தவிர்க்க முடியாதவையாகும்.

ஒரு நாட்டில் அல்லது சிலபல நாடுகளில் முதலாளித்துவ வர்க்கம் வீழ்ந்தப்படுவது இத்தகைய போர்களுக்கான சாத்தியப்பாடுகளை நீக்கி விடுவதில்லை. லெனின் கூறியதுபோல ''ஒரு நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தை மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி, இறுதியாக முறியடித்து உடமை நீக்கம் செய்தபிறகு மட்டுமே போர்கள் சாத்தியமற்றதாகும்'' (5).

எவ்வாறாயினும் புரட்சிகர போர்களாயினும் சரி, ஏகாதிபத்தியங்களின் யுத்தமாயினும் சரி இரண்டுமே ஏகாதிபத்தியங்களை பலவீனப் படுத்துகின்றவையும், புரட்சியை மேலும் முன்னுக்கு எடுத்துச் செல்கின்றவையுமேயாகும். புரட்சிகர யுத்தங்கள் நேரடியாக ஏகாதிபத்தியங்களை வீழ்த்தி புரட்சிகர வர்க்கங்களின் பட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்துகிறது. ஏகாதிபத்திய யுத்தங்கள் அவற்றுக்கிடையிலான

மோதலில் ஒன்றையொன்று அடித்து நொறுக்குவதன் மூலம் ஏகாதிபத்தியத்தையே பலவீனப்படுத்தி 'பாட்டாளிவர்க்கப் புரட்சியை துரிதப்படுத்தக் கூடியதாகவும்தவிர்க்க முடியாதஒன்றாக ஆக்கக்கூடியதாகவும் இருக்கிறது' (6). முதல் இரு உலக யுத்தங்களும் இந்த உண்மையை நிரூபிக்கின்றன. எனவேதான், யுத்தத்தின் தீமைகளை மட்டும் பார்ப்பது, அதன் நன்மைகளைப் பார்க்காமல் இருப்பது ஒருபக்கப் பார்வையாகும்' (7) என்றும் மூன்றாவது உலக யுத்தத்தின் சாத்தியப்பாடு குறித்து குறிப்பிடும்போது ''இரண்டு சாத்தியப்பாடுகள் மட்டுமே இருக்கிறது. ஒன்று புரட்சி யுத்தத்தைத் தடுக்கும்; அல்லது யுத்தம் புரட்சியை முன்னுந்தித் தள்ளும்'' என்றும் மாவோ கூறினார்.

ஏகாதிபத்தியங்கள் இருக்கும் வரை - இந்த சகாப்தம் முழுவதும் (ஏகாதிபத்தியமும், சோசலிசப் புரட்சியுமான சகாப்தம்) - திருத்தி அமைக்க முடியாத மேற்கண்ட லெனினிய கோட்பாட்டை தனது ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக திருத்தி அமைத்திருக்கிறது குருசேவ் புரட்டல்வாத துரோகக் கும்பல். ●

# 3. யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினையில் குருச்சேவ் திருத்தல்வாதம்

மார்க்சியத்தின் குரல்வளையை நெறித்துக் கொன்று விட்டு ஏழேழு உலகங்களுக்கும் அதற்கு அப்பாலும் கேட்கும்படியாக ருசிய புரட்டல்வாத துரோகிகள் உலக சமாதானம் பற்றி குரல் எழுப்பி வருகிறார்கள்.

"உலக சோசலிசத்தின் சக்தி கண்டுள்ள வளர்ச்சியானது சர்வதேச உறவுகள் முழுவதும் மிகமிக ஆழ்ந்த புரட்சிகரமான நிலை மாற்றங்கள் உண்டாகியிருப்பதில் கொண்டுபோய் விட்டிருக்கிறது; எல்லா மக்கள் சமூகங்களின் நலனையும் முன்னிட்டு யுத்தம் - சமாதானம் பற்றிய பிரச்சினைகளை (லெனினிய கோட்பாடுகளை என்று இருந்திருக்க வேண்டும்- ஆ.ர்) திருத்தி வரையறுப்பதை சாத்தியமாக்கி உள்ளது'' (1) என்று இருபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே ரசிய புரட்டல்வாத துரோகிகள் பிரகடனப்படுத்தியிருப்பதன் மூலம் 'இத்தகைய பொருளாதார அமைப்பின் கீழ் உற்பத்தி சாதனங்களில் தனி உடைமை நீடிக்கும் வரை ஏகாதிபத்திய யுத்தங்கள் கண்டிப்பாக தவிர்க்க முடியாதவை' (2) என்ற லெனின் கூற்றை மிகச் சாதாரணமாக தூக்கி எறிந்து விட்டார்கள்.

'உலக அரங்கில் சக்திகளின் பலாபல நிலை சோசலிசத்துக்கும், சமாதானத்துக்கும் சாதகமாகவும், ஏகாதிபத்தியத்திற்கும், ஆக்கிரமிப்புக்கும் பாதகமாகவும், தீவிரமாக மாறியிருக்கிறது; உலக அரசியலிலே ஏகாதி

பத்தியம் தான்தோன்றித்தனமாக நடக்கும் போக்கு கடிவாளமிடப்படுவதற்குரிய சாத்தியப்பாடுகளை சோசலிச சக்திகள் மேலும் மேலும் பெற்று வருகின்றன' 'இன்று ஏகாதிபத்தியத்தின் கொள்கை உலக உறவுகளில் ஆதிக்கம் செலுத்தவில்லை', 'ஒரு புதிய உலக யுத்தத்தை தொடுத்தால் அது ஏகாதிபத்தியத்தின் தற்கொலையில் தான் போய் முடியும் அளவுக்கு சோசலிச நாடுகளின் இராணுவம் இருக்கிறது' (3) என்ற காரணங்கள் கூறி 'உலக யுத்தத்தைத் தடுக்க முடியும்', "சோசலிசம் முழு வெற்றியடையும் முன்பாகவே உலகத்தின் ஒரு பகுதியில் முதலாளித்துவம் நீடித்து வருகையிலேயே சமுதாய வாழ்விலிருந்து உலக யுத்தத்தை விலக்குவதற்கான சாத்தியப்பாடு எழுந்து தீரும்' (4) என்கிறது ரசிய புரட்டல் வாதம்.

உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியும். ஆனால் அதற்கு ஒரே வழி உலக மண்ணிலிருந்து மூலதனத்தின் ஆதிக்கத்தை முற்றாக ஒழிப்பதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதுமேயாகும். லெனின் உலக யுத்தத்தையும் அதன் பயங்கரத்தையும் தவிர்ப்பது பற்றி கூறும்போது "'மூலதனத்தின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தாமல் அரசு அதிகாரத்தை இன்னொரு வர்க்கமான பாட்டாளி வர்க்கத்திற்கு மாற்றி அளிக்காமல் ஏகாதிபத்தியப் போரிலிருந்து வெளியேறுவதும், ஜனநாயகமான பலாத்காரமில்லாத சமாதானத்தை அடைவதும் சாத்தியம் இல்லை''(5) எனவே "'புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் எனது கடமை ஓர் உலகக் கொலைக் காண்டத்தின் பயங்கரத்திலிருந்து மீளுவதற்கு ஒரே வழியான உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு தயார் செய்வதேயாகும்'' (6) என்றார்.

இதுதான் உலக யுத்தத்தைப் தவிர்ப்பது பற்றிய லெனினிய பார்வை. இதைத்தான் "உலக சோசலிச

சக்தி கண்டுள்ள வளர்ச்சி'யைக் காரணம் கூறி குருசேவ் புரட்டல்வாதிகள் 'திருத்தி' இருக்கிறார்கள். உலகம் முழுவதுமான பாட்டாளி வர்க்கப்புரட்சி இல்லாமலேயே சமாதான இயக்கங்கள் மூலமாகவே உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியும் என்ற திருத்தல்வாதக் கோட்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். புரட்சிக்கான தயாரிப்பைக் கைவிட்டு 'உலக சமாதானம் மற்றும் படைபலக் குறைப்பு' பற்றி விண்ணை முட்டும் ஒலி எழுப்பி வருகிறார்கள்.

இவையனைத்தும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓடுகாலியாக சீரழிந்த இரண்டாம் அகில 'மையவாத' சந்தர்ப்பவாதியான காவுட்ஸ்கி எழுப்பிய வாதங்களின் மறு மதிப்புக்களேயாகும். காவுட்ஸ்கி, தனது அதீத ஏகாதிபத்தியம் (Super Imperialism) என்ற கோட்பாட்டின் மூலம் அன்று ஏகாதிபத்தியத்தை புனிதப்படுத்தினார். 'தேசிய நிதி முதலாளிகளுக்கு இடையிலான போட்டிகள், சர்வதேச நிதி மூலதனத்தால் உலகம் கூட்டாக சுரண்டப்படுவது என்ற செயலால் அகற்றப்படவிருக்கிறது' என்றும் 'அந்த ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் கட்டுக் கோப்புக்குள்ளேயே புதிய நம்பிக்கைகளுக்கும், வாய்ப்பு வளங்களுக்குமான ஒரு சகாப்தத்தை தோற்றுவிக்கமுடியும்' என்றும் போதித்ததன் மூலம் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் தனியொரு கட்டம் என்பதையும் முதலாளித்துவத்தின் இயல்பான போட்டி, அராஜக உற்பத்தி போன்றவற்றையும் மறுத்தார். அமைதியான வளர்ச்சி, வளமான எதிர்காலம் ஏகாதிபத்திய அமைப்பில் சாத்தியமாகலாம் என்பதால் ஏகாதிபத்தியங்கள் காலனிகளைக் கைப்பற்றிட 'ஆவேசம் கொள்வது நல்லதல்ல' இதற்காக யுத்தத்தில் இறங்குவது நிச்சயமாக நல்லதல்ல என்றும் 'பகைமைகள் கடுமையாகுமாயின் தீய விளைவுகள் உண்டாகும்' என்றும்

'சமாதான வழியிலேயே முதலாளித்துவத்தை வளர்த்துச் செல்வதுதான் நல்லது'. 'காலனிகள் இல்லாத, ஏனையோரை சூறையாடவும் யுத்தங்களும், ஆயுதங்களும் இல்லாத முதலாளித்துவம் சாத்தியமே' என்றும் போதித்தார் காவுட்ஸ்கி. 'குறைந்த அளவிலான துன்பதுயரமும், இழப்பும் உண்டாக்கும் ஒரு புதிய கட்டத்துக்கு உரிய போராட்ட வடிவங்களுக்கான சாத்தியப்பாட்டை சித்தரித்ததைக் குறிப்பிட்டு பிரான்ஸ் மேரிங்கும், ரோசா லுக்சம்பர்க்கும், காவுட்ஸ்கியை 'தெருவில் அலையும் விபச்சாரி' என பொருத்தமாகக் கூறியதை சுட்டிக் காட்டிய (7) லெனின், காவுட்ஸ்கியின் வாதங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினார்.

ஏகாதிபத்தியங்கள் தமது பலத்திற்கேற்ப உலகைத் தமக்குள் காலனிகளாகவும், செல்வாக்கு மண்டலங்களாகவும் பங்கீடு செய்து கொள்கின்றன. "அவற்றின் பலத்தைச் சோதிக்க அவற்றுக்கு யுத்தத்தைத் தவிர வேறு வழி இல்லை' (8) எனவே ஒவ்வொரு ஏகாதிபத்தியமும் கூடுதல் காலனிகளையும், செல்வாக்கு மண்டலங்களையும் மறு பங்கீட்டின் மூலம் பெறுவதற்கான கூடுதல் பலத்தைப் பெறுவதற்கு மூர்க்கத்தனமான இராணுவ பல சேகரிப்பில் இறங்குகின்றன என்பதை நிரூபித்த லெனின், படைபல குறைப்பு கோரிக்கைப் பற்றிக் கூறினார்: "'பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக ஆயுத பாணியான முதலாளித்துவ வர்க்கம் நிலவுவது நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் ஆகப் பெரிதான அடிப்படையான, முதன்மையான மெய்விவரங்களில் ஒன்று. இந்த மெய்விவரம் காரணமாக புரட்சிகர சமூக ஜனநாயக வாதிகள் படைக்குறைப்பைக் "கோருவதற்குத்' தூண்டப்படுகிறார்கள். இது வர்க்கப் போராட்டத்தை முற்றாகக் கைவிடுவதாகும், புரட்சி பற்றிய சிந்தனை முழுவதையும் துறந்துவிடுவதற்குச் சமமாகும். நமது முழக்கம் முதலாளி வர்க்கத்தை முறியடிக்கவும்

உடமை நீக்கம் செய்யவும், நிராதரவாக்கவும் பாட்டாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குவது என்பதாக இருக்க வேண்டும். ஒரு புரட்சிகர வர்க்கத்துக்குச் சாத்தியமான ஒரே போர்த்தந்திரம் இதுவே. இது முதலாளித்துவ ராணுவ வாதத்தின் புறநிலை வளர்ச்சி முழுமையாலும் ஆணையிடப்படும் அதிலிருந்து தர்க்க ரீதியாகத் தொடரும் போர்த்தந்திரமாகும். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை நிராயுதபாணியாக்கிய பின்பு மட்டுமே அது தனது உலக வரலாற்று லட்சியப் பணிகளுக்கு துரோகம் செய்யாமல் எல்லாப் படைக் கலன்களையும் ஒட்டை உடைசலில் தள்ள முடியும். இந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்ட பிறகு மட்டுமே பாட்டாளி வர்க்கம் இதை உறுதியாகச் செய்யும் நிச்சயமாக அதற்கு முன்னதாக செய்யாது''. (9)

படைபல குறைப்பு பற்றி தொடர்ந்து காவுட்ஸ்கியவாதிகளைப்போலவே ஊளையிட்டுவரும் குருச்சேவ் புரட்டல்வாதக் கும்பல் தொடர்ந்து யுத்தத்தினால் வரும் 'தீய விளைவுகள்' பற்றி பிதற்றி வருகிறது. 'யுத்தத்தினால் வரும் அழிவு' 'அணுகுண்டுகள் விளைவிக்கவிருக்கும் நாசம்' ஆகியவற்றிலிருந்து மனித குலத்தை விடுவிக்க—யுத்தத்தைத் தவிர்க்க—என்ன விலையும் கொடுக்கப்பட வேண்டும் என்கிறது. உண்மையில் அந்த விலை உலகப் புரட்சிகர இயக்கத்துக்கு துரோகமிழைப்பது என்பது தவிர வேறொன்றுமில்லை. உலக யுத்தத்தையும் 'அணுகுண்டு பேரழிவையும்' தவிர்ப்பதற்கு உள்ள ஒரே வழி அதற்குக காரணமான ஏகாதிபத்தியங்களையும், முதலாளித்துவ வர்க்கத்தையும் பூண்டோடு ஒழித்துக்கட்டும் புரட்சிப் போர்களை முன்னெடுத்து செல்லவும் ஆதரிக்கவும் வேண்டும் என்பதற்குப் பதில் அதையே விலையாகத் தருவதன்மூலம் இந்தப் புரட்டல் வாதிகள் சமாதானவழியில் யுத்தத்தைத் தவிர்க்கப் போகிறார்களாம்.

அவர்கள் கூறுகிறார்கள்: 'முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி சக்திகள் நடத்தும் போராட்டமும், தேச விடுதலை இயக்கமும் ஒரு உலக அணுகுண்டு யுத்தத்தை தடுப்பதற்கான போராட்டத்துடன் சம்மந்தப்படுத்தி மட்டுமே கவனிக்கப்பட முடியும்'' (10). உண்மையில் இதன் மூலம் அவர்கள் போதிப்பதெல்லாம் உலகப் பாட்டாளி வர்க்கமும், புரட்சிகர சக்திகளும் நிராயுதபாணிகளாக இருக்க வேண்டும், புரட்சிகர செயலில் ஈடுபடாதிருக்க வேண்டும் என்பது தான். இது பற்றி லெனின் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் காவுட்ஸ்கியவாதிகளுக்கு சொன்னது ரசியப் புரட்டல்வாதிகளுக்கும் பொருந்தும். அவர் கூறினார்: ''புரட்சிகர செயல் மேற்கொள்ளாதிருக்கும்படி அறிவுறுத்தி பாட்டாளி வர்க்கத்தை இணங்கச் செய்வது அவ்வர்க்கத்துக்கு இழைக்கப்படும் அப்பட்டமான துரோகமேயாகும். பாட்டாளிவர்க்கப் புரட்சிகர செயல் இல்லையேல் எல்லா வாக்குறுதிகளும் சிறப்பான எல்லா வாய்ப்புகளும்வெறும்கானல் நீரே அன்றி வேறல்ல'' (11).

ஏகாதிபத்தியங்கள் இருக்கும்போதே ஏகாதிபத்திய யுத்தங்களைத் தவிர்க்க முடியும் என்பதற்கு ரசியப் புரட்டல்வாதிகள் கூறும் காரணம் (அ) ஏகாதிபத்தியங்களுக்குக் கடிவாளம் இடுகின்ற அளவுக்கு சோசலிச நாடுகள் பலம் பெற்றிருக்கின்றன. (ஆ) சோசலிச நாடுகளின் ராணுவ பலத்தின் காரணமாக ஏகாதிபத்தியங்கள் யுத்தம் தொடுக்குமானால் அதன் தற்கொலையில் தான் முடியும் என்பதை உணர்ந்திருக்கின்றன என்பதாகும். இவ்விரு காரணங்களுமே எந்த அளவுக்கு அபத்தமானவை என்பதை சிறிது பரிசீலித்தாலே புரிந்து கொள்ள முடியும்.

ஏகாதிபத்திய யுத்தம் என்பது ஏகாதிபத்திய கொள்கையின் தொடர்ச்சியாகும். அதன் பொருள் ஏகாதிபத்தியங்கள் காலனிகளுக்காகவும் செல்வாக்கு மண்டலங்

களுக்காகவும் வெறிபிடித்து அலைவதன் தொடர்ச்சி யாகவே உலக யுத்தம் வெடிக்கிறது என்பதாகும். சோசலிச முகாம் பலமடைந்திருப்பது ஏகாதிபத்தியங் களின் காலனிய, செல்வாக்கு மண்டலத் தேவைகளை அகற்றிவிடவோ குறைத்து விடவோ முடியாது. மாறாக சோசலிச நாடுகளின் உதயம் ஏகாதிபத்திய சந்தைகளை சுருக்கிவிடுவதால் அவற்றின் தேவை அதிகரிக்கவே செய்யும். இதன் விளைவு வெறிகொண்ட போர்களுக்கு வாய்ப்புகள் கூடுகின்றனவே தவிர குறைவதில்லை. எனவே தான் 'யுத்தங்களை ஒழிக்க ஏகாதிபத்தியங்களை ஒழிப்பது அவசியம்' (12) என்றார் ஸ்டாலின்.

இவர்கள் வைக்கும் மற்றொரு வாதம் சோசலிச நாடுகளின் ராணுவ பலம் பற்றியது.. சோசலிச நாடு களின் ராணுவபலம் ஏகாதிபத்திய நாடுகள் யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டால் அது தற்கொலை செய்து கொள் ளும் விளைவையே உண்டாக்கும் என்பதால் ஏகாதிபத்தி யத்தின் யுத்தக் கொள்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருப் பதாகக் கூறிகின்றது. உண்மை என்னவெனில் உலகில் முதலில் சோசலிச நாடு தோன்றுவதற்கு முன்பாக அல்லது அது இவர்கள் கூறும் பலம் பெறுவதற்கு முன் பாக ஏகாதிபத்தியங்கள் காலனியாதிக்க வேட்டையில் மோதிக் கொண்டபோது கூட அவை சில ஏகாதிபத்தியங் களின் குறிப்பிடத்தக்க அழிவுக்கு இட்டுச் சென்றிருக்கின் றன. இரண்டு உலக யுத்தங்களும் தெரிவிக்கும் உண்மை என்னவெனில் ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியங்கள் முற்றாக அழிவைச் சந்தித்திருக்கின்றன என்பதே. இன்னும் சொன்னால் முதல் உலக யுத்தத்தில் கடும் அழிவைச் சந்தித்த ஏகாதிபத்தியங்களே இரண்டாம் உலகப்போரை யும் தொடக்கின. எனவே ஏகாதிபத்திய யுத்தத்தில் ஈடு படுவது என்பதே ஆதிக்கம் பெறுவது அல்லது தற்கொலை செய்து கொள்வது என்பதுதான் என்ற விசயம் ஏகாதி பத்தியங்களுக்கு தெரியாததல்ல. ஏகாதிபத்தியங்களுக்கு

காலனியாதிக்கமும், செல்வாக்கு மண்டலங்களும் உயிராதாரமான பிரச்சினையாகும். எனவே காலனியாதிக்கத்தை விஸ்தரிக்கவும் கட்டிக்காக்கவுமான யுத்தத்தில் வாழ்வா, சாவா என்பதை தீர்மானிப்பதும் அதன் உயிராதாரமான பிரச்சினையேயாகும். எனவேதான் ஏகாதிபத்திய பொருளாதாரத்தின் கீழ் ஏகாதிபத்திய யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்றார் லெனின். இதை சோசலிச நாடுகளின் இருப்போ, அவை சக்தி வாய்ந்தவையாக இருப்பதோ மாற்றிவிட முடியாது. அவ்வாறு கூறுவதை 'காவுட்ஸ்கியவாத' ஏகாதிபத்திய கற்பனை என்றும் சைவப் புலி பற்றிய கதை என்றும் தான் கூற வேண்டும்.

அடுத்து ரசிய குருசேவ் புரட்டல்வாதிகள் யுத்தத்தின் விளைவாக, அணுகுண்டு ஆயுதத்தின் விளைவாக மனித குலமே, அதன் செல்வாதாரமும், கலாச்சாரமும் நாசத்திற்குள்ளாகும் அபாயம் குறித்து அச்சுறுத்துகிறார்கள். இவற்றைத் தவிர்க்க யுத்தத்தைத் தவிர்த்தேயாக வேண்டும் என அலறுகிறார்கள். சிறு யுத்தங்கள் கூட உலக யுத்தத்திற்கு வழிவகுத்து விடலாம் என்று கூறி புரட்சிகர யுத்தங்களை எதிர்க்கிறார்கள்.

யுத்தத்தையும் அதனால் ஏற்படக்கூடிய நாசகர விளைவுகளையும் தவிர்க்க வேண்டும் என்று புலம்புவதினாலோ, கூச்சலிடுவதினாலோ இவற்றைத் தவிர்த்துவிட முடியாது; அல்லது வெறும் அமைதி இயக்கங்களினாலோ, படைக்கல குறைப்பு பற்றிய பிரமைகளைப் பரப்புவதினாலோ தவிர்த்து விடமுடியாது; மாறாக புரட்சிகர யுத்தங்களை விரைவுபடுத்துவதன் மூலம் மட்டுமே, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதினால் மட்டுமே தவிர்க்கக் கூடியதாகும்- நிச்சயமாக எல்லா யுத்தங்களையும் எதிர்ப்பதினால் அல்ல. புரட்சிகர யுத்தங்களை எதிர்ப்பது ஏகாதிபத்திய

யுத்தங்களுக்கு பீரங்கித் தீனி போடுவதாகவே இருக்கும். எனவேதான் ஓர் உலகக் கொலைக் காண்டத்தின் பயங்கரத்திலிருந்து மீளுவதற்கு ஒரே வழி உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தயார் செய்வதே என லெனின் கூறினார்.

ரசிய குருசேவ் புரட்டல் வாதிகள் ஏகாதிபத்தியம் இருக்கும்போதே ஏகாதிபத்தியப் போர் தவிர்க்கப்பட முடியும் என்றுகூறுவதன் மூலம் 'ஏகாதிபத்தியம் என்பது உலகைப் பங்கு போட்டுக் கொள்ள மற்றும் மறு பங்கு போட்டுக் கொள்ள மகா வல்லரசுகள் நடத்தும் மூர்க்கத்தனமான போராட்டமாகும்' (13), 'வர்க்கங்கள் ஒழிக்கப்படாமல், சோசலிசம் உருவாக்கப்படாமல் யுத்தங்களை ஒழிக்க முடியாது' (14) என்ற லெனினிய உண்மைகளை மறுதலிக்கிறார்கள்.

யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு சமாதான இயக்கத்தையும், படைக்கல குறைப்பையும் முன்வைத்து பரவலான சிறு நாடுகளின் ஆதரவை வென்றெடுக்கும் முயற்சியை மேற்கொள்கிறார்கள் புரட்டல்வாதிகள். இதன் மூலம் "புரட்சியின் எல்லா ஸ்தூலமான பிரச்சினைகளையும் தட்டிக் கழிக்கிறார்கள்' (15). படைக்கலக் குறைப்பு பற்றிய கோரிக்கை பல சிறிய நாடுகளின் ஆதரவைப் பெறுகிறது என்பது உண்மையே. விசயம் என்னவெனில் "படைக்குறைப்பு என்ற கோரிக்கை ஒருசில சிறிய நாடுகளில் விதிவிலக்காக நிலவிவரும் அலாதியான அமைதியான நிலைமைகளில் இருந்தே தோன்றுகிறது. இந்தச் சிறிய நாடுகள் நீண்ட காலம் போர், இரத்தம் சிந்தல் என்ற உலகப் பாதையிலிருந்து விலகி அப்பால் நின்றவை...இந்தச் சிறுநாடுகளைத் தொடர்ந்து தனியே விலகி நிற்கச் செய்ய படைக்கலக் குறைப்பு மூலம் குட்டி முதலாளித்துவ வர்க்கம் விரும்புகிறது. இந்த முயற்சி பிற்போக்கானதும் முற்றிலும் பிரமைகளை அடிப்படை

யாகக் கொண்டதும் ஆகும். ஏனெனில் ஏகாதிபத்தியம் ஏதேனும் ஒருவழியில் சிறிய நாடுகளை உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியலின் மையச் சுழிக்குள் இழுத்து விடுகிறது' (16) எனவேதான் 'புறநிலையிலிருந்து பார்த்தால் படைக்கலக் குறைப்பு என்பது சிறு அரசுகளின் மிகவும் தேசியமான, பிரத்தியேகமாயும் தேசியமான வேலைத் திட்டமாகும். இது நிச்சயம் சர்வதேச புரட்சிகர சமூக ஜனநாயகத்தின் சர்வதேச வேலைத்திட்டம் அல்ல' (17) என்றார் லெனின்.

அமைதி இயக்கங்களின் நோக்கம் அமைதியைக் காப்பதற்கும், அடுத்த உலக யுத்தத்தைத் தடுப்பதற்கும் மக்களை போராடும்படி அணிதிரட்டுவதாக இருக்க முடியும். ஆனால் அது எப்போதும் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி எறிந்துவிட்டு சோசலிச சமுதாய அமைப்பை நிறுவும் கடமையை நிறைவேற்ற முடியாது. அதாவது சமாதான யுத்தங்கள் புரட்சி யுத்தங்களுக்கு மாற்றாக இருக்கமுடியாது. உள்நாட்டுப் புரட்சி யுத்தங்களுடன் அமைதி இயக்கங்கள் இணைக்கப் படும்போது மட்டுமே சமூதாய மாற்றத்துக்கான சாதனங்களாக அவை பணிபுரிய முடியும். அவ்வகையில் முதல் உலக யுத்தத்தின் போது 'ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுக' என்ற அறைகூவல் ஒரு புரட்சிக்கான அறைகூவல் மட்டுமல்ல, அமைதிக்கான அறைகூவலாகவும் இருந்தது ஒரு உதாரணமாகும்.

அமைதி இயக்கங்கள் சில குறிப்பான யுத்தங்களைத் தவிர்க்கப் பயன்படலாம். சமாதான காலத்தை நீடிக்கச் செய்ய—யுத்தத்தை தள்ளிப்போட பயன்படலாம். ஆனால் இவை எல்லாம் முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை ஒழிப்பதற்கு போதுமானவை அல்ல—ஏனெனில் 'எல்லா அமைதி இயக்கங்களின் வெற்றிக்குப் பின்னும்

ஏகாதிபத்தியம் தொடர்ந்து நிலவும். எனவே யுத்தத்தின் தவிர்க்க முடியாத தன்மையும் நீடிக்கும்' (18).

ஆனால் உள்நாட்டுப் புரட்சிப்போர் இல்லாமலேயே 'தொழிலாளி வர்க்க நலன்களுக்காக ஏகபோகங்களை எதிர்த்து நடக்கும் போராட்டத்தை மக்களிடையே சமாதானத்துக்காக நடக்கும் போராட்டத்துடன் நெருக்கமாகப் பிணைக்கும் பாதை' (19) பற்றியும் 'யுத்தங்களைத் தவிர்ப்பது' (20) பற்றியும் போதிக்கிறார்கள் குருசேவ் புரட்டல்வாதிகள். இதன் மூலம் 'ஒடுக்கப் பட்டோருக்கு ஆறுதல்' அளிக்கும் காவுட்ஸ்கிய 'பாதிரி' (21) வேலையை அறுபதாம் ஆண்டுகளிலிருந்து குருசேவ் புரட்டல்வாதிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ●

# 4. ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் 'மூன்று சமாதானக் கோட்பாடுகள்'

இங்கு நாம் 'மூன்று சமாதானக் கோட்பாடுகள்' என்று குறிப்பிடுவது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ் முன்வைத்த 'சமாதான சகவாழ்வு', 'சமாதானப் போட்டி', 'சமாதான மாற்றம்' என்ற மூன்று ஒருங்கிணைந்த கோட்பாடுகளையேயாகும். குருசேவ் திருத்தல்வாதிகள் உலகின் முதல்பெரும் சோசலிச நாடான சோவியத் யூனியனை ஒரு சமூக ஏகாதிபத்தியமாக மாற்ற முன்வைத்த சித்தாந்தஆயுதங்களே இந்த 'மூன்று சமாதானக் கோட்பாடுகள்' ஆகும்.

உலகின் முதல் சோசலிச நாடாக ரசியா 1917 அக்டோபர் புரட்சி மூலம் உருவாகி இருந்த போது அதைச் சுற்றிலும் ஏகாதிபத்தியங்களும் பல்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளும் சூழ்ந்திருந்தன. ஒரு நாட்டில் புரட்சியின் வெற்றிபற்றிய கோட்பாட்டை முன்வைத்து நிறைவேற்றிய லெனின், கூடவே நேர் எதிரான மாறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகள் அக்கம் பக்கமாக நிலவ முடியும் என்பதையும் அங்கீகரித்தார். இதன் பொருள் எல்லையற்ற முறையில் முரண்பட்ட இருசமூக அமைப்புகள் தொடர்ந்து அமைதியான முறையில் நிலவி வரும் என்பதல்ல.

ஏகாதிபத்தியத்தின் தோற்றமும், ரசியாவில் அக்டோபர் சோசலிச புரட்சியின் வெற்றியும் உலக நாடுகளை இரண்டு முகாம்களாகப் பிரித்தன. ஒரு புறம் கையளவேயான ஒடுக்கும் ஏகாதிபத்திய நாடுகளின்

முகாம். மறுபுறம் மிகப் பெருவாரியான மக்கள் வாழும் ஒடுக்கப்படும் காலனி, அரைக்காலனி மற்றும் சார்பு நாடுகளின் முகாம். ஒருபுறம் அழிந்துவரும் உலகமான முதலாளித்துவ நாடுகளின் முகாம். மறுபுறம் எழுந்து வரும் புதிய உலகமான சோசலிச முகாம். இவ்விரு பகை முகாம்களிடையேயான முரண்பாடு உலகு தழுவிய சோசலிசப் புரட்சியின் வெற்றியின் மூலம் மட்டுமே தீர்க்கப்படும் என்று லெனினியம் போதிக்கிறது. எனவே இரு முரண்பட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் என்றென்றைக்குமாக சமாதான சகவாழ்வு நடத்த முடியும் என்ற கருத்துக்கு லெனினியத்தில் கிஞ்சிற்றும் இடம் இல்லை.

மாறாக இந்த சகாப்தம்—ஏகாதிபத்தியமும் சோசலிசப் புரட்சியுமான சகாப்தம்—முழுமையிலும் ஏகாதிபத்தியங்களால் உருவாகும் ஆக்கிரமிப்பு யுத்தங்களும், பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட தேசங்களால் உருவாகும் புரட்சிகர யுத்தங்களும், ஏகாதிபத்தியங்கள் ஒழிக்கப்பட்டு சோசலிசம் உலகு தழுவிய வெற்றியை சாதிக்கும்வரை தவிர்க்கமுடியாததாகும். எனவே இடைக்காலத்தில் - முதலாளித்துவம் உலகம் முழுவதும் முற்றாக ஒழிக்கப்படுவது வரையிலுமான காலக்கட்டத்தில்— வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வு என்பது போர்கள் தோன்றுவதற்கான வாய்ப்பை அகற்றுவதற்கான வழிமுறையாக ஒருபோதும் இருக்க முடியாது.

முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான அரசியல் - பொருளாதார வளர்ச்சி என்ற முதலாளத்துவத்தின் கட்டாய விதியின் காரணமாக ஒரு தனிநாட்டிலோ, ஒரு சில நாடுகளிலோ மட்டும் சோசலிசப் புரட்சி வெற்றிபெறுவது சாத்தியமே என முதன் முதலாகக் கூறிய லெனின் அதை நிரூபித்துக் காட்டினார். அவ்வாறு

முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டிருக்கும் உலகத்தின் தனி ஒரு நாட்டில் சோசலிசப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்போது, அதன் கடமை உலகம் முழுவதும் சோசலிசப் புரட்சிக்காக அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று லெனின் கருதினார். உலகப்புரட்சிகளின் வெற்றி குறித்து கருதி வந்த லெனின், வெற்றிபெற்ற அக்டோபர் சோசலிசப் புரட்சி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியே என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார். அவர் கூறினார்: ''அந்தந்த நாட்டில் வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம், முதலாளிகளின் தனி உடமையைப் பறித்து விட்டுத் தங்களுடைய சொந்த சோசலிச உற்பத்தியை ஒழுங்கமைத்த பின், பாக்கி இருக்கும் முதலாளித்துவ உலகத்துக்கு எதிரே எழுந்து நிற்கும் - மற்ற நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைத் தன்னுடைய இலட்சியங்களின் பால் ஈர்க்கும்- அந்நாடுகளில் முதலாளிகளுக்கு எதிராகப் புரட்சி எழுச்சிகளை கிளப்பி விடும்- தேவைப்பட்டால் சுரண்டும் வர்க்கங்களையும் அவற்றின் அரசுகளையும் எதிர்த்து ஆயுத பலத்தையும் பயன்படுத்தும்'' (1).

உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் புரட்சிகர எழுச்சிகளை கிளப்பி விடுவது மட்டுமல்ல 'ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஒரு சோசலிச அரசு ஒரு புரட்சிகரமான போருக்கு தயார் செய்து நடத்தவும் வேண்டும்' (2) என்றார் லெனின். இது ஒரு சகாப்தகரமான விசயமாகும். முதலாளித்துவ உலகத்துக்குள் அது தன்னைப் பாதுகாத்துக் கொண்டு, அதே நேரத்தில் அது புரட்சிகரமான போருக்கு தயார் செய்யவும், நடத்தவும் வேண்டும். முதலாளித்துவத்தை, சர்வதேச பாட்டாளி வர்க்கத்துடன் இணை சேர்ந்து முற்றாக வீழ்த்தும் 'நிர்ணயகரமான இறுதிப்போரை' (3) நடத்துமுன் அதற்குரிய முழுமையான தயாரிப்பில் ஈடுபட வேண்டும்.

இந்த தயாரிப்பு காலம் என்பது உண்மையில் முரண்பாடான சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு நடத்தும் காலமாகவே இருக்க முடியும்.

எனவே சமாதான சகவாழ்வு என்பது வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தைப் பொருத்தவரை நிர்ணயமான இறுதி யுத்தத்திற்கு தயாரிப்பு செய்து கொள்வதற்கு அவகாசம் எடுத்துக் கொள்வதற்கான கொள்கை வழியேயன்றி வேறல்ல. எனவேதான் லெனின் கூறினார். "நாம் ஒரு புரட்சிகரமான போருக்கு தயார் செய்து கொள்ள வேண்டும்—ஆனால் இப்போது உடனடியாக ஒரு புரட்சிகரமான போரை நடத்துவது சாத்தியமா இல்லையா என்ற கேள்வி, இதற்கு பொருளாதார நிலைகள் அனுமதிருக்கின்றனவா இல்லையா என்ற நோக்கு நிலையில் இருந்தும், ஏற்கனவே தொடங்கிவிட்ட சோசலிசப் புரட்சியின் நலன்களைக் கருதியுமே முற்றாக முடிவு செய்யப்பட வேண்டும்" (4). மீண்டும் கூறினார்: 'இது ஏகாதிபத்தியத்திடம் சரணடைவதற்காக அல்ல, மாறாக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தீவிரமாக நல்ல திறமையோடு போராடுவதற்காக பயிற்சியும், தயாரிப்பும் செய்து கொள்வதற்காக' (5).

லெனின் கூறிய இவை அனைத்தும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின் ஜெர்மனியுடன் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் சமாதானத்தைநிலைநாட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களுக்கு லெனின் அளித்த பதிலும், சமாதான சகவாழ்வு பற்றிய லெனின் கோட்பாட்டின் சாரமும் ஆகும்.

"வெவ்வேறு சமுதாய அமைப்புகள் கொண்ட அரசுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள்

மேலும் மேலும் விரிவாக அங்கீகாரம் பெற்று வருகின்றன'' (6) என்று குருசேவ் திரிபுவாதிகள் கூறுகிறார்கள். உலகில் சோசலிச நாடுகள் நிலவுவதை வேறுவழியின்றி அங்கீகரித்துத் தீர வேண்டிய நிலையில் ஏகாதிபத்தியவாதிகள் கூட சமாதான சகவாழ்வை அங்கீரிக்கிறார்கள் என்பதில் அய்யமில்லை. இதன் பொருள் ஏகாதிபத்தியம் "வெறும் காகிதப்புலி' ஆகிவிட்டது என்பதல்ல. மாறாக மாறுபட்ட சமூக அமைப்பைக் கொண்ட நாடுகள் அனைத்தையும் மட்டுமல்ல, எல்லா சமூக அமைப்புகள் கொண்ட எல்லா நாடுகளையும் -சோசலிச நாடுகள் அதற்கு நேர்விரோதமான எதிரி என்பதால் கூடுதல் அக்கறையுடன் - கபளீகரம் செய்து கொள்ள போதியபலம் பெருவதற்கான கால அவகாசம் பெறுவதே இவர்களைப் பொறுத்தவரை 'சமாதான சகவாழ்வின்' அர்த்தமாகும். முதல் இரண்டு உலகப் போர்களும் இதையே நிரூபிக்கின்றன. முதல் உலகப் போர் முடிவில் சோசலிச சோவியத் யூனியன் தோன்றியவுடன் அதை ஒழிக்க ஏகாதிபத்தியவாதிகள் செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றவுடன் 'சமாதான சகவாழ்வு' நடத்தின. ஆனால் மீண்டும் வெகு விரைவிலேயே பலத்தைத் திரட்டிக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் சோவியத் யூனியனை ஒழிக்க முயன்றன என்பது உலகறியும் வரலாறு. சோவியத் யூனியனின் மகத்தான தலைவர் ஸ்டாலின் தலைமையில் உலகப் புரட்சிகர சக்திகளின் துணையுடன் ஏகாதிபத்திய வாதிகளுக்கு இடையே இருந்த முரண்பாடுகளை வெற்றிகரமாக பயன்படுத்தியதன் மூலம் சோவியத் யூனியன் வெற்றியைச் சாதித்தது என்பதும் நாம் அறிந்ததுதான்.

எனவே 'சமாதான சகவாழ்வு' என்ற கொள்கையை மாறுபட்ட சமூக அமைப்பு கொண்ட நாடுகள் ஏற்றுக் கொள்வதன் நோக்கம் போரைத் தவிர்ப்பதற்கல்ல மாறாக சோசலிச நாடுகளைப் பொருத்தவரை

தீர்மானகரமான புரட்சிகரப் போரை நடத்துவதற்கான தயாரிப்பில் ஈடுபடவும், ஏகாதிபத்தியவாதிகளைப் பொருத்தவரை முழுமையான ஆக்கிரமிப்புப் போர் தொடுப்பதற்கான தயாரிப்பில் ஈடுபடவும் கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொள்வதேயாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது காங்கிரசில் பேசியபோது முதலாளித்துவ நாடுகளுடனான சமாதான சகவாழ்வின் சாத்தியம் பற்றி பின்வருமாறு கூறினார் ஸ்டாலின் : ''ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாகமுதலாளித்துவ நாடுகளுக்கும், ரசியாவுக்கும் இடையே 'சமாதான சகவாழ்வு' மற்றும் 'குறிப்பிட்ட கால சமத்துவம்' சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் இருந்தது. ஆனால் இன்று 'சமாதான சகவாழ்வு'க்கான காலம் கடந்த காலத்ததாக மாறிக் கொண்டு வருகிறது என்றும், ரசியாவுக்கு எதிராக ஆக்கிரமிப்புக்கான தயாரிப்பு மற்றும் ஏகாதிபத்திய தாக்குதலுக்கான காலம் வந்து கொண்டிருக்கிறது என்றும் நாம் அனுமானிப்பதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றன.

சோவியத் ரசியாவுக்கு எதிராக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அய்க்கிய முன்னணி கட்ட முனைந்ததில் தோல்வியடைந்து விட்டது என்பது உண்மையே. இந்த தோல்விக்குக் காரணங்கள் : ஏகாதிபத்திய முகாமில் நாடுகளுக்கிடையே இருந்த முரண்பாடுகள்; சில நாடுகள் சோவியத் யூனியனுடன் பொருளாதார உறவுகள் வைத்துக் கொள்வதில் ஆர்வத்திலிருந்தது; சோவியத் யூனியனின் சமாதானக் கொள்கை; அய்ரோப்பிய தொழிலாளி வர்க்கத்தின் எதிர் நடவடிக்கை; சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தம் செய்தால் தமது சொந்த நாடுகளில் புரட்சி வெடித்து விடுமோ என ஏகாதிபத்திய வாதிகளின் அச்சம்; ஆனால் இதன் பொருள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனுக்கு எதிராக ஒரு

அய்க்கிய முன்னணியைக் கட்டும் முயற்சியை விட்டு விடுவது என்பதல்ல. பிரிட்டன் தற்காலிக பின்னடைவுக்கு உள்ளாகியிருப்பினும் இன்னும் யுத்த அச்சுறுத்தல் இருக்கிறது...

...எனவே ஏகாதிபத்தியமுகாமில் இருக்கும் முரண்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளை 'சரிக்கட்டுவதன்' மூலம் சமாதான உறவுகளை காப்பாற்ற எல்லா வகை முயற்சிகளையும் மேற்கொள்வது நமது கடமையாகும்.

நாம் லெனின் கூறிய அறிவுரைகளை மறந்து விடக்கூடாது. நமது கட்டுமானப்பணிகள் முதலாளித்துவ உலகத்துடனான யுத்தத்தை தள்ளிப் போடுவதில் வெற்றி பெறுவதையே சார்ந்துள்ளது. அந்த யுத்தம் தவிர்க்க முடியாதது. ஆனால் அய்ரோப்பியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி பக்குவப்படும் தருணம் வரையிலும், அல்லது காலனிய நாடுகளில் புரட்சி முழுமையாக பக்குவப்படும் தருணம் வரையிலும் அல்லது இறுதியாக முதலாளித்துவவாதிகள் காலனிகளை, தமக்குள் பங்கு போட்டுக் கொள்வதற்காக மோதிக் கொள்ளும் தருணம் வரையிலும் தள்ளிப் போட முடியும்.

எனவே முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான உறவுகளை பாதுகாப்பது நமது தார்மீக கடமையாகும். இரு முரண்பட்ட சமூக அமைப்பு கொண்ட நாடுகளிடையே சகவாழ்வு என்பது சாத்தியமே. இதை நடைமுறை முழுமையாக உறுதிப்படுத்தியிருக்கிறது'' (7).

இதிலிருந்து தொடர்வது என்னவெனில் 'சமாதான சகவாழ்வு' என்பது வெற்றிபெற்ற பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ உலகத்துடனான யுத்தத்தைத் தள்ளிப் போடுவது, அதற்காக சமாதான உறவுகளுக்குமாறுபட்ட

சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் இறுதிவரை முயற்சிப்பது என்பதேயாகும். இக்காலத்தில் தனது சொந்த நாட்டின் கட்டுமானப் பணிகளை பலப்படுத்தி கொள்வதுடன் சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்பதாகும்.

ஆக்கிரமிப்பு யுத்தம் ஏகாதிபத்தியங்களின் பண்பு. எனவே சமாதான சக வாழ்வு என்பது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு எதிரானதாக இருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர இயக்கங்கள்—ஏகாதிபத்திய நாடுகளிலும், ஒடுக்கப்படும் நாடுகளிலும்—வளர்ச்சியடைய சாதகமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. சோசலிச நாடுகள் அதிகபட்சம் முதலாளித்துவ நாடுகளுடனான சமாதான சகவாழ்வு காலத்தை நீடிக்க அனைத்து முயற்சிகளையும் செய்து வரும்போதே மற்றொரு புறம் ஏகாதிபத்திய நாடுகள் மற்றும், ஒடுக்கப்படும் நாடுகளின் பாட்டாளி வர்க்கம் மற்றும் தேசிய விடுதலை புரட்சிகர இயக்கங்கள் வளர்ச்சியடையவும் வெற்றி பெறவும் உதவ வேண்டும் என்பதே லெனினியக் கருத்தாகும்.

எனவேதான் 15வது காங்கிரசில் பேசும்போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பணிகள் பின்வருமாறு அமையவேண்டும் என்று கூறினார் ஸ்டாலின் :

''1. சர்வதேசப் புரட்சிகர இயக்க அரங்கில்

அ. உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சிகள் வளர்ச்சியடைய முயற்சிக்க வேண்டும்.

ஆ. முதலாளித்துவத் தாக்குதலுக்கு எதிராக புரட்சிகர தொழிற்சங்கங்களையும் தொழிலாளர் அய்க்கிய முன்னணிகளையும் பலப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இ. சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்கத்துக்கும், முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான நட்புறவை பலப்படுத்த வேண்டும்.

ஈ. சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்கத்துக்கும் காலனி மற்றும் சார்பு நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கும் இடையே இணைப்பை பலப்படுத்த வேண்டும்.

2. சோவியத் யூனியனின் அயலுறவுக் கொள்கைத் துறையில்

அ. பிரிட்டனின் ஆக்கிரமிப்புப் போக்குகளை எதிர்த்துப் போராட வேண்டும்.

ஆ. சோவியத் யூனியனின் பாதுகாப்புத்திறனை பலப்படுத்த வேண்டும்.

இ. புதிய ஏகாதிபத்திய யுத்தத்திற்கான தயாரிப்புகளை எதிர்த்துப் போராடுவது.

ஈ. முதலாளித்துவ நாடுகளுடன் சமாதானக் கொள்கையை பின்பற்றுவது, சமாதான உறவுகளை பாதுகாப்பது.

உ. அந்நிய வர்த்தகத்தை பலப்படுத்துவது என்ற அடிப்படையில் வெளி உலகுடனான வர்த்தகத்தை விரிவுபடுத்துவது.

ஊ. ஆதிக்கத்திலிருக்கும் ஏகாதிபத்தியவாதிகளால் சுரண்டலுக்கும் ஒடுக்குதலுக்கும் உள்ளாகி கஷ்டப்படும் சொல்லிக்கொள்ளப்படும் பல வீனமான பாதிக்கப்பட்ட அரசுகளுடன் உறவுகளை சீரமைத்துக் கொள்வது'' (8).

ஸ்டாலினுக்கு 'சமாதான சகவாழ்வு' என்பது இவ்வாறு உலகப் புரட்சிகர இயக்கத்தை வளர்க்கவும், சோசலிச சோவியத் யூனியனைப் பாதுகாக்கவும் தயாரிப்புகள் செய்வதற்கான காலத்தைக் குறித்தது. ஆனால் குருசேவ் புரட்டல்வாதிகளுக்கு 'சமாதான சகவாழ்வு' என்பது புரட்சியைக் கைவிடுவதற்கான கோட்பாடாகி இருக்கிறது. 'சமாதான மாற்றம்' பற்றிய அவர்களுடைய கோட்பாடு இதற்கு விளக்கமாகும்.

''ஒவ்வொரு நாட்டிலும் வர்க்கப் போராட்டம் உள்நாட்டில் வளர்வதன் விளைவாகத்தான் சோசலிச புரட்சி நடத்தி முடிக்கப் படுகிறது. அதன் வடிவங்களும், வழிகளும் அந்தந்த குறிப்பிட்ட நாட்டின் ஸ்தூலமான நிலைமைகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. மூலதனத்தின் ஆட்சி அதிகாரத்தை புரட்சி ரீதியிலே தூக்கி எறிவது, ஏதாவது ஒரு வடிவத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவுவது என்பதே பொதுவழி'' என்று கூறும் இவர்கள் ''தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடமை சோசலிஸ்ட் புரட்சி செய்வதற்கு உள்நாட்டு யுத்தத்துடன் சம்பந்தப்படாத ஒரு சமாதானப் பூர்வமான பாதைக்கு இன்று வாய்த்துள்ள வாய்ப்புகளை அதிகபட்சம் பயன்படுத்த வேண்டும்'' (9) என்கிறார்கள். இவ்வாறு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான பொதுவழியைத் தூக்கி எறிந்துவிட்டு 'சமாதான மாற்றம்' குறித்து போதிக்கிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் உள்நாட்டுப் புரட்சி யுத்தங்கள் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு பதில் 'பாராளுமன்றங்களை மக்களின் விருப்பத்திற்கான கருவியாக மாற்றும்' பாராளுமன்றவாத வர்க்க சமரச வழியைப் போதிக்கிறார்கள். தயாராய் இருக்கும் முதலாளித்துவ அரசு எந்திரத்தை

நொறுக்கி எறியாமல் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்ற அனைவரும் அறிந்த மார்க்சிய உண்மையை மிகச் சாதாரணமாக ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள்.

தேசிய விடுதலை இயக்கங்கள் குறித்தும் கூறுகிறார்கள்: ''விவசாய மக்களுடனும், தேச பக்தியுள்ள தேசிய முதலாளிகளுடன் கூட்டணி கொண்டிருக்கும் அடிப்படையில் தேசியமுன்னணியை வளர்த்துக் கெட்டிப்படுத்துவது தேசிய ஜனநாயக அரசை நிறுவுவதற்கும், முதலாளித்துவ ரீதியில் அல்லாத வளர்ச்சிப் பாதைக்கு மாறிச் செல்வதற்கும் நிலைமைகளைத் தயார் செய்வது, இவைதான் தேசிய விடுதலை இயக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் குறிக்கோள்'' (10).

இவர்கள் கூறும் தேசிய ஜனநாயக முன்னணியும், தேசிய ஜனநாயக அரசும் பாராளுமன்ற முன்னணியும், பாராளுமன்றவாத அரசும் என்பதற்கு மேல் வேறு ஒன்றும் இல்லை. முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப்பாதை என்பது முதலாளியப்பாதை என்பதை தவிர வேறொன்றுமல்ல. இவ்வாறு சோசலிசப் புரட்சிக்கு உள்நாட்டு புரட்சிப்போரைக் கைவிட்டு பாராளுமன்றசரணடைவுப் பாதையைப் பின்பற்றும் இந்தப் புரட்டல்வாதிகள் "சமாதானசகவாழ்வும், இருஉலகஅமைப்புகளுக்கிடையிலான பொருளாதாரப் போட்டியும் இன்றைய நிலைமைகளில் உலக ரீதியில் நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் அதி தீவிரமான வெளிப்பாடு ஆகும்'' (11) என்கிறார்கள். இத்தகைய பேர்வழிகளைப் பார்த்துதான் லெனின் கூறினார்: ''வர்க்கப் போராட்டத்தை ஒப்புக் கொள்ளும் ஒருவர் உள்நாட்டுப் போர்களை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. இவை வர்க்க சமுதாயம் ஒவ்வொன்றிலும் இயல்பானவை. சில நிலைமைகளின் கீழ்

வர்க்கப்போராட்டத்தின் தவிர்க்கமுடியாத தொடர்ச்சி, வளர்ச்சி மற்றும் முனைப்பாக்கமும் ஆகும். இதை ஒவ்வொரு மாபெரும் புரட்சியும் உறுதிப்படுத்தியுள்ளது. உள்நாட்டுப் போரை மறுதலிப்பதோ அல்லது அதைப் பற்றி மறந்து விடுவதோ கடைக்கோடி சந்தர்ப்பவாதத்தில் விழுந்துவிடுவதாகும். சோசலிசப் புரட்சியைக் கைவிடுவதாகும்.'' (12)

'சமாதானப் போட்டி' என்பது ரசியப் புரட்டல் வாதிகளைப் பொறுத்தவரை தமது நாட்டில் ஏகாதிபத்தியங்களுக்கு நிகரான அல்லது அதைவிட அதிகமான பொருளாதார வளர்ச்சியை அடைவது, சகல நாடுகளிலும் தமது பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை, பல வழிகளிலும் உருவாக்குவது (உ.ம் சர்வதேச உழைப்புப் பிரிவினை), இவ்வாறு ஏகாதிபத்தியங்களை அகற்றுவதற்கு 'சமாதான போட்டியில்' ஈடுபடுவது என்பதாகும். இது சோசலிசம் பேசிக்கொண்டே காலனியாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் 'சமூக நவீன காலனியாதிக்கமே' யன்றி வேறில்லை.

இவ்வாறு 'சமாதான சகவாழ்வு' 'சமாதானப் போட்டி' 'சமாதான மாற்றம்' என்ற குருசேவ் திரிபுவாதிகளுடைய மூன்று சமாதானக் கொள்கைகள் புரட்சியை விட்டொழித்து சோசலிசம் பேசிக் கொண்டே உலகம்முழுவதும் தமது மேலாதிக்கத்தை நிறுவ எத்தனிக்கும் ஒரு சமூக ஏகாதிபத்தியத்தின்—ரசியாவில் ஸ்டாலினுக்குப் பின் ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய பூர்சுவாக்களின்—கொள்கைகளேயன்றி வேறல்ல. ●

# 5. ரசிய சமூக நவீன காலனியாதிக்கம்

1907-ல் ஸ்டுட்கோட்டில் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் 'சோசலிசத்தின் காலனியக் கொள்கை ஆக்கப் பணியாற்ற முடியும்' என்று தீர்மானம் நிறைவேற்றியது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளான அய்ரோப்பிய ஏகாதிபத்தியங்கள் பின்தங்கிய ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் காலனிகளாக வைத்துக் கொண்டதன் மூலம் அவற்றை நாகரிகமடையச் செய்திருக்கின்றன என்றும், பின்தங்கிய நாடுகளுக்கு இத்தகைய பாதுகாப்பு இருப்பது அந்நாடுகளின் பின்தங்கிய நிலையை அகற்றுவதற்குப் பயன்படுகின்றது என்றும், எனவே சோசலிசத்தின் கீழ் காலனிகள் இருப்பது அந்நாடுகளை 'நாகரிகமடையச் செய்யும் விளைவை' உண்டாக்கும் என்றும் இத்தீர்மானத்தை ஆதரித்தவர்கள் வாதிட்டனர். இத் தீர்மானம் 'முதலாளித்துவ கொள்கை நோக்கிய பின்வாங்கல்' என்றும் 'இன்று ஆதிக்கத்திலிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு, முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பாட்டாளி வர்க்கத்தை அடிமைப்படுத்தும் உறுதியான நடவடிக்கை' என்றும் லெனின் கண்டனம் செய்தார்(1). ஆனால் இன்று ரசிய புரட்டல்வாதிகள் லெனின் பெயரைக் கூறிக் கொண்டேதான் சோசலிசக்காலனியக் கொள்கையால் தமது 'சர்வதேச ஆக்கப் பணியை' நிறைவேற்றி வருகிறார்கள்.

பொதுவாக ஏகாதிபத்தியங்கள் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு தலையிடுதல், கவிழ்த்தல்,

பொம்மையாட்சிகளை நிறுவுதல், இராணுவக் கூட்டுக் களை நிறுவுதல், இராணுவ தளங்களை நிறுவுதல், தங்களுக்கான ஏஜெண்டுகளை உருவாக்குதல், பொரு ளாதார, இராணுவ உதவி என்ற பெயரில் மூலதன ஏற்றுமதிக்கான சந்தைகளாகவும், கச்சாப் பொருள் விளை நிலங்களாகவும், உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைகளாகவும்,இந்நாட்டின் அரசியல், பொருளாதார இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் சாதனங்களாகவும் பயன்படுத்துதல், பல்வேறு நட்புறவு இராணுவ கூட்டுறவு ஒப்பந்தங்கள் மூலம் செல்வாக்கு மண்டலங்களை உருவாக்குதல் போன்ற நவீனகாலனிய முறைகளை கையாள்கின்றன. ரசிய சமூக ஏகாதிபத்தியம் (2) இதற்கு விதிவிலக்காக இல்லை. சோசலிச முகமூடியுடன் அது நவீன காலனி யாதிக்கக் கொள்கைகளை செயல்படுத்தி வருகிறது என்பதுதான் வேறுபாடு.

ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் நவீனகாலனியாதிக்க கொள்கைகளுக்கு அதன் 'மூன்று சமாதானக் கோட் பாடுகள்' குறிப்பாக 'சமாதானப் போட்டி' சித்தாந்த ஆயுதமாக விளங்குகிறது.

'நட்புறவு', 'இயற்கையானநண்பன்', 'ஒரு சோசலிச நாட்டின் சர்வதேச கடமை', 'தேசிய விடுதலை இயக் கங்களுக்கு உதவி', 'அரசியல் சுதந்திரம் பெற்ற இளம் அரசுகளுக்கு உதவி', 'காலனியாதிக்க எதிர்ப்பு', 'ஏகபோக மூலதன எதிர்ப்பு', 'உதவி', 'ஆதரவு', 'பாட்டாளி வர்க்க சர்வதேசியம்' இவை அனைத்தும் ரசியா தனது நவீன காலனியாதிக்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முன்வைத்திருக்கும் 'சோசலிச' முத்திரைகளாகும்.

இந்த 'சோசலிச' முத்திரைகளின் கீழ் உலகின் பல்வேறு நாடுகளையும் தனது செல்வாக்கு மண்டலங்

களாக மாற்றுவதற்கான திட்டங்களையும், பொருளாதார ரீதியில் தனது ஆதிக்கத்தின் கீழ் எப்போதும் வைத்து கொள்வதற்கான திட்டங்களையும், அரசியல், இராணுவ ரீதியில் தனது யுத்த தந்திர நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களையும், பொருளாதார, சுரண்டல் கொள்ளைக்கு வகை செய்யும் திட்டங்களையும் வகுத்து ரசிய சமூக ஏகாதிபத்தியம் செயல்படுத்திவருகிறது.

உலகின் மிகப் பெரிய ஏகாதிபத்தியமாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் உலக மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் ரசிய சமூக ஏகாதிபத்தியம், அதற்கேற்ப தனது அரசியல், பொருளாதார, இராணுவ திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. உலகமெங்கும் இராணுவ தளங்களையும், இராணுவத்தையும் பரப்பி வைத்துக் கொண்டிருக்கிறது. தனது பொருளாதாரத்தையே இராணுவ பொருளாதாரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் ஆயுத தளவாட விற்பனை செய்யும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய சாவு வியாபாரியாக செயல்படுகிறது.

**பொருளாதார ரீதியாக**

'சர்வதேச உழைப்புப் பிரிவினை', 'சோசலிச சர்வதேச உழைப்புப் பிரிவினை', 'பொருளாதார ஒருங்கிணைப்பு', 'திட்டங்களின் ஒருங்கிணைப்பு' 'பன்முக ஒருங்கிணைப்பு, 'புதிய வடிவ கூட்டுறவு', 'நீண்டகால கூட்டுறவு', "கூட்டு மூலதனத் திட்டம்' போன்ற இவை அனைத்தும் தனது "நட்பு' நாடுகளை பொருளாதார ரீதியில் தனக்கு அடிமைப்படுத்தி வைக்கும் திட்டங்களாகும். இவற்றின் மூலம் 'நட்பு' நாடுகளின் பொருளாதாரத் திட்டங்களை தனது குறுகியகால, நீண்டகால திட்டங்களுக்கு உட்பட்டவை

யாக, அவற்றின் பகுதிகளாக மாற்றியமைப்பதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் 'நட்பு' நாடுகள் சுயசார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான ஒரு பொருளாதார அமைப்பைக் கட்டி வளர்ப்பதைத் தடை செய்து, நட்பு நாடுகளின் பொருளாதார திட்டங்களை ரசிய சமூக ஏகாதிபத்திய திட்டங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கானவையாக மாற்றியமைக்கிறது.

மாஸ்கோவின் 'நெறிப்படுத்தப்பட்ட உற்பத்தி' என்பது இந்திய தொழிற்துறையில் நியாயமற்ற முறையில் தலையிடுவதாகும் என்றும், "சோவியத்-இந்திய தேசிய திட்டங்களின் ஒருங்கிணைப்பு' என்பதும் 'இந்திய - சோவியத் பொருளாதார ஒத்துழைப்புக் கழகம்' என்பதும் இந்தியாவை ரஷ்யாவுக்கு கச்சாப் பொருள் மற்றும் ஆதாரப் பொருள் மூலாதாரமாக மாற்றுவதே என்றும் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் என்ற இந்திய பத்திரிக்கை சரியாகவே குறிப்பிடுகிறது.

'நட்பு' நாடுகளுக்கு 'உதவி', "அரசியல் சுதந்திரம் பெற்ற இளம் நாடுகளுக்குப் பொருளாதார உதவி' என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளுக்கு ரசியா மூலதனம் ஏற்றுமதி செய்கிறது. இதன் மூலம் அந்நாடுகளை தனது உற்பத்திப் பொருள்களுக்கான சந்தையாகவும், மூலப்பொருள் கச்சாப் பொருள்களுக்கான சந்தையாகவும், உழைப்புச் சக்தியை மலிவாகச் சுரண்டுவதற்கான நிலமாகவும் பயன்படுத்திக் கொள்கிறது. தனது தலைமையாதிக்கத்தைப் பயன்படுத்தி ஏற்றத்தாழ்வான வணிகத்தின் மூலம் ஏராளமாகக் கொள்ளையடிக்கிறது. (உ.ம்) 1954-72க்குள் ரசியா மூன்றாம் உலக நாடுகளுக்கு செய்த மூலதன ஏற்றுமதி 13,000 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இதன் மூலம் அது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெரும் தொழில் நிறுவனங்களையும் முக்கிய தொழிற்துறைகளையும்

தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்துக் கொண்டது. 1955-73க்குள் இந்நாடுகளுக்கு அது தொழிற்துறை உற்பத்திப் பொருள்களை (16,000 மில்லியன் டாலர் மதிப்புள்ளது) ஏற்றுமதி செய்து பெரும் கொள்ளையடித்தது. மூலதன ஏற்றுமதிக்குப் பதிலாக இக்காலத்தில் 19,000 மில்லியன் டாலர் கச்சாப் பொருட்களை இந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டது (ரப்பர், காபி, சர்க்கரை போன்றவை).

ஏற்றத்தாழ்வான வியாபாரத்தின் மூலமும் மூன்றாம் உலக நாடுகளை ரசியா கொள்ளையடிக்கிறது. 'ஏற்றத்தாழ்வற்ற' பரஸ்பர நலன் என்று அது கூறிக் கொண்ட போதிலும் உண்மை அதற்கு நேர்மாறானதாகும். 1955-82ல் மட்டும் ரசியா மூன்றாம் உலக நாடுகளுடனான வர்த்தகத்தின் மூலம்பெற்ற லாபம் 11,300 மில்லியன் டாலர் ஆகும். வர்த்தகத்தில் வழக்கமாக தனது பொருட்களுக்கு 20% - 30% கூடுதல் விலையும், தான் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு அதே அளவு குறைந்த விலையும் நிர்ணயிப்பதன் மூலம் கொள்ளையடிக்கிறது. தரக்குறைவான, காலாவதியாகிப் போன பொருட்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது, ஒரு நாட்டிலிருந்து வாங்கி மற்ற நாடுகளுக்கு கூடுதல் விலைக்கு விற்பது போன்ற முதலாளித்துவ முறைகளையும் லாபத்திற்காக வியாபாரத்தில் கையாள்கிறது (அரபு நாடுகளில் குறைந்த விலையில் எண்ணெய் வாங்கி மேற்குநாடுகளுக்கு கூடுதல் விலையில் விற்றது). ரசியா இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் 70% இயந்திர, தொழிற்துறை கருவிகள் வழக்கமாக 20—30% சில சமயங்களில் 200% கூட அதிக விலையில் அனுப்பப்படுகின்றன. உதாரணமாக 1967ல் ரசியா மேற்கத்திய நாடுகளுக்கு விற்பதைப் போல் இரண்டு மடங்கு அதிக விலைக்கு 1,500 டிராக்டர்களை விற்றது. அதே ஆண்டில் கிழக்கு அய்ரோப்பாவிற்கு டன் ரூ 15,000க்கு விற்ற நிக்

கலை இந்தியாவுக்கு ரூ30,000க்குவிற்றது. இந்தியாவின் கடனில் 75—80 சதவீதத்தை 'மரபு பொருள்களாகவே' (காபி, டீ, பருத்தி, சணல் போன்றவை) திருப்பித்தர வேண்டுமென ரசியா கோருகிறது. இவற்றை எல்லாம் சர்வதேச சந்தை விலையை விட 20—30% குறைந்த விலைக்கே வாங்கிக் கொள்கிறது. 1972ல் ரசியா இந்தியாவுக்கு 2,000டன் பருத்தியை நெய்து மீண்டும் ஏற்றுமதி செய்து தர வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுமதி செய்தது. இதில் விலை கூட்டி விற்றதன் மூலம் ரூ 2 கோடி இந்தியாவிற்கு நஷ்டம் ஏற்பட்டது என்று பைனான்சியல் எக்ஸ்பிரஸ் தெரிவித்தது. அதாவது ரூ.700 பெருமான பருத்தியை 2,600 ரூபாய்க்கு ரசியா இந்தியாவுக்கு விற்றது. ரசியா இந்தியாவில் 5 லட்சம் டன் அலுமினியம் ஆலை ஒன்றை இதற்கென கருவிகள், எந்திரங்கள் அனைத்தையும் தன்னிடமிருந்தே வாங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும், கடனை அதில் உற்பத்தியாகும் பொருட்களைத் திருப்பித் தருவதன் மூலம் அடைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் நிறுவி 'உதவியது'.

பெரும்பாலும் ரசியா மூன்றாம் உலக நாடுகளை தனது எந்திர சாதனங்களை ஏற்றுமதி செய்வதற்கான சந்தையாக மாற்றியிருக்கிறது. தனது மொத்த எந்திர சாதன ஏற்றுமதியில் 80% மூன்றாம் உலக நாடுகளுக்கே ஏற்றுமதி செய்கிறது. மூன்றாம் உலக நாடுகளுக்குத் தரும் கடன்களுக்குப் பதிலாக அங்கிருந்து தனக்குத் தேவையான பொருட்களை இறக்குமதிசெய்ய ஒப்பந்தம் செய்து கொள்கிறது. மிகக் கீழ்த்தரமான வியாபாரத்தைச் செய்யக்கூட ரசியா தயங்குவதில்லை. ஆப்பிரிக்க நாடு ஒன்றுக்கு சிமெண்ட் ஏற்றுமதிக்கு ஒரு விலையில் ஒப்பந்தம் செய்து கொண்டு, சிமெண்டை கப்பலில் ஏற்றி அனுப்பிய பின் வேறொரு தனியார் நிறுவனத்

திற்கு அதையே கூடுதல் விலைக்கு விற்றது ஒரு எடுத்துக் காட்டு.

இத்தகைய பொருளாதார 'உதவி'களைப் பயன் படுத்தி லாபம் அடிப்பதுடன் அரசியல் நிர்பந்தங்களுக் கும் இதைப்பயன்படுத்திக் கொள்கிறது ரசிய சமூக ஏகாதிபத்தியம். தனது உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் நாடுகளுக்கு 'உதவி'யை மறுப்பதன் மூலம் நிர் பந்தம் கொடுக்கும் தந்திரத்தையும் கையாள்கிறது. எகிப்து, சூடான், சிரியா ஆகிய நாடுகளிடம் இந்த தந்திரத்தைக் கையாண்டு நெருக்கடி ஏற்படுத்தியது.

ஏகாதிபத்தியங்கள் பின் தங்கிய நாடுகளை மட்டு மின்றி வளர்ச்சியடைந்த நாடுகளையும் கூட தமது மூல தன ஏற்றுமதி சந்தைக்குள் இழுத்து விடும் என்பது ரசியாவிற்கும் பொருந்தும் உண்மையேயாகும். மூன்றாம் உலக நாடுகளை மட்டுமின்றி அய்ரோப்பிய நாடுகள் அனைத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர அது பல்வேறு வழிகளைக் கையாள்கிறது.

சி. எம். இ. எ. (CMEA) ரசியாவின் நவீன காலனித் திட்டத்திற்கு ஒரு சாதனமாக இருக்கிறது. இதன்மூலம் 'சமூக' நாடுகளுக்கு 'உதவி', 'கடன்' மூலம் மூலதனத்தை ஏற்றுமதி செய்கிறது. சி. எம். இ. எ. நாடு கள் 1954—74குள் ரசியாவிடமிருந்து பெற்ற 'உதவி' 10,000மில்லியன் டாலருக்கும் அதிகமாகும். 1,300க்கும் மேற்பட்ட நிறுவன கட்டுமான பணிகளில் ரசியா இங்கே பங்கு கொண்டிருக்கிறது. தமது ஏகபோகஆதிக்கத்தைப் பயன்படுத்தி போட்டியாளர்களை அப்புறப்படுத்துவதும் சந்தையை ஏகபோகமாக்கிக் கொள்வதும் ஏகாதிபத்தி யங்களின் பண்பு ஆகும். கனரக தொழில் உற்பத்தியிலும் கச்சாப் பொருள் சந்தையிலும் தனக்குள்ள ஏகபோகத் தைப் பயன்படுத்தி சி. எம். இ. எ. நாடுகளை ரசியா

கட்டுப்படுத்துகிறது. 1955—73ல் மட்டும் பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மனி (ஜிடிஆர்), செக்கோஸ்லோவேகியா, போலந்து ஆகிய நாடுகளுக்கு மட்டும் ரசியாவின் தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியின் மதிப்பு35,000மில்லியன் டாலர் ஆகும். இதில்25% மேல் லாபம் அடித்து ஏற்றத்தாழ்வான வணிக ஒப்பந்தங்கள் மூலமும் (விலை, ஏற்றுமதி, இறக்குமதிகளில் கட்டுப் பாடு விதித்து), நீண்டகால வணிகஒப்பந்தங்கள் மூலமும் சுரண்டுகிறது. 1955—73ல் மேற்கண்ட அய்ந்து நாடுகள் ரசியாவுடனான வாணிபத்தில் அடைந்த இழப்பு 19,000 மில்லியன் டாலராகும். மேலும் இந்நாடுகளிடமிருந்து அபூர்வ உலோகங்களையும், யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த மூலப் பொருள்களையும், சுத்திகரிக்கப்படாத கச்சாப் பொருள்களையும் ரசியா நிர்பந்தித்து இறக்கு மதி செய்கிறது.

'அனைத்து அய்ரோப்பிய பொருளாதாரக் கூட்டுறவு', 'ஏகபோக மூலதன எதிர்ப்பு', என்ற பெயரில் மேற்கு அய்ரோப்பிய நாடுகளுக்குள்ளும் நுழைய ரசியா திட்டமிடுகிறது. 'கூட்டுமூலதனத் திட்டத்தின்' மூலமும் மேற்கு அய்ரோப்பிய வங்கிகளுடன் இணைந்து சேர்ந்து கொள்வதன் மூலமாகவும் இதைச் சாதிக்க முயல்கிறது.

இவ்வாறு பல்வேறு பொருளாதார திட்டங்கள் மூலம் மூன்றாம் உலக மற்றும் அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை தனது கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவது, தனது ஆதிக்க நலனுக்கு உட்பட்டதாக்குவது என்பதை ரசியா செயல்படுத்தி வருகிறது. பல்வேறு வகை பொருளாதாரத் திட்டங்கள் மூலம் மற்ற 'நட்பு' நாடுகளின் பொருளாதார உயிர்நிலைகளை கட்டுப் படுத்துகிறது. கச்சாப் பொருள், சந்தை, வெளிநாட்டு வியாபாரங்கள், உற்பத்தித் திட்டங்கள், திணிக்கப்பட்ட கட்டாய கடன்கள், மூலதனத்திற்குத் தேவையான

உழைப்பு சக்தி ஆகிய வடிவங்களில் சுரண்டியும் கட்டுப் படுத்தியும் வருகிறது.

**இராணுவ ரீதியாக**

வார்சா ஒப்பந்த அமைப்பு மூலம் ரசியா அதன் உறுப்பு நாடுகளான கிழக்கு அய்ரோப்பாவுடன் 'நட்புறவு' மற்றும் 'இராணுவக் கூட்டுறவை' நிறுவி யுள்ளது. உண்மையில் இந்த அமைப்பு, ரசியா வாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. 'கட்டுப்படுத்தப் பட்ட அரசுரிமை', 'சர்வதேச சர்வாதிகாரம்' என்ற முத்திரையின் மூலம் அதன் உறுப்பு நாடு களில் தனது இராணுவத்தை குவித்து வைத்துள்ளது. 'இராணுவ ஒருங்கிணைப்பு' மூலம் இந்நாடுகளின் இராணுவத்தின் மீது தனது ஆதிக்கத்தை நிறுவியுள்ளது.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலும் இராணுவ தளம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கிழக்கு அய்ரோப்பா, மங்கோலிய குடியரசு, கியூபா, ஆப் பிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய தரைக்கடல், இந்துப் பெருங்கடல் ஆகிய பகுதிகளில் ரசியா இராணுவ தளங்களையும், இராணுவ அமைப்புகளையும் நிறுவிக் கொண்டுள்ளது. உலகம் முழுவதும் தனது நாட்டுக்கு வெளியே 7 லட்சம் கூலிப்படையை நிறுத்தி வைத் துள்ளது.

ஏகாதிபத்தியங்கள் தமது செல்வாக்கு மண்டலங் களையும், காலனிகளையும் இராணுவ பலத்தில் மட்டுமே காத்துக் கொள்ளவோ மறுபங்கீடு செய்து கொள்ளவோ முடியும். எனவே ஏகாதிபத்தியங்கள் ஜுரவேகத்தில் இராணுவ தளவாட, இராணுவ பலத்தை கூட்டுவதில் ஈடுபடுவது வியப்புக்குரியதல்ல. இன்று உலக மேலாதிக் கத்திற்காக போட்டியிடும் ரசியா, அமெரிக்காவுடன்

போட்டி போட்டுக் கொண்டு தனது இராணுவ வல்லமையைப் பெருக்கி வருகிறது.

தனது நவீன காலனியாதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப தனது மொத்தப் பொருளாதாரத்தையும் இராணுவ மயமாக்கி வருகிறது. மொத்த தேசிய வருமானத்தில் 20%இராணுவத்திற்காக அது செலவிடுகிறது. ஆண்டுக்கு லட்சம் மில்லியன் டாலருக்குமேல் அது இராணுவத்திற்காக செலவிடுகிறது. 60% தொழிற்துறையை நேரடியாகவோ மறைமுகமாகவோ இராணுவ தளவாட உற்பத்தியில் ஈடுபடுத்தியிருக்கிறது. மேலும் 'எப்போது வேண்டுமானாலும் தனது மொத்தப் பொருளாதாரத்தையும் இராணுவத் திட்டங்களுக்காக மாற்றியமைத்துக் கொள்ள முடியும்' என எக்காளமிடுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் போட்டி போட்டுக் கொண்டு இராணுவ செலவை அதிகரித்து வருகிறது. 1961ல் அமெரிக்கா 40மில். டாலரும் ரசியா 20 மில். டாலரும் இராணுவத்திற்காக செலவிட்ட நிலை மாறி அது 1977ல் அமெரிக்கா 100 மில்லியன் டாலரும் ரசியா 120 மில்லியன் டாலரும் செலவிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. 1970 லேயே மொத்த ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்காவுக்கு அடுத்து ரசியாதான் முதலிடம் வகித்து வருகிறது. உலகின் மொத்த ஆயுத ஏற்றுமதியில் ரசியாவின் பங்கு 37% ஆகும். ஏறக்குறைய 20 நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி செய்கிறது. 1955-72ல் அதன் ஆயுத ஏற்றுமதியின் மதிப்பு 28,500மில்லியன் டாலராகும்.

தனது மொத்த பொருளாதாரத்தையும் இராணுவ மயமாக்கிக் கொண்டிருக்கும் ரசிய சமூக ஏகாதிபத்தியத்திற்கு தனது உபரி ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

எனவேதான் அதன் ஆயுத விற்பனையை பரப்பிலும் அளவிலும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கச் செய்கிறது.

உலகின் மிகப் பெரிய சாவு வியாபாரியாகத் திகழ்கிறது. அது மூன்றாம் உலக நாடுகளுக்கு செய்யும் மொத்த 'உதவியில்' பொருளாதார உதவியை விட ஆயுத உதவியே அதிகமாகும். உதவி கேட்கும் நாடுகளுக்கு உணவல்ல, துப்பாக்கியே உதவியாக கிடைக்கிறது. 1966ல் மூன்றாம் உலக நாடுகளுடன் ரசியாவின் வியாபாரத்தில் ஆயுத ஏற்றுமதி 300-400 மில்லியன் டாலராகவும் பொருளாதார உதவி 1,240மில்லியன் டாலராகவும் இருந்தது. 1972ல் ஆயுத உதவி 1,100 மில்லியன் டாலராகவும் பொருளாதார உதவி 580 மில்லியன் டாலராகவும் மாறியது. ஆனால் எப்போதுமே ரசிய சமூக ஏகாதிபத்தியம் தனது ஆயுத விற்பனையில் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு உதவியதில்லை, (உ.ம்) தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ், கம்போடியா போன்ற நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ரசியா எப்போதும் உதவியதில்லை. வியட்நாம் 'மாபெரும் விவாதத்தில்' சீன ஆதரவு நிலை எடுத்தபோது உதவி செய்வதில் இடையூறு செய்ய முனைந்தது.

தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் போட்டியிட்டுக்கொண்டு இராணுவத்தையும், இராணுவச்செலவையும், தளவாட ஏற்றுமதியையும் அதிகரித்து வரும் ரசிய சமூக ஏகாதிபத்தியம் தனது சொந்த மக்களை நசுக்கியே இதைச் செய்கிறது. ரசியாவில் 50 சதவீத பண்ணை விவசாயிகளும், 20 சதவீத நகர்ப்புற மக்களும் வறுமை கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள். 1960-74க்குள் அது வருமான வரியை மூன்று மடங்கு அதிகமாக்கியிருக்கிறது. தொழிற்துறை உற்பத்தியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 30.8% (1957ல்) இருந்து (1973 லேயே) 25.5 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் அதன் தேசிய வருமான வளர்ச்சி 1950ல், 11%மாக இருந்தது, படிப்படியாக குறைந்து 1977ல் 4.3% ஆகிவிட்டது.

தனது உலக ஆதிக்க நோக்கங்களை ஈடேற்றுவதற்காக 'தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு' 'ஒரு சோசலிச நாட்டின் சர்வதேச கடமை' என்ற முகமூடிகளையும் அணிந்து கொண்டுள்ளது ரசிய ஏகாதிபத்தியம். ஒரு 'சோசலிச நாட்டின் சர்வதேசக் கடமை' என்ற பெயரில்தான் ஆப்கானிஸ்தான், ஏமன் ஆகிய நாடுகளில் கவிழ்ப்பு சதி மூலம் பொம்மை ஆட்சிகளை நிறுவியது. ஜயர், செக்கோஸ்லோவேகியா, எரிட்ரியா, மற்றும் எதியோபியா-சோமாலியா நாடுகளுக்கு தனது கூலிப்படைகளை அனுப்பி வைத்தது. கம்பூச்சியாவில் எதிர்ப் புரட்சிக் கும்பலுக்கு ஆதரவாக வியட்நாம் படையை ஏவிவிட்டது. எதியோபியா-சோமாலியா தகராறில் 10,000 மில். டாலர் ஆயுத தளவாடங்களையும், 10,000 சோவியத் கியூபா கூலிப்படைகளையும் ஈடுபடுத்தியது. ஆப்கானிஸ்தானத்திற்கு லட்சக்கணக்கான ரசிய கூலிப்படைகளை அனுப்பி வைத்தது. 'தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு' என்ற பெயரில் 'அங்கோலா' தேசிய விடுதலை இயக்கத்தை பிளவுபடுத்தி மோதவிடும் தந்திரத்தைக் கையாண்டது. அதுமட்டுமின்றி அங்கோலாவுக்கு 10,000 கியூபா கூலிப்பட்டாளத்தையும், 1000 இராணுவ வல்லுநர்களையும் அனுப்பியது. 10,000 கி.மீ தூரத்துக்கு கடல் மற்றும் ஆகாய மார்க்கங்களில் இராணுவ சப்ளைக்கான வழிகளை செப்பனிட்டுக் கொண்டது. இராணுவ அச்சுறுத்தலுக்காக மேற்கு ஆப்பிரிக்கா, அங்கோலா மற்றும் வளைகுடா நாடுகளுக்கு இராணுவ கப்பல்களை அனுப்பி வைத்தது. ஜப்பானுடைய வட எல்லைப் பகுதிகளையும், கடற் பகுதிகளையும், நார்வேக்கு அப்பால் உள்ள ஸ்பார்டகஸ் தீவுகளையும் எடுத்துக்கொள்ள முயன்றது.

அவை தவிர அரசியல் ரீதியாக சில பிராந்திய மண்டலங்களை நிறுவுவது, 'நட்புறவு' கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்வது, அதன் மூலம் தனது நவீனகாலனி

ஆதிக்கத்தை விரிவுபடுத்துவது என்ற கொள்கையையும் அது பின்பற்றி வருகிறது. 'ஆசியக் கூட்டுப் பாது காப்புத் திட்டம்' என்ற ஒன்றை வைத்து அதன் மூலம் ஆசிய நாடுகளை தனது செல்வாக்கின்கீழ் கொண்டுவரும் முயற்சியில் தோல்வியுற்ற பின் 'தென்கிழக்கு ஆசியா வின் அமைதி மண்டலம்' என்ற திட்டத்தையும், ஆசியக் கூட்டுப் பாதுகாப்பு திட்டத்தின் ஒரு பகுதியான 'இந்தோசீன பெடரேசன்' என்ற திட்டத்தையும் முன் வைத்துள்ளது. இவை தவிர 'நட்புறவு கூட்டு ஒப்பந்தம்' என்ற பெயரில் பல்வேறு நாடுகளுடன் (உ.ம் எதியோ பியா, இந்தியா) இராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு அவற்றின் இராணுவ நடவடிக்கைகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. உலகம் முழுவதும் மூன்றாம் உலக நாடுகளின்மீது அரசியல், இராணுவ செல்வாக்கை நிறுவுவதற்கான சாதனங்களாக கியூபா, வியட்நாம், இந்தியா ஆகிய நாடுகளை பயன்படுத்திக் கொண்டு வருகிறது.

காலனியாதிக்கமும், மேலாதிக்கமும் ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் சர்வ தேசியம். அதை ஈடேற்றுவதற்காகவே அது அனைத்து கோட்பாடுகளை யும் உருவாக்குகிறது; செயல்படுத்துகிறது. சொல்லிக் கொள்ளப்படும் சர்வதேச தொழிலாளர்—விவசாயிகள் கூட்டணி என்ற கோட்பாட்டை முன்வைத்து அதில் சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தை ரசியா பிரதிநிதித் துவப்படுத்துகிறது என்றும், தேசிய விடுதலை இயக்கங் களுக்கு தான் பிரதான கூடாளி மட்டுமல்ல தான் ஒரு ஆதிக்க சக்தி (Dominating force) என்றும் வெட்கமின்றி வெளிப்படையாகவே அது பிரகடனப்படுத்தியிருக்கிறது.

''...... சோவியத் ரசியாவின் தலைமையிலான சோவியத் இயக்கம் மற்றும் சோவியத் அரசுகளை எதிர்த்து ஏகாதிபத்திய நாடுகளைக் கொண்ட சிறு

கும்பல் நடத்தும் போராட்டம்தான் மக்கள் சமூகங்களி டையே உள்ள உறவுகளையும் அரசுகளின் மொத்தமான உலக அமைப்புகளையும் நிர்ணயிக்கின்றன'' என்ற லெனின் மேற்கோளைக் கேடாகப் பயன்படுத்தி அனைத்து தேசிய விடுதலை இயக்கங்களையும் ரசிய புரட்டல்வாதம் தனது மேலாதிக்க நோக்கங் களுக்குக் கீழ்படியுமாறு கோருகிறது. உலகம் முழுவதும் இக்கோட்பாட்டின்படி ரசிய சமூக ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் முதலாளித்துவ 'கம்யூனிஸ்ட்' கட்சிகளை உருவாக்கிக் கொண்டிருப்பதுடன், எல்லா முதலாளியக் கட்சிகளையும் அரசுகளையும் தனது 'நட்பு' முகாமில் இணைத்துக் கொண்டுள்ளது.

தேசிய விடுதலை இயக்கங்களை காட்டிக் கொடுத்து பாராளுமன்றப் பாதைக்கும் முதலாளிய வர்க்கத்துக்கும் சரணடையச் செய்யும் தேசிய ஜனநாயக முன்னணி மற்றும் அரசு என்ற கோட்பாட்டின் மூலம் அனைத்து நாட்டு பிற்போக்கு சக்திகளையும் தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு இணைத்துக் கொள்ள சமூக ஏகாதி பத்தியம் திட்டமிடுகிறது.

ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் நவீன காலனியாதிக்க கொள்கை கபடத்தனமானதும் கொடூரமானதும் ஆகும். சமாதான சகவாழ்வு மற்றும் சமாதான மாற்றம் போன்ற கோட்பாடுகள் மூலம் முற்றாக சர்வதேசப் புரட்சியை காட்டிக் கொடுப்பது, பல்வேறு அரசியல் பொருளாதார ஒப்பந்தங்கள் திட்டங்கள் மூலம் முதலாளித்துவ அரசுமற்றும் வர்க்கங்களுடன்கூட்டமைத் துக் கொள்வது, பொருளாதார, அரசியல், ராணுவ 'உதவி'கள் மூலம் அவற்றை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவது, இவ்வாறு சமாதான போட்டி மூலம் 'ஏகாதிபத்தியத்தை' அகற்றிவிட்டு அந்த இடத்தில் தனது சமூக ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்தை நிறுவுவது,

இதற்கு அரணாக 'ஏகாதிபத்தியத்திற்கும்' புரட்சிக்கும் எதிராக ராணுவ வலிமையை பிரமாண்டமாகப் பெருக்குவது, தனது ஆதிக்க நோக்கத்திற்குத் தடையாக இருக்கும் அரசுகள், சக்திகளுக்கு எதிராக தலையிடுதல், கவிழ்த்தல், ஆக்கிரமித்தல் போன்ற ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது, அதற்காக எப்போதும் தனது ஆயுதங்கள் அனைத்தும் 'ஒவ்வொன்றும் யுத்தத்திற்கு தயாராய் இருக்கும்படி' வைத்துக் கொள்வது, ராணுவ தளங்களை உலகம் முழுவதும் நிறுவிக் கொள்வது. இவற்றையெல்லாம் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு, உதவி, சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுவது, சுயாதிபத்தியத்தையும், அமைதியையும், ஜனநாயகத்தையும் காப்பது, தனது நண்பர்களையும், தனது நலத்தையும் காப்பதற்காக மேற்கொள்வது, ஏகாதிபத்தியங்களை, காலனியாதிக்கத்தை எதிர்ப்பது, எல்லாவற்றுக்கும் மேலாக சோசலிசத்தின் நலனுக்காக என்ற போர்வையிலேயே ரசிய குருசேவ்—கோர்ப்பசேவ் கும்பல் மேற்கொண்டு வருகிறது. இது அப்பட்டமான சமூக நவகாலனி ஆதிக்கமே அன்றி வேறல்ல. ஆளும் பூர்சுவா வர்க்கத்துக்கு எப்போதுமே புரட்சிகர இயக்கங்களை ஒடுக்குவதன் மூலம் தூக்கி விடுவோனும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமாதானம் கூறுவதன் மூலம் பாதிரியாரும் சேவை செய்கிறார்கள். காவுட்ஸ்கி பாதிரியார் வேலை செய்கிறார் என லெனின் அன்று சுட்டிக் காட்டினார். இன்று ரசிய சமூக ஏகாதிபத்தியம் தானே பாதிரியாராகவும் தூக்கி விடுவோனாகவும் இருக்கிறது. இதுதான் ரசிய புரட்டல் வாதிகளின் சர்வதேசியம். லெனின் கூறும் சர்வதேசியம் இதற்கு நேர் எதிரானதாகும். அவர் கூறுகிறார்: "'ஒரு, ஒரே ஒரு வகையான சர்வதேசியம் தான் மெய்யானது. அதாவது தமது சொந்த நாட்டில் ஒரு புரட்சிகர போராட்டத்தின் முன்னேற்றத்துக்காக முழு

மனதுடன் பாடுபடுவது மற்றும் விதிவிலக்கின்றி ஒவ்வொரு நாட்டிலும் பிரச்சாரம், அனுதாபம், பொருளாயத உதவி மூலம், இந்தப் போராட்டத்தை இந்தக் கொள்கையை மட்டுமே ஆதரிப்பது.'' (3) ●

# 6. உலக அரசியல் சக்திகளை வகைப்படுத்தும் கோட்பாடு பற்றி

'முதலாளித்துவத்தின் பழைய உலகம், உதயமாகி வரும் புதிய உலகம்' (1) 'விரல் விட்டு எண்ணக்கூடிய ஒடுக்கும் நாடுகள், அதிக எண்ணிக்கையில் உள்ள ஒடுக்கப்படும் நாடுகள்' (2) 'சோசலிச முகாம், ஏகாதிபத்திய முகாம்' (3) 'மிகச் சிலவே உள்ள நாகரிகமடைந்த சுரண்டும் நாடுகளின் முகாம், காலனி, சார்பு நாடுகளில் வாழும் ஒடுக்கப்படும் பெரும்பான்மையான மக்களின் முகாம்' (4) என்றிவ்வாறு உலகம் முழுவதையும் இருவேறு முகாம்களாக லெனினும், ஸ்டாலினும் பகுத்துக் கூறியிருப்பது ஏகாதிபத்தியமும் சோசலிசப் புரட்சியுமாகிய இந்த சகாப்தத்தின் அடிப்படை முரண்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

இது சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கம் இந்த சகாப்த முக்கியத்துவமுள்ள யுத்த தந்திர, போர்த் தந்திர கோட்பாடுகளை வகுத்துக் கொள்வதற்கு அவசியமான, அடிப்படையான பகுப்பாய்வாகும். ஆனால் உலக அரசியல் சக்திகள் குறிப்பான நிலைமைகளில் ஆய்வு செய்யப்படவில்லையானால் இந்த அடிப்படையான பகுப்பாய்வு எவ்விதத்திலும் நடைமுறை முக்கியத்துவமற்றதாகி விடும். ஏனெனில் அடிப்படை முரண்பாடுகள் மாறாதிருக்கும்போதே அவை மேலும் மேலும் கூர்மையடைவதன் விளைவாக உலக அரசியல் சக்திகளில்—அதாவது எதிர்மறைமுகாம்களாகப் பிரிந்திருக்கும் அரசியல் சக்திகளில்—மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்தமாற்றங்களை தொடர்ந்துகவனித்து பகுத்தாய்ந்து

வகைப்படுத்துவது சர்வதேச பாட்டாளி வர்க்கம் உடனடி நடைமுறைமுக்கியத்துவம் வாய்ந்த கொள்கை களைத் தீர்மானிப்பதற்கு அவசியமாகும்.

அந்த அடிப்படையில் லெனின், ஸ்டாலின், மாவோ ஆகிய பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் இந்த சகாப்தத் திற்குள் உலக அரசியல் சக்திகளிடையே இரு முகாம் களிலும் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவாகக் கண்டறிந்து அவற்றை சரியாக வகைப்படுத்தியதன் மூலம் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு வழி காட்டி இருக்கிறார்கள்.

முதல் உலக யுத்தத்திற்குப் பின் உலக சக்திகளை ஆய்வு செய்த லெனின், 1920 ஜூனில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில், உரையாற்றும்போது உலகை மூன்று வகை அரசியல் சக்திகளாக பிரிக்கும் கருத்தை முன்வைத்தார்.

முதல் பிரிவில் காலனி, அரைக்காலனி மற்றும் உலக யுத்தத்தில் தோல்வியுற்ற நாடுகளை வைத்தார். இதில் இந்தியா, பெர்சியா, துருக்கி, சீனா போன்ற ஏகாதி பத்தியத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளான நாடுகளும், ஜெர்மனி, ஆஸ்திரியா, போன்ற யுத்தத்தில் தோற்கடிக் கப்பட்ட நாடுகளும் இருந்தன. இதில் ரஷ்யா ஒரு சோசலிச நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடு களில் உலகின் மொத்த மக்கள் தொகையான 175 கோடிப் பேரில் 125 கோடி மக்கள் வாழ்ந்தனர். இரண் டாவது பிரிவில் உலக யுத்தத்தால் பாதிக்கப்படாத நாடுகளை வைத்தார். ஹாலந்து, நார்வே, ஸ்விட்சர் லாந்து, ஸ்பெயின், போர்ச்சுகல் மற்றும் பால்கன் நாடு களும், மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளும் இவற்றில் அடங்கும். இவை யுத்தத்தில் நடுநிலை வகித்ததால் ஒரு வகையில், பொருளாதார வகையில்

லாபம் பெற்றவை. மூன்றாவது பிரிவில் யுத்தத்தில் வெற்றியும், லாபமும் பெற்ற அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளை வைத்தார். (5)

புரட்சிக்குப் பின் ரசியா உடனடியாக யுத்தத்தை நிறுத்தவும், அமைதியை நிலைநாட்டவும்சமாதானஉடன்படிக்கை செய்து கொள்ள உலக நாடுகளுக்கு அறை கூவல் விடுத்தது. இந்த அறைகூவலை அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் நிராகரித்துவிட்ட நிலையில் உடனடியாக ஜெர்மனியுடன் 1918ல் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது. அதே நேரத்தில் ரசியாவுக்கு எதிராக பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய மூன்றும் கூட்டாக பொருளாதார நிர்பந்தம் கொடுத்தன. 1920-21ல் போலந்து, துருக்கி, பெர்சியா போன்ற பல்வேறு நாடுகளுடன் ரசியா ராஜதந்திர உறவுகளை மேற் கொண்டது.

1920ம் ஆண்டுகளில் ஜெர்மனி மீண்டும் தனது பழைய பொருளாதார பலத்தைப்பெறத்தொடங்கியது. ஜப்பானும், இத்தாலியும் கூட வளர்ச்சியடைந்தன. ஜெர்மன் உலக யுத்தத்தின் போது தான் இழந்த காலனிய பகுதிகளைமீண்டும் கைப்பற்ற உறுதிபூண்டது. இத்தாலியும், ஜப்பானும் கூட தனது பழைய நிலையை பெறவும், புதிய செல்வாக்கு மண்டலங்களை அடைய வும், காலனிகளை விரிவாக்கவும் திட்டமிட்டன. இது உலக அரசியல் சக்திகளிடையே புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் 1927ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி யின் 15வது பேராயத்தில் உலக அரசியல் சக்திகளை வேறொரு வகையில் பகுத்து முன் வைத்தார் ஸ்டாலின். 190.5 கோடி உலக மக்கள் தொகையில் 113.4 கோடி,

மக்கள் வாழும் காலனி மற்றும் சார்பு நாடுகள், 14.3 கோடி பேர் வாழும் ருசியா, 26.4 கோடி மக்கள் வாழும் இடைப்பட்ட நாடுகள், 36.3 கோடி மக்கள் வாழும் காலனிகளையும், சார்பு நாடுகளையும் ஒடுக்கும் பெரிய ஏகாதிபத்திய நாடுகள் (6). ஏகாதிபத்திய முகாமிலும் சோசலிச முகாமிலும் ஏற்பட்ட மாற்றங்களை இந்த வகைப் பிரிவு துலக்கமாகக் காட்டியது.

ஜெர்மன், ஜப்பான், இத்தாலி ஆகிய மூன்று நாடுகளிலும் அரசியல், பொருளாதார நெருக்கடி முற்றி அவை ஒன்றன்பின் ஒன்றாக முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கைவிட்டு பாசிசத்தை மேற்கொண்டன. முழுப் பொருளாதாரத்தையும் யுத்த தயாரிப்பில் முடுக்கி விட்டன. இந்த நேரத்தில் (1935) கூடிய கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் 'பாசிசம் தேசிய வெறியையும், யுத்தத்தையும் கட்டவிழ்த்து விடுகிறது' என்றும் ஜெர்மனி பாசிசம் ஏகாதிபத்திய யுத்தத்தின் பிரதான ஊற்றுக் கண்ணாகவும் சர்வதேச எதிர்புரட்சி முனையாகவும் செயல்படுகிறது என்றும் குறிப்பிட்டது.

1936ல் உலக மேலாதிக்க நோக்கத்துடன் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி மூன்றும் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டன. இத்தாலி 1935ல் எத்தியோபியா மீதும் 1936ல் ஸ்பெயின் மீதும் ஆக்கிரமிப்பு யுத்தங்கள் தொடுத்தது. ஜப்பான் 1931லிருந்தே சினத்தின் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்திருந்தது. ஜெர்மனி 1938ல் ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவிகியா மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தது.

1939ல் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் க்ட்சியின் 18வது காங்கிரசில் ஜெர்மன், ஜப்பான், இத்தாலி, ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்பு நாடுகள் என்றும், பிரிட்டன் பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் அனாக்கிரமிப்பு

நாடுகள் என்றும் உலகின் பிரதான ஏகாதிபத்திய நாடுகளை வகைபிரித்து அறிவித்தார் ஸ்டாலின். (7)

இந்த அடிப்படையில் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு எதிராக ரசியா சர்வதேச அரங்கில் தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்தியது. 1934ல் சர்வதேச சங்கத்திலிருந்து ஜெர்மனும், ஜப்பானும் வெளியேறின. ரசியா அதில் இணைந்தது. 1935ல் பிரான்சுடனும், செக்கோஸ்லோவிகியாவுடனும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. 1936ல் மங்கோலிய குடியரசுடனும் 1937ல் சீனாவுடனும் பரஸ்பர உதவி மற்றும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. 1938ல் செக்கஸ்லோவேகியா, ஆஸ்திரியா மீதான ஜெர்மன் ஆக்கிரமிப்பை அடுத்து ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக அமைதி விரும்பும் நாடுகள் கூட்டாக ஒன்றிணைய வேண்டும் என ரசியா அறைகூவல் விடுத்தது.

ஜெர்மனி 1939 மார்ச்சில் செக்கஸ்லோவிகியா மீது படையெடுத்து முழுவதுமாக கைப்பற்றிய உடன் சர்வதேச பாசிச எதிர்ப்பு அய்க்கிய முன்னணி கட்டும் முயற்சியை ரசியா மேற்கொண்டது. பிரிட்டன், பிரான்சுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. சேம்பர்லின் (பிரிட்டிஷ்) அரசு அதே நேரத்தில் ஜெர்மனி மூலம் ரஷ்யாவை ஒழிக்க சதி செய்துகொண்டிருந்தது. வேறு வழியின்றி ரசியா ஜெர்மனியுடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது.

1940 ஏப்—ஜூலைக்குள் டென்மார்க், நார்வே, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், பிரிட்டிஷ் தீவுகள் ஜெர்மன் ஆக்கிரமிப்பு அபாயத்துக்கு உள்ளாயின. ரசியாவுடனான ஒப்பந்தத்தை மீறி 1941ல் இட்லர் ரஷ்யாவை தாக்கினான். அப்போது சர்ச்சிலும் (பிரிட்டன்) ரூஸ்வெல்ட்டும் ரஷ்யாவுக்கு ஆதரவாக வந்தனர்.

பாசிச எதிர்ப்பு முன்னணி ஒன்று உருவாயிற்று. 1942 ஜூனில் சோவியத், அமெரிக்கா, பிரிட்டன், சீனா உட்பட 22 நாடுகள் பாசிச எதிர்ப்பு கூட்டுப் பிரகடனம் வெளியிட்டன. அதே மாதங்களில் அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் ஜெர்மனிக்கு எதிராக ரஷ்யா பரஸ்பர உதவிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இவ்வாறு சக்திமிக்க பாசிசஎதிர்ப்பு முகாம் ஒன்று ஜெர்மன், ஜப்பான், இத்தாலி பாசிச முகாமுக்கு எதிராக தோன்றியது.

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் 25 வது ஆண்டு விழாவின்போது (1942 நவம்பர்) ஸ்டாலின் கூறினார்: ''ஹிட்லர் ஜெர்மனியால் புகுத்தப்பட்ட யுத்தத்தில் இரண்டு எதிர்எதிர் முகாம்கள் உருவாகியுள்ளன என்பது விவாதத்திற்கு இடமற்றதாகி விட்டது. ஒன்று ஜெர்மன், இத்தாலி கூட்டணி முகாம், மற்றொன்று ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் கூட்டணி முகாம்.'' (8)

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்க ஏகாதிபத்தியம்மிகப்பெரிய ஏகாதிபத்தியமாகமுன்னுக்கு வந்தது. அதே நேரத்தில் அதற்கு எதிராக பாசிச எதிர்ப்புப் போரில் வெற்றிபெற்ற வீரனாகவும், உலகின் மிகப்பெரிய சக்திவாய்ந்த சோசலிஸ்டு நாடாகவும் சோவியத் யூனியன் இருந்தது. இவ்விரண்டுக்கும் இடையே எண்ணற்ற ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பியா கண்ட காலனி, அரைக்காலனி மற்றும் முதலாளித்துவ நாடுகள் இருந்தன. 1946ல் இந்நிலையைச் சுட்டிக் காட்டிய மாவோ ''சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் தனது உலக ஆதிக்கத்தை விஸ்தரிக்க முயலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அமெரிக்க மக்களும், அதன் ஆக்கிரமிப்பு பயமுறுத்தலுக்கு உள்ளான சகலவித மக்களும், ஒன்று சேர்ந்து அமெரிக்க பிற்போக்குவாதிகளையும்

அந்தந்த நாடுகளின் வேட்டை நாய்களையும் எதிர்த்துப் போராடுவதன் மூலம் உலக யுத்தத்தை தவிர்க்க வேண்டும்'' (9) என அறைகூவல் விடுத்தார்.

அதன்பின் 1956ல் உலக அரசியல் அரங்கில் சூயஸ் கால்வாய் சம்பவத்தை அடுத்து உலக அரசியல் சக்தி களை வேறொரு வகையில் மூன்றாக வகைப்படுத்தினார். ''முதலாவது சக்தி மிகப் பெரிய ஏகாதிபத்திய அரசான அமெரிக்கா. இரண்டாவது சக்தி இரண்டாந்தர ஏகாதி பத்திய அரசுகளாக இருக்கும் பிரிட்டனும், பிரான்சும். மூன்றாவது சக்திகள் ஒடுக்கப்பட்டநாடுகள்'' (10). இவ்வாறு பிரித்துக் கூறியது உலக அரசியல் சக்திகளை அப்போது சரியாக வகைப்படுத்தியதாக இருந்தது.

சோவியத்தில் குருசேவ் திருத்தல்வாதிகள் அதி காரத்தை கைப்பற்றி ரஷ்யாவை ஒரு சமூக ஏகாதிபத்தி யமாக உருமாற்றியது உலக அரசியல் சக்திகளிடையே ஒரு முக்கியமான மாற்றத்தைக் குறித்தது. ருஷ்ய சமூக ஏகாதிபத்தியம் விரைவிலேயே அமெரிக்க ஏகாதிபத்தி யத்திற்கு நிகராக பொருளாதார ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டது. உலகின் மிகப் பெரிய இரு ஏகாதி பத்திய வல்லரசுகளாகின அமெரிக்காவும், ரஷ்யாவும். அதே நேரத்தில் வியட்நாம், லாவோஸ், கம்போடியா நாடுகளிலிருந்து அமெரிக்கா அடித்து விரட்டப்பட்டதும், அய்ரோப்பா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன் னேறி வளர்ச்சியுற்று அமெரிக்காவுடனான போட்டி யிடும் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பழைய நிலையில் பல வீனத்தைக் குறித்தது. அது தனது மேலாதிக்கத்தைத் தற்காத்துக் கொள்ளும் நிலையில் இருப்பதை வெளிப் படுத்தியது. அதே நேரத்தில் சமூக ஏகாதிபத்தியம் புதிதாக உலக அரசியல் அரங்கிற்கு வந்தது, அது ஆக்கிர மிப்பு நிலையில் இருப்பதைக் குறித்தது.

உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட இந்த மாற்றங்களைத் தொடர்ந்து மாவோ உலகை பின்வருமாறு வகைப்படுத்தினார். அவர் கூறினார்: ''என்னுடைய கண்ணோட்டத்தில் அமெரிக்காவும் சோவியத்யூனியனும் முதல் உலகமாக அமைகின்றன. ஜப்பான், அய்ரோப்பா, கனடா ஆகிய இடைப்பிரிவுகள் இரண்டாம் உலகுக்குரியது. நாம் மூன்றாம் உலகத்தினர். மூன்றாம் உலகம் அதிக மக்கள் தொகை கொண்டது. ஜப்பானைத் தவிர ஆசியா முழுவதும் மூன்றாவது உலகுக்குரியது. ஆப்பிரிக்கா முழுவதும் மூன்றாவது உலகைச் சேர்ந்தது. லத்தீன் அமெரிக்காவும்கூட அப்படித்தான்''(11) 1974ல் இவ்வாறு உலகை மூன்று வகையாகப் பிரித்த மாவோ 1976ல் முதல் உலகின் இரு வல்லரசுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி 'அமெரிக்கா இவ்வுலகில் தன்னுடைய நலன்களைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறது. சோவியத் யூனியன் தன்னுடைய நலன்களை விரிவாக்கிக் கொள்ள விரும்புகிறது. இதை எப்படியும் மாற்ற முடியாது' (12) என்று கூறினார். இவ்வாறு மார்க்சிய ஆசான்கள் உலக அரசியல் சக்திகளை அவ்வப்போது வகைபிரித்து அறிந்தது ஏன்?

1918ல் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துடன் சோவியத் யூனியன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட போது 'அது ஏகாதிபத்தியத்திடம் சரணடைதல்' என்றும் 'ஒரு சோசலிச அரசாங்கம் புரட்சிகர யுத்தத்தின் மூலமாக ஏகாதிபத்தியத்தை முறியடிக்க வேண்டும்' என்றும் கூறி சமாதான உடன்படிக்கையை எதிர்த்தவர்களுக்கு லெனின் அளித்த பதில் இக்கேள்விக்கு அடிப்படையான விளக்கமளிப்பதாக இருக்கும்.

ஏகாதிபத்தியத்தை முற்றாக ஒழிப்பதுதான் இந்த சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி. ஆனால் ஏகாதிபத்தியத்தை

ஒழிப்பது என்பது உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுடன் இணைந்துள்ளது. இது ஒவ்வொரு நாட்டிலும் தமது சொந்த பூர்சுவா ஆளும் வர்க்கங்களை எதிர்த்து பாட்டாளி வர்க்கம் நடத்தும் உள்நாட்டு புரட்சி யுத்தத்தால் மட்டுமே சாத்தியமாகும். இவ்வாறு உலகம் எங்கும் பாட்டாளி வர்க்கம் ஒன்று திரண்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் பலம் பெறும் வரை முதலாளித்துவ உலகத்துடனான தீர்மானகரமான யுத்தத்தைத் தள்ளிப் போடுவது மிகவும் அவசியமாகும்; உலக அரசியல் சக்திகளைப் பிரித்தறிந்து ஏகாதிபத்திய முகாமில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை பருண்மையாகப் புரிந்து கொள்வதும் அவற்றைப் பயன்படுத்தி "இடைக்காலத்தை' அதிக பட்சம் நீட்டித்துக் கொள்வதும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்.

அந்த அடிப்படையிலேயே வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கமான சோவியத் யூனியன், புரட்சி வெற்றி பெற்ற பின், ஜெர்மனியுடன் மிக மோசமானதே எனினும் 1918ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. ''முன்னேற்றமடைந்த நாடுகள் பலவற்றிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி விரைவாக முதிர்ச்சியடையும் ஒரு கால கட்டத்தை எதிர்பார்த்து, முற்றிலும் அது முதிர்ச்சி அடைவதை எதிர்பார்த்து நடந்து கொண்டோம்''(13) என்று லெனின் கூறினார்.

''எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்துவிடும்-உள்ளபடியே ஒன்று சேர்ந்து புரட்சியைத் தொடங்கிவிடும்—புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை படிப்படியாக ஒழிப்பது மூலதனத்தின் நலன்களுக்கு உகந்ததாகும். சாத்தியமானவற்றை எல்லாம் செய்து புரட்சிகரமான தொழிலாளர்களின்

படைப்பிரிவுகள் தனியொரு மாபெரும் சர்வதேச சைனியமாக ஒன்று சேர்ந்து விடும் தருணம் வரை அல்லது அந்தத் தருணத்திற்குப் பிறகு வரை நிர்ணயகர மான போராட்டத்தைத் தள்ளிப் போடக் கிடைக்கும் மிகச்சிறு சிறு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள் வது நமது நலன்களுக்கு உகந்ததாகும்.''(14)

''நம்முடைய ராஜதந்திர முறைகள் மூலமாகச் செய்யக்கூடிய ஒவ்வொன்றையும் செய்து, யுத்தம் ஏற்படு வதைத் தாமதப்படுத்துவது, இடை ஓய்வுக் காலத்தை நீடிக்குமாறு செய்வது நமது கடமை''. (15)

''தனியான சமாதானத்தைச் செய்து கொள்வதன் மூலம் நாம் இரண்டு பகைமையான ஏகாதிபத்திய கோஷ்டிகளிடம் இருந்தும் இன்றைய தருணத்தில் எந்த அளவு அதிகமாக சாத்தியமோ அந்த அளவுக்கு நம்மை நாமே விடுவித்துக் கொள்கிறோம். அவற்றின் பரஸ்பர விரோதத்தையும், போர்ச் செயலையும் நாம் நமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறோம்''. (16)

லெனின் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட தற்கும், ஸ்டாலின் இரண்டாம் உலகப் போர் தருணத் தில் பிரான்ஸ், செக்கஸ்லோவிகியா, பிரிட்டன், அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்கும், பின்னர் ஏகாதிபத்திய அரசு களுடன் இணைந்து பாசிச எதிர்ப்பு அய்க்கிய முன்னணி கட்டியதற்கும் மேற்குறிப்பிட்ட அணுகுமுறையே காரணமாகும்.

உலக அரசியல் சக்திகளில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது சரியாகக் கண்டறிந்து வகைபிரித்தறிவது பாட்டாளி வர்க்கம் எதிரிகளின் தாக்குதலிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளும் காலவாய்ப்பைப் பெறவும், எதிரிகளின்

தாக்குதலுக்கு எதிராக அவற்றின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி ஒப்பந்தங்களையோ, அய்க்கிய முன்னணி களையோ ஏற்படுத்தவும், ஒவ்வொரு கட்டத்திலும் பிரதான எதிரியைக் கண்டறிந்து எல்லா வகையிலும் அதிக பட்ச சக்திகளைத்திரட்டி தாக்குதல் தொடுக்கவும் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு வழிகாட்டு வதற்கேயாகும். இவ்வாறு செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களோ, கட்டப்படும் அய்க்கிய முன்னணி களோ ஏகாதிபத்திய யுத்தம் மற்றும் புரட்சி யுத்தம் ஆகியவற்றின் காரணங்களை அகற்றி விடுவதில்லை, ஏகாதிபத்தியங்களை ஒழித்துவிடுவதில்லை, மாறாக புரட்சி யுத்தத்தின் வளர்ச்சியையும், ஏகாதிபத்தியத்தின் அழிவையும் துரிதப்படுத்துவதற்கான வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்துகிறது.

பிரதான எதிரியை எதிர்த்த தனிப்பட்ட ஒப்பந்தங் களும், கூட்டான அய்க்கிய முன்னணிகளும் பெரும் பாலும் அரசுகளுக்கிடையே நிகழக் கூடியவையே. இவற்றை வெற்றிபெற்ற பாட்டாளி வர்க்க அரசு மட்டுமே வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்பதை இங்கு குறித்துக் கொள்ளவேண்டும். எவ்வா றாயினும் இவை எவ்வகையிலும் ஒப்பந்தம் அல்லது கூட்டணியில் பங்கு கொள்ளும் நாட்டின் பாட்டாளி வர்க்கம் ஆளும் பூர்சுவா வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் உள்நாட்டுப் புரட்சிப் போரைக் கட்டுப்படுத் துவதில்லை. எனவேதான் லெனின் கூறினார்: "நமது வேண்டுகோள் அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் ஒருங்கே விடப்பட வேண்டும். நாம் அரசாங்கங்களைப் புறக்கணிக்க முடியாது. காரணம், அவ்வாறு செய்வது சமாதானத்தை செய்து கொள்வதற்கான சாத்தியப் பாடுகளைத் தாமதப்படுத்தும். ஒரு மக்கள் அரசாங்கம் அவ்வாறு செய்யக்கூடாது. அதே சமயம் மக்களுக்கு

வேண்டுகோள் விடுக்காமல் இருக்கும் உரிமை நமக்கு இல்லை. எல்லா இடங்களிலும் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. எனவே போர் மற்றும் சமாதானம் என்ற பிரச்சனையில் தலையிடுவதற்கு நாம் மக்களுக்கு உதவ வேண்டும்''. (17)

ஆனால் உலக அரசியல் சக்திகளை வகை பிரிப்பது பற்றி, குறிப்பாக மாவோ எழுபதாம் ஆண்டுகளில் உலகை மூன்றுவகை அரசியல் சக்திகளாக பிரித்தது பற்றி அது 'வர்க்க நிலைபாட்டைக் கைவிடுவதாகும்' என்றும் 'புரட்சியைக் கைவிடுவதாகும்' என்றும் பல்வேறு வகையான விமர்சனங்களை ஒரு தரப்பு புரட்டல் வாதிகள் முன்வைத்துள்ளனர். இவர்கள் உலக நாடுகளை மூன்று வகையாகப் பிரிப்பதையே எதிர்க்கிறார்கள். அதே நேரத்தில் மற்றொரு வகை புரட்டல் வாதிகள் மூன்றுலகை வகைப்படுத்தும் கோட்பாடு ஏகாதிபத்தியத்தையும் மேலாதிக்க வல்லரசுகளையும் வீழ்த்தி, சோசலிசம், கம்யூனிசத்தை அடைவதற்கான யுத்த தந்திரத் தேவைகளை நிறைவேற்றுவதாகக் கூறி, புரட்சியையும், வர்க்கப் போராட்டத்தையும் கைவிடுகின்றனர். முன்னதை ரசிய திரிபுவாதிகளும் (அவர்களோடு அல்பேனிய வறட்டுவாதிகளும் சேர்ந்து கொள்கிறார்கள்), பின்னதை சீன டெங் திரிபுவாதக் கும்பலும் செய்து வருகின்றனர். ●

# 7. மூன்றுலகக் கோட்பாடும் டெங் கும்பலின் திருத்தல்வாதமும்

குருசேவ் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றி சோவியத் யூனியனை ஒரு சமூக ஏகாதிபத்தியமாகவும், மேலாதிக்க வல்லரசாகவும் மாற்றியமைத்த பின் உலக அரசியல் சக்திகளிடையே எழுபதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றத்தை மாவோவின் மூன்றுலகக் கோட்பாடு, எடுத்து முன் வைத்தது. அது இன்றைய உலகின் பிரதான எதிரிகளை அடையாளம் காட்டுவதுடன் அதற்கு எதிரான அதிகபட்ச சக்திகளை அணி திரட்டிப் போராடவும் வழிகாட்டுகிறது. அந்த வகையில் சர்வதேச பாட்டாளி வர்க்கம் ஏகாதி பத்தியத்துடனான இறுதி யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு போதிய தயாரிப்பில் ஈடுபடுவதற்கான கால அவகாசத்தை ஏற்படுத்தவும், இறுதி யுத்தத்தைத் தாமதப் படுத்தவும், எதிரிகளுக்கு இடையிலான முரண்பாடுகளை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வழி காட்டுகிறது. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மூன்றுலகக் கோட்பாட்டின் பெயரால் (தலைவர் மாவோவின் மூன்று உலகை வகைப்படுத்தும் கோட்பாடு மார்ச்சிய-லெனினியத்திற்கு ஒரு மாபெரும் காணிக்கை என்ற பெயரில்-1977 நவம்பர் 1ல் 'மக்கள் தினசரி'யில் அதன் ஆசிரியர் குழுவின் பெயரில் வெளி வந்திருக்கும் ஒரு கட்டுரை மூலம்) திருத்தல்வாதத்தை முன் தள்ளியிருக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உலகின் முகத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றம்-

300 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் ஏறக்குறைய 80 நாடுகள் காலனிய அடிமைத்தளைகளை உதறிவிட்டு 'அரசியல் சுதந்திரம்' பெற்றதும், உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழும் நாடுகளில் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஆட்சி அதிகாரம் ஏற்பட்டதும் ஆகும். இது உலகத்தின் மொத்த தோற்றத்தையே மாற்றி அமைத்தது.

சர்வதேச அரங்கில் சோசலிச நாடுகள் மிக முக்கியமான சக்தியாக மாறியதைக் காரணம் கூறி குருசேவ் திருத்தல்வாதக்கும்பல் அனைத்து துறைகளிலும் திருத்தல்வாதத்தை முன்தள்ளியது. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேச அரங்கில் தேசிய விடுதலை இயக்கங்களில் ஏற்பட்ட பிரமாண்டமான மாற்றங்களைக் காரணம் கூறி சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அரசியல் வழியில் திருத்தல்வாதத்தை முன் தள்ளியது.

மாபெரும் மாற்றங்கள் மாபெரும் புரட்சிகர மாற்றத்துக்கு பயன்பட வேண்டும். கம்யூனிஸ்டுகளுக்கு அவ்வாறுதான் பயன்படும். ஆனால் புரட்டல்வாதிகளால் மாபெரும் மாற்றங்கள் (60ஆம் ஆண்டுகளில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியாலும், 70 ஆம் ஆண்டுகளில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியாலும்) திருத்தல்வாதத்தை முன் தள்ளுவதற்கே பயன்படுத்திக் கொள்ளப் பட்டுள்ளன.

''இன்று ஏறக்குறைய 300 கோடி மக்கள் வாழும் நாடுகள் காலனிய அடிமைத் தளைகளை உதறி எறிந்து விட்டு 'அரசியல் சுதந்திரம்' பெற்றிருக்கின்றன. 'இந்த' சுதந்திரமடைந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரு நீண்டகாலத் துக்கு தொடர்ந்து பிரதான சக்தியாக இருக்கமுடியுமா?'' என்ற ஒரு கேள்வியை எழுப்பி ''ஆம்'' என்று பதில்

அளிக்கிறது மக்கள் தினசரியின் கட்டுரை. அது கூறுகிறது "உலக மக்கள் தொகையில் பெரும்பான்மையைக் கொண்ட அடிமைப்படுத்தப்பட்ட சுமார் 300 கோடி மக்கள் காலனி ஆதிக்கத் தளைகளை உதறிவிடுபட்டு இருக்கிறார்கள். உலக வர்க்க சக்திகளின் சமநிலையில் முற்போக்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. மூன்றாம் உலகில் உள்ள பல நாடுகள் இன்று தங்களுக்கென ஒரு சொந்தப் படையை வைத்திருப்பதுடன், தங்களது கரத்தில் உள்ள அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி சுதந்திரமான மூன்றாம் உலக நாடுகள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த கடந்த காலத்தைவிட அதிகமான அரங்குகளையும் இன்னும் பல்வேறு வகையான வழி வகைகளையும் பெற்றிருக்கின்றன."

1920ம் ஆண்டுகளில் லெனின் காலத்தில் இருந்த நிலைமைகளிலிருந்து இது பிரமாண்டமான மாற்றமே—பெரும்பாலும் காலனிகளாகவும், அரைக்காலனிகளாகவும் இருந்த 70 சதவீத மக்கள் வாழ்ந்த நாடுகள், இன்று உள்நாட்டு வர்க்கங்களின் கரங்களிலேயே அரசியல் அதிகாரம் கொண்ட நாடுகளாக மாறியிருக்கின்றன என்பது மிகப் பெரிய மாற்றமே- என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த உண்மை, இந்த நாடுகளில் அரசியல் அதிகாரமும், படையும் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பெரும்பாலும் பிற்போக்கு வர்க்கங்களின் கரங்களிலேயே மாறியிருக்கின்றன என்ற உண்மைகளோடு இணைந்ததாகும்.

இதன் பொருள், இந்நாடுகளில் உண்மையிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளாக உள்ள பரந்துபட்ட உழைக்கும் மக்கள் மற்றும் புரட்சிகர இயக்கங்களை ஒடுக்குவதற்கான கருவிகளாகவே ஆளும் வர்க்கங்களின் கரங்களில் உள்ள அரசியல் அதிகாரமும், படையும் பயன்

படுகின்றன என்பதாகும். இது ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை பலவீனப்படுத்துவதேயன்றி பலப்படுத்துவதல்ல.

1920ம் ஆண்டுகளில் இந்நாடுகளின் பூர்சுவா வர்க்கம் பற்றியும் அவற்றின் அரசியல் கட்சிகள் பற்றியும் லெனின் எச்சரித்தார். அது ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை பெற்றிருக்கும்போதே பெரும்பாலான உழைக்கும் மக்களின் ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியங்களுடன் கூட்டு சேர்ந்து வருவதையும், அவை புரட்சிகரமாக இல்லாதபோது — விவசாயிகளும், தொழிலாளர்களும் புரட்சிகரமாக ஒழுங்கமைவதற்கு ஆதரவாக இல்லாதபோது-எதிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறினார். ஏகாதிபத்தியவாதிகள் தமக்குச் சார்பாக இந்த வர்க்கங்களைப் பயன்படுத்தி சீர்திருத்தவாத இயக்கங்களைத் தோற்றுவித்திருப்பது பற்றியும் எச்சரித்தார். முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சியும், இந்நாடுகளின் புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியும் பரந்துபட்ட விவசாயிகளைச் சார்ந்து நின்று, தேசியவிடுதலை புரட்சியை தனது சுதந்திரமான தலைமையின் கீழ் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், மிகப் பின்தங்கிய முதலாளியத்துக்கு முந்திய உறவுகள் நிலவும் நாடுகளில் கூட, விவசாயிகள் சோவியத்துக்கள் பற்றிய பிரச்சாரமும், அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், முன்னேறிய நாடுகளின் பாட்டாளிவர்க்கம் மற்றும் பின்தங்கிய நாடுகளின் தேசியவிடுதலைப் புரட்சி ஆகியவற்றின் ஒன்றிணைந்த இணைப்பின் மூலம் மட்டுமே உலகப் புரட்சி சாத்தியமாகும் (1) என்றும் வலியுறுத்தினார்.

1925ல்காலனிய சார்புநாடுகளின்பூர்சுவாக்களில்ஒரு பிரிவு, மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் கூட்டமைத்துக்கொள்வது பற்றியும்,எனவே அவற்றை அம்பலப்

படுத்தி தனிமைப்படுத்தாமல் தேசியவிடுதலைப் புரட்சி கள் வெற்றிபெற முடியாது என்பது பற்றியும் ஸ்டாலின் எச்சரித்தார் (2).

1920-25 ஆண்டுகளில் இவ்வாறு தேசிய விடுதலைப் புரட்சிக்கு எதிராக ஏகாதிபத்தியங்களுடன் கூட்டமை த்துக் கொண்ட சீர்திருத்தவாத முதலாளிய வர்க்கங்க ளும், அவற்றின் அரசியல் கட்சிகளுமே பெரும்பாலான நாடுகளில் இரண்டாம் உலகப் போருக்கு பின் பெற்ற 'அரசியல்சுதந்திரத்தினால்' அதிகாரத்துக்குவந்துள்ளன. அவை மக்களின் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளுடன் (மற்ற பிற் போக்கு அரசுகளுடனும் கூட) கூட்டுச் சேர்ந்து கொள் வதில் புதிய மாற்றம் எதுவும் இல்லை. மாறாக மக்களுக் கும், புரட்சிகர ஜனநாயக இயக்கங்களுக்கும் எதிராக தற்போது கூடுதலாக அவற்றின் கரங்களிலே அரசியல் அதிகாரமும், ராணுவமும் இருக்கின்றன. எனவே 1920ம் ஆண்டுகளை விட தற்போது இந்நாடுகளின் பூர்சுவா வர்க்கம் கூடுதலாக பிற்போக்கானவை யாகவும்அதனால் புரட்சிகர இயக்கங்களுக்கு எதிரிகளாகவும் மாறியுள்ளன. அவ்வாறு இருக்கும்போது இந்நாடுகளின் ஆளும் வர்க்கங் களிடம் அரசியல் அதிகாரமும், ராணுவமும் இருப்பது ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு எப்படி கூடுதல் சாதனங்களாக அமைய முடியும்?

எனவே பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளும் அவற்றின் கூட்டணியும், அவை இரண்டாம் உலக நாடுகளுடன் வைத்துக் கொள்ளும் கூட்டணியும் ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதி ரான தீர்மானகரமான அடி கொடுப்பதற்குரிய சாதன மாக நிச்சயமாக இருக்க முடியாது.

காலனி மற்றும் சார்பு நாடுகளின் தேதிய விடுதலை இயக்கங்கள் உலகப் புரட்சியின், ஏகாதிபத்திய எதிர்ப்

பின் பிரதான சக்தியாக விளங்கும் என்று லெனின் கருதியபோது, அது அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயிகள், தொழிலாளர்கள் கூட்டணியை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர விடுதலை இயக்கங்களையேயாகும்; சோவியத் அதிகாரத்தை நிறுவுவதற்கான ஜனநாயகப் புரட்சி இயக்கங்களையேயாகும்.

இதற்குப் பதிலாக லெனின் பெயரில், தேசிய விடுதலைப் போராட்டங்கள் உலகப்புரட்சியின் பிரதான சக்தி என்ற கோட்பாட்டை காலனி மற்றும் சார்பு நாடு களின் பிற்போக்கு வர்க்கங்களின் கூட்டணியே பிரதான சக்தி என்பதாக மாற்றுவது, காலனி மற்றும் சார்பு நாடுகளின் தேசியவிடுதலை இயக்கங்கள் பற்றிய லெனினிய கோட்பாடுகளுக்கு எதிரானதாகும். புரட்சி கர வர்க்கப் போராட்டக் கொள்கைக்குப் பதில் எதிர்ப் புரட்சிகர வர்க்க சமரசக் கொள்கையை முன்வைப்ப தாகும்.

"அனைத்து உலகிலும் நடைபெறவிருக்கும் சோசலிசப் புரட்சி, ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் அதன் அதன் சொந்த நாட்டு முதலாளி வர்க்கத்தின் மீது பெறும் வெற்றியாய் இருப்பதோடு மட்டும் நின்று விடாது என்பது முற்றிலும் தெளிவாகி வருகிறது" (3) என்று லெனினும் ""முன்னேறிய அய்ரோப்பிய நாடுகளின் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் காலனி, நாடு களின் தேசிய விடுதலை இயக்கப் புரட்சியும் ஒன்று சேர்ந்து உலக அளவில் ஒரே முனையில் ஏகாதிபத்தி யத்தை எதிர்த்து அய்க்கிய முன்னணியை அமைப்பதை தவிர்க்க முடியாது" (4) என்று ஸ்டாலினும் கூறினர்.

இன்றும் கூட இது உண்மையே. அரசியல் சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படும் மூன்றாம் உலக நாடுகளின்

ஆளும் வர்க்கங்களும், அரசுகளும் அந்நாடுகளின் உழைக்கும் மக்களின் ஜனநாயக இயக்கங்களை தமது அரசியல் அதிகாரம், படை கொண்டு ஒடுக்குவதன் மூலமும், அரசியல் பொருளாதார அரங்கில் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருப்பதன் மூலமும் ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கத் தூண்களாக மூன்றாம் உலக நாடுகளை வைத்திருக்கின்றன.

எனவே மூன்றாம், இரண்டாம் உலக நாடுகளின் பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும், தத்தம் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களையும், அரசையும் தூக்கி எறிந்து அதிகாரத்தை கைப்பற்றுவதன் மூலம் தமது நாட்டின் ஏகாதிபத்திய ஆதாரத்தூண்களாக இருக்கும் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களை தூக்கி எறிவது மட்டுமல்ல, ஏகாதிபத்தியங்களையே தமது மண்ணிலிருந்து தூக்கி எறிகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. எனவே ஒவ்வொரு நாட்டின் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிப் போராட்டமும், இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் தமது சொந்த பூர்ஷ்வா வர்க்கம், அதன் அரசியல் அதிகாரம் ஆகியவற்றை எதிர்த்து மட்டுமல்ல, உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் நடத்தும் போராட்டத்தின் மூலமே வெற்றிபெற முடியும் என்ற லெனினிய கூற்று இன்றும் முற்றிலும் உண்மையாகும்.

ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக்க வல்லரசுகளுக்கெதிரான போராட்டத்தில் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் துணையாக இருக்கும் பிரதான சக்தி தேசிய விடுதலைஇயக்கங்கள் என்று கூறும்போது,அது மூன்றாம் உலக நாடுகளின் தொழிலாளர் விவசாயிகள், உள்ளிட்ட புரட்சிகர வர்க்கங்களின் அரசியலதிகாரத்திற்கு போராடும் புரட்சிகர இயக்கங்களையேயன்றி, அந்நாடுகளின் பிற்போக்கு ஆளும் முதலாளிய வர்க்கங்களின்,

அவற்றின் அரசுகளின் கூட்டணியை அல்ல. அவ்வாறு கூறுவது லெனினியத்தை முதலாளித்துவ சித்தாந்தத் திற்கு பலியாக்குவதாகும்.

மூன்றுலகக் கோட்பாடு எதிரிகளுக்கு இடையிலான முரண்பாட்டையும், பிரதான எதிரிகளையும் சுட்டிக் காட்டுவதுடன், பிரதான எதிரிக்கு எதிராக எதிரி களுக்கு இடையே உள்ள முரண்பாட்டைப் பயன்படுத்தி சர்வதேச பாட்டாளி வர்க்கம் எதிரிகளை பலவீனப் படுத்தவும், தீர்மானகரமான யுத்தத்தை நடத்துவதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் பலம் பெறும் வரை அத் தகைய மோதலை தள்ளிப்போடவும், எதிரிகளுக்கு எதி ராக அதிகபட்ச சக்திகளை அணிதிரட்டவும், ஒரு வழி காட்டல் தரும் கோட்பாடேயன்றி வேறல்ல, ஆனால் ''மக்கள் தினசரி''யின் கட்டுரை ''இந்தக் கோட்பாடு சர்வதேச பாட்டாளி வர்க்கம் உலகத்திலுள்ள ஒடுக்கப் பட்ட மக்கள், தேசங்கள் ஆகியவற்றுக்கு தற்கால யுத்த தந்திர தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யவில்லை- சோசலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் வெற்றிக்கான போராட்டத்தின் யுத்ததந்திர தேவைகளையும் இது பூர்த்தி செய்கிறது'' என்று கூறுவதன் மூலம் ஏகாதி பத்தியம், குறிப்பாக மேலாதிக்கவல்லரசுகளுக்குஎதிராக கட்டப்படும் மூன்றாம் உலக, இரண்டாம் உலக அரசு களின் கூட்டணியை, ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக் கத்தை ஒழிப்பதற்கான யுத்த தந்திர வழியாகவே முன் வைக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இது ஏகாதி பத்தியத்துக்கு எதிராக உலகப் பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் அய்க்கியம் மற்றும் போராட்டத்தையும் புரட்சியையும் கைவிட்டு, வர்க்கப் போராட்டத்திற்கும், புரட்சிக்கும் எதிரான வர்க்க சமரச பிற்போக்கு கொள்கையை முன் தள்ளுவதன்றி வேறல்ல.

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் 'தாயகத்தை பாதுகாப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் தத்தம் ஏகாதிபத்திய பூர்சுவாக்களுடன் சமரசம் செய்து உள் நாட்டு புரட்சி யுத்தத்தை கைவிட்டதை லெனின் கண்டனம் செய்தார். ஏகாதிபத்திய காலத்திற்கு முன் நிலப்பிரபுத்துவ ஆதிக்கங்களை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கங்கள் நடத்திய புரட்சிகர யுத்தங்களை மார்க்ஸ் ஆதரித்ததை உதாரணம் காட்டி 'தாயகத்தை பாதுகாப்போம்' என்ற தமது முழக்கம் சரியானது என வாதிட்ட இரண்டாம் அகில சந்தர்ப்ப வாதிகள், முதலாளித்துவ வளர்ச்சியால் சகாப்தகரமான மாற்றம் ஏற்பட்டிருப்பதையும், 'நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் தேசங்களின் விடுதலையாளனாக இருந்த முதலாளித்துவம், அதன் ஏகாதிபத்தியக் கட்டத்தில் தேசங்களின் மிகப் பெரிய ஒடுக்குமுறையாளனாக மாறியிருக்கிறது' (5) என்பதையும் பார்க்க மறுத்தனர். இதை எடுத்துக் காட்டிய லெனின், வரலாற்று நிலைமைகளை மறந்து விட்டு யுத்தங்கள் அனைத்தையும் ஒரே மாதிரியாக பார்க்கும் சந்தர்ப்ப வாதிகளை கண்டனம் செய்தார்.

ஆனால் இன்று இதை திருத்தல்வாதிகள் இரண்டாம் உலக நாடுகளுக்கு 'தேசிய சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும்' என்ற முழக்கம் சரியானதாக இருக்கும் என்பதாக அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்குப் போதிக்கிறார்கள். இது இரண்டாம் உலக நாடுகளின் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்துகொண்டு உள்நாட்டுபுரட்சியைக்கைவிட வேண்டும் எனக் கோருவது அன்றி வேறல்ல. மேலாதிக்க வல்லரசுகளுக்கும், இரண்டாம் உலக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடு, இருவேறு ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடேயன்றி, இரண்டு ஒடுக்கு முறையாளர்களுக்கு இடையிலான முரண்பாடேயன்றி, தேசிய எழுச்சிக்கும், ஏகாதிபத்தியத்திற்கும்

இடையிலான முரண்பாடு அல்ல. இவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு மேலாக, அவற்றில் ஒன்றுக்கு எதிராக உள்நாட்டுப் போரைக் கைவிடவேண்டும் எனக் கோருவது முற்றிலும் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளின் வர்க்க சமரசக் கோட்பாடேயன்றி வேறல்ல.

இவ்வாறு சீன திருத்தல்வாதம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் பிரதான சக்தி என்ற லெனினிய கோட்பாட்டைமூன்றாம் உலக நாடுகளின் அரசுகளுக்கிடையிலான கூட்டணி பிரதான சக்தி என்பதாக திரித்து, புரட்சிகரமக்களையும் புரட்சிகர போராட்டங்களையும் கைவிடுவதன் மூலமும், ''தாயகத்தை பாதுகாப்போம்'' என்ற இரண்டாவது அகில சந்தர்ப்பவாதிகளின் அம்பலப்படுத்தப்பட்ட கோட்பாடுகளையே அதே வாதங்களுடன் மீண்டும் இரண்டாம் உலக ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்திற்கு போதிப்பதன் மூலமும், மார்க்சிய லெனினியத்தை அப்பட்டமாகத் திரித்து புரட்சிக்கு துரோகமிழைக்கும் புரட்டல்வாதிகளாக வெளிப்பட்டிருக்கிறார்கள். ●

# 8. சோசலிசமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்: ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்தல்வாதம்

சர்வதேச உறவுகளில் 'மூன்று சமாதானக் கோட்பாடுகள்', 'தேசிய ஜனநாயக அரசு', 'பாராளுமன்றப் பாதை'' 'யுத்தம், சமாதானம்' பற்றிய லெனினிய விரோதக் கொள்கை ஆகியவற்றின் மூலம் வர்க்க போராட்டத்தைக் கைவிட்டு உலகப் பிற்போக்கு சக்திகளுடன் வர்க்க சமரசம் செய்து கொள்ளவும், உலக நாடுகளின் பாட்டாளிவர்க்கக் கட்சிகள் அனைத்தும் சட்டவாதத்தில் மூழ்கவும், புரட்சிகர நடவடிக்கைகளைக் கைவிடவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் உள்நாட்டு யுத்தம் ஆகியவற்றைக் கைவிடவும் வழி காட்டியதுரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20வதுகாங்கிரஸ். அக்கட்சியின் 22வது காங்கிரஸ் மேலும் ஒரு படி சென்று உள்நாட்டிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் வர்க்கப் போராட்டத்தையும், புரட்சிகர செயல்பாடுகளையும் கைவிடவும், வர்க்க சமரசம் செய்து கொள்ளவும் வழிகாட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்தல் வாதத்தை சகல கோணங்களிலும், சகல பரிமாணங்களிலும் முழுமை பெறச் செய்தது.

அக்கட்சியின் 22வது காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட வேலைத்திட்டம் அந்நாட்டின் அரசு இனியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இல்லை, அது அனைத்து மக்களுக்குமான அரசாக மாறிவிட்டது என்றும், அந்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இனியும்

பாட்டாளி வர்க்கக் கட்சியாக இல்லை, அது அனைத்து மக்களின் கட்சியாக மாறி விட்டது என்றும் பிரகடனப் படுத்தியதன் மூலம் இதைச் செய்தது.

இதற்கு அவர்கள் கூறிய காரணம்: "சோவியத்யூனிய னில் சோசலிச உடமை மாற்றம் முழுமையடைந்து விட்டது, அது ஒரு உயர்ந்த மட்ட சோசலிச சமுதாயத் தில் பிரவேசித்துள்ளது. இப்போது அங்கே பகை வர்க் கங்கள் இல்லை. எனவே வர்க்கப் போராட்டமும் இல்லை. தொழிலாளர்கள், விவாயிகள் மற்றும் அறிவுத் துறையினர் என்ற மக்கட்பிரிவினர் மட்டுமே உள்ளனர். இந்த மக்கட் பிரிவினர் முழுவதினுடையவும் அபிலாசை களையும் பிரிதிநிதித்துவப்படுத்துவதாலும், மக்கள் அனைவரும் மார்க்சிய லெனினியத்தையும், கம்யூனிச கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு இருப்பதாலும் இத்தகைய மாறிய வளர்ந்த எதார்த்தமான சமுதாயச் சூழல் இனியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளி வர்க்க கட்சி என்பதை அவசியமற்றதாக்கி விட்டது. அரசு அனைத்து மக்களுக்கானதாகவும், கட்சி அனைத்து மக்களுடையதாகவும் மாறிவிட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளி வர்க்க கட்சியின் தேவைகள் சோசலிச உடமை மாற்றத்தின் முழுநிறை வெற்றியுடன் மறைந்து விட்டது. அதன் உயர்கட்டத்தில் தேவையற்றதாகி விட்டது' என்பதாகும்.

சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் தேவை குறித்து மார்க்சிய ஆசான்களை மேற்கோள் காட்டி கேட்டவர்களுக்கு அவர்கள் 'முத லாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு செல்வதற்குத் தான் [பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், பாட்டாளி வர்க்க கட்சியும் தேவை என்று கூறியிருக்கிறார்களே தவிர, சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்குச் செல்வ

தற்கு அல்ல' என்று புரட்டல்வாத விளக்கமளித்தார்கள். தமது நாட்டில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறும் கட்டம் முடிவுற்று விட்டதென்றும், சோசலிசத்தின் உயர் மட்டத்திலிருந்து கம்யூனிசத்திற்கு செல்லும் கட்டத்தில் இருக்கிறது என்றும் இன்னும் கால் நூற்றாண்டில் முழுநிறைவு கம்யூனிச சமுதாயம் கட்டியமைக்கப்படும் என்றும் அவர்களுடைய 22வது காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் அறிவித்தார்கள்.

''முதலாளித்துவ சமுதாயத்துக்கும், கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையே ஒன்று மற்றொன்றாய் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் ஒன்றுள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்காலக் கட்டம் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என்பது அன்றி வேறு எதுவாகவும் இருக்கமுடியாது'' (1) என்ற மார்க்சின் மேற்கோளையும் ''கம்யூனிசத்திற்கான வளர்ச்சியானது, பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது'' (2) என்ற லெனின் மேற்கோளையும் சுட்டிக்காட்டி, கேட்பவர்களுக்கு இங்கு மார்க்சும், லெனினும் கம்யூனிசம் என்று குறிப்பிடுவது சோசலிசத்தையே (கம்யூனிசத்தின் கீழ்க் கட்டத்தையே) என விளக்கமளித்தனர். ஆனால் இவர்களுடைய விளக்கம் அப்பட்டமான புரட்டல்வாத விளக்கமேயாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வர்க்கங்களுடனும் வர்க்கப் போராட்டங்களுடனும் இணைந்ததாகும். லெனின் கூறினார் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வர்க்கப் போராட்டத்துக்கு உரிய காலமாகும் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்ள அஞ்சுகிறார்கள். வர்க்கங்கள் ஒழிக்கப்படும்வரை வர்க்கப் போராட்டங்கள் தவிர்க்கப்பட முடியாததாகும். மூலதனம்

வீழ்த்தப்பட்டதும் உடனடியாக அடுத்து வரும் காலகட்டத்தில் வடிவத்தில் மாற்றமுற்று, அது குறிப்பாய் மூர்க்கமடைந்து, குறிப்பாய் தனி இயல்பு உடையதாகி விடுகிறது என்பதை அவர்கள் ஒத்துக் கொள்ள அஞ்சுகிறார்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய பின் அது வர்க்கப் போராட்டத்தை நிறுத்தி விடுவதில்லை. வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரை தொடர்ந்து நடத்தியே செல்கிறது. போராட்டம் நடைபெறும் சூழ்நிலையும் போராட்ட வடிவமும் போராட்ட வழிகளும்தான் மாறுபடுகின்றன.'' (3)

இங்கு வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதைப்பற்றி கூறும் போது லெனின் பகை வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதை மட்டும் குறிப்பிடவில்லை. அவர் தொடர்ந்து கூறுகிறார் ''வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல் என்பதன் பொருள் என்ன? இதுவே சோசலிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்பதை தம்மை சோசலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வோர் எல்லோருமே அங்கீகரிக்கிறார்கள். ஆனால் அதன் உட்பொருள் குறித்து யாரும் சிந்திப்பதில்லை.''

''வர்க்கங்களை அறவேஒழிப்பதற்குச் சுரண்டலாளர்களான நிலபிரபுக்களையும், முதலாளிகளையும் வீழ்த்தினால் மட்டும் போதாது. அரசுகளுடைய சொத்துடமை உரிமைகளை ஒழித்தால் மட்டும் போதாது. உற்பத்தி சாதனங்களில் தனியார் உடமைஅனைத்தையும்ஒழிப்பது அவசியம்; நகரத்துக்கும், கிராமத்துக்கும் உள்ள பாகுபாட்டையும், உடல் உழைப்பாளர்க்கும் மூளை உழைப்பாளர்க்கும் உள்ள பாகுபாட்டையும் ஒழிப்பது அவசியமாகும் என்பது தெளிவு. இதற்கு நீண்ட நெடுங் காலம் தேவைப்படும்.'' (4)

ரசியாவில் பகை வர்க்கங்கள் இல்லை எனும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கு வர்க்கங்கள் இருப்பதை மறுக்க முடியாது. தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுத்

துறையினர் என்போர் வெவ்வேறு வர்க்கங்களே. (மக்கட் பிரிவுக்குள் அடங்கும் எனினும்) என்பதும் அங்கு நகர்ப் புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் உள்ள வேறுபாடோ, அறிவுழைப்புக்கும் உடலுழைப்புக்கும் உள்ள வேறு பாடோ முற்றிலும் அகற்றப்படவில்லை என்பதும் எல்லோரும் அறிந்ததுதான். எனவே பகை வர்க்கங்கள் இல்லை என்று காரணம் கூறி அங்கு வர்க்கப் போராட்டத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தையும் மறுக்க முடியாது.

இங்கு ஒரு விசயத்தை தெளிவுபடுத்திக் கொள்வது சரியாக இருக்கும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பகை வர்க்கங்களை ஒடுக்குவதற்காக மட்டும் தேவைப் படுவதல்ல. லெனின் கூறினார்: ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களுக்கு எதிரான பலாத்காரப் பிரயோகம் மட்டுமல்ல. பிரதான மாய்க்கூட அது பலாத்காரப் பிரயோகம் அல்ல. பாட்டாளி வர்க்கமானது உழைப்பின் சமூக ஒழுங்கமைப் பில் முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் மேலும் உயர் வான ஒருரகத்தின் பிரதிநிதியும், படைப்பாளனும்ஆகும் என்பதுதான் இந்தப்புரட்சிகர பலாத்காரப் பிரயோகத் திற்கான பொருளாதார அடிப்படை; இதன் பயனுடை மையும், வெற்றிகரமான உத்திரவாதமும், முக்கிய மானதும் இதுவே.'' (5)

மார்க்ஸ் கூறுகிறார்:

''பொதுவாக வர்க்க வேறுபாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு, அவை தங்கியிருக்கும் எல்லா உற்பத்தி உறவுகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு, இந்த உற்பத்தி உறவுகளுக்குப் பொருத்தமான எல்லா சமூக உறவுகளை யும் ஒழித்துக் கட்டுவதற்கு, இந்தசமூக உறவுகளிலிருந்து விளையும் எல்லாக் கருத்துக்களையும் புரட்சிமயமாக ஆவதற்கு அவசியமான மாறுதலுக்கான முறை என்ற

வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, புரட்சியின் நித்தியத்துவத்தைப் பிரகடனப் படுத்துகிறது சோசலிசம்.'' (6)

எனவே சொல்லிக்கொள்ளப்படும் பகை வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பின்பு கூட, நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய இரு பாலரின் ஒடுக்குமுறையை வீழ்த்திவிட்ட உழைக்கும் மக்கள் தாமே சுதந்திரமாகவும், உணர்வு பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாகக் கொண்ட, 'சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு' (7) பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவையாகும்.

வர்க்கங்கள் அற்ற கம்யூனிச சமுதாயம் நிறுவப்படும்வரை ரசியாவில் சொல்லிக் கொள்ளப்படும் உயர் மட்ட சோசலிச அமைப்பில் கூட வர்க்கங்களும், வர்க்க முரண்பாடுகளும், நகர்ப்புற-கிராமப்புற வேறுபாடும், உடல் உழைப்புக்கும் அறிவுழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளும், தொழிலாளி-விவசாயிகளுக்கு இடையிலான வேறுபாடும், பண்ட உற்பத்தியும், முதலாளித்துவ உரிமையும், மதிப்பு விதியின் செயல்பாடும் நிலவும் போது அதை ஒரு கம்யூனிச சமுதாயம் நோக்கி ஒழுங்கமைத்துச் செல்ல, அதற்கு எதிரான போக்குகளையும், சக்திகளையும் முறியடிக்க பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவையாகும். இந்தத் தேவையைப் புறக்கணிப்பதே ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது காங்கிரசின் வேலைத்திட்டம்.

பாட்டாளி வர்க்கக் கட்சி பகை வர்க்கங்கள் இல்லாதுபோன பின்பு மட்டுமல்ல, அதற்கு முன்பே கூட சோசலிச சமுதாயத்தில் மட்டுமல்ல முதலாளித்துவ சமுதாயத்தில் கூட பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும் அபிலாசைகளையும் மட்டும் பிரதிபலிப்பதல்ல,

முதலாளி வர்க்கத்துக்கு எதிராக, கம்யூனிச நலனுக்காக பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் அனைத்து புரட்சிகர வர்க்கங்களின் நலனையும், அவற்றின் அபிலா சைகளையும் பிரதிபலிக்கிறது என்பதும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நலனை மட்டுமல்ல விவசாயிகள் மற்றும் அறிவுத் துறையினர் நலனை,பகை வர்க்கங்கள் இருக்கும் போதே பிரதிபலிக்கிறது என்பதும். இது வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை யேற்கும் ஒரு கட்சிக்கும், அரசுக்கும், வர்க்கத்துக்கும் உரிய அடிப்படையான கோட்பாடு என்பதும் மார்க்சிய உண்மையின் அரிச்சுவடியாகும். இவ்வாறு கட்சியும் அரசும் பிற வர்க்கங்களின் நலன்களை,அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவது ஒரே நிபந்தனையின் பேரில்தான் - அவற்றை பாட்டாளி வர்க்க லட்சியங் களுக்கு. கம்யூனிச சமுதாயத்திற்கான பாதைக்கு ஒழுங் கமைப்பது என்ற நிபந்தனையின் பேரில்தான்—அதற்கு எதிரான போக்குகள், விலகல்களை எதிர்த்து போரிடு வது என்ற நிபந்தனையின் பேரில்தான். எனவே பகை வர்க்கங்கள்-சுரண்டும் வர்க்கங்கள்- ஒழித்துக் கட்டப் பட்ட பின் பட்டாளி வர்க்கக் கட்சியும் அரசும் தேவை இல்லை எனக்கூறுவது. புரட்சிகர வர்க்கங்களை-மக்கள் பிரிவாய் இருக்கும் வர்க்கங்களை—பாட்டாளி வர்க்க லட்சியங்களுக்கு. கம்யூனிச சமுதாயத்திற்கு வழி நடத்து வதற்காக ஒழுங்கமைப்பது, அதற்கு எதிரான போக்கு கள். விலகல்களை எதிர்த்து போராடுவது ஆகியவற்றை நிராகரிப்பது என்பதேயாகும்.

இது வர்க்கங்களும், முதலாளித்துவ உரிமைகளும் உள்ள ஒருசமுதாயத்தைகம்யூனிச சமுதாயத்தை நோக்கி வழி நடத்தும் கடமையை கைவிட்டு முதலாளித்துவ சமு தாயமாக சீரழிப்பதன்றி வேறல்ல. வேறுபட்ட வர்க்கப்

பிரிவினரிடையே, மக்கட்பிரிவினரிடையே வரும் அன்னிய போக்குகள், விலகல்களை அனுமதிப்பது (ஏனெனில் அது அனைத்து மக்களுக்குமான அரசு, அனைத்து மக்களுக்குமான கட்சி, எனவே அவர்களுடைய முதலாளியப் போக்குகள், விலகல் போக்குகளுக்கு அங்கீகாரம் உண்டு) ஒரு முதலாளிய சமுதாயத்தை மீட்டமைக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

22வது காங்கிரசில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்கக் கட்சியையும் கைகழுவி விட்ட குருச்சேவ் கும்பல், கால் நூற்றாண்டில் நாட்டில் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்கப் போவதாகப் பிரகடனப் படுத்தியதன் ஏமாற்றுத்தனம் அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. கால் நூற்றாண்டு முடிந்தபின் கூடியிருக்கும் 27-வது காங்கிரஸ், ரசியாவில் கம்யூனிசமல்ல, முதலாளித்துவமே மீட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கிறது.

27வது காங்கிரஸ் ஆவணக் கூற்றுப்படி 22வது காங்கிரசுக்குப் பின் கம்யூனிச லட்சியத்தோடு தீட்டப்பட்ட மூன்று (9, 10, 11வது) அய்ந்தாண்டுத் திட்டங்களும் தோல்வியடைந்தன. பொருளாதாரம் தேக்கத்துக்கும், பின்னடைவுக்கும் உள்ளாகியது. இன்ஜினியரிங், எண்ணெய், நிலக்கரித் தொழில், மின்சார இன்ஜினியரிங் தொழில், இரும்பு உலோகங்கள், ரசாயனப் பொருட்கள், மூலதன நிர்மாணப் பொருட்கள் ஆகியவற்றில் கவலை அளிக்கும் பின்தங்கிய நிலை நிலவுகிறது. தேவைக்கும் சப்ளைக்கும் இடையே இடைவெளி, கல்வி, கலாச்சாரம், விஞ்ஞானம், சுகாதாரம், பாதுகாப்பு, அன்றாட சேவை துறைகளில் பின்தங்கிய நிலைமை நிலவுகிறது. தொழில் துறையில் தேக்கம், விவசாயத்தில் பின்னடைவு, தரக் குறைவான உற்பத்தி ஏற்பட்டுள்ளன. தேர்ச்சித்

திறனை உயர்த்துவது, மக்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவது சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதான குறியீடுகளிலும் இலக்குகள் எய்தப்படவில்லை. மக்களின் உண்மை வருமானங்களின் அதிகரிப்பும் ஸ்தம்பித்து விட்டது.

இத்தகைய பொருளாதார நெருக்கடிகளுடன், நாடு முழுவதும் லஞ்சம், ஊழல், சிவப்பு நாடாமுறை, மந்தப் போக்கு, வேலைசெய்ய அக்கறை இன்மை, ஊதாரித் தனம், உல்லாசப் போக்கு, புல்லுருவித்தனம், அதிகார வர்க்க முறை, அதிகார துஷ்பிரயோகம், துர்நடத்தை, உழைக்காமல் ஊதியம் பெறுவது, பெரும் போக்கு. திருட்டு, கொள்ளை, சூழ்ச்சி, கையாடல், பிழைப்பு வாதம், உருப்படியான நடவடிக்கைகளுக்கு பதில் வெறும் காட்சி ஜோடனை, சமூக நீதியில் ஒழுங்கீனம் போன்ற சீரழிவான கலாச்சார வாழ்க்கை எங்கும் வியாபித்துள்ளது (8).

25 ஆண்டுகளுக்கு முன்பு கம்யூனிச சமுதாயத்தை நிறுவப் போவதாக கபடத்தனமாக அறிவித்த குருசேவ், முதலாளித்துவத்தை நிறுவ பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், கட்சியையும் கைவிட்டது மட்டுமல்ல, உற்பத்தியில் 'கம்யூனிசத்துக்குத் தேவையான பொருளாதார தொழில் நுட்ப அடித்தளத்தை உருவாக்குவது' என்றபெயரில் முதலாளிய கோட்பாடுகளான 'பொருளாதார ஊக்குவிப்புக் கோட்பாடு', 'தொழில் நிறுவன சுதந்திரம்', 'லாப நோக்கத்தை இணைப்பது' என்ற கோட்பாடுகளை புகுத்தினார். முதலாளித்துவ கோட்பாடுகள் மேலும் முதலாளிய நெருக்கடிகளையும், முதலாளிய உறவுகளையும்தான் உருவாக்குமே தவிர கம்யூனிசத்தைக் கொண்டு வர முடியாது.

27வது காங்கிரஸ் ஆவணங்கள் கூறும் சமுதாயத்தில் காணப்படும் பொருளாதார தேக்கம், நெருக்கடி மற்றும் கலாச்சார சீரழிவுகள், 20 - 22வது காங்கிரஸ்கள்

புகுத்திய முதலாளியக் கோட்பாடுகளின் விளைபொருட்களே ஆகும். இந்த பொருளாதார தேக்கம், நெருக்கடி மற்றும் கலாச்சார சீரழிவைப் 'போக்க' கோர்பசேவ் அறிக்கை மேலும் தீர்க்கமான முதலாளிய சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறது. முதலாளித்துவம் மீண்டும் முதலாளித்துவ உறவுகளைத்தான் மறு உற்பத்தி செய்யும் என்பதை நிரூபித்திருக்கிறது.

ரசியாவில் 'அனைத்து மக்களும் மார்க்சிய—லெனினியத்தையும், சோசலிச கம்யூனிச லட்சியங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்' என்று குருசேவ் கூறியதற்கு மாறாக கோர்பசேவ் அறிக்கை 'சோசலிச சித்தாந்த நெறி முறை எதிர்ப்பின் ஆதரவாளர்களுக்கும் தன்னலமற்ற உழைப்பாளர்களுக்கும் முரண்பாடு' நிலவுவதாகக் கூறுகிறது.

அதே நேரத்தில் இந்த நெருக்கடியையும், சீரழிவையும், முரண்பாட்டையும் தீர்க்க, குருசேவின் முதலாளிய கொள்கையை மேலும் தீவிரப்படுத்தும் பின்வரும் நடவடிக்கையையே முன்வைக்கிறது.

'கட்டமைப்பு மற்றும் முதலீட்டுக் கொள்கையை மாற்றுவது', 'தொழில் நிறுவனங்களின் சுதந்திரத்தை மேலும் விரிவுபடுத்துவது', 'உற்பத்தியில் இலக்குகளைத் தீர்மானிப்பதற்கு பதில் பொருளாதார விதிகளை பின்பற்றுவது', 'நிறுவனங்களுக்கு சுயாட்சி வழங்குவது', 'வியாபார சுதந்திரம் வழங்குவது', 'ஊழியர் ஊதியத்தை நிறுவனத்தின் வருமானத்திற்கு கட்டுப்படுத்துவது', 'லாபகர மற்ற தொழில் நிறுவனங்களுக்கு ஈட்டுத் தொகை கொடுப்பதை நிறுத்துவது' இவ்வாறு விரிவாகவே முதலாளித்துவ கோட்பாடுகளை ஆழமாக்குவது, விரிவாக்குவது பற்றி கோர்பசேவ் அறிக்கை விவரிக்கிறது (9).

# 9. சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவ உரிமையும் இடது, வலது திரிபும்

சோசலிச சமுதாயத்தை கம்யூனிசத்தின் 'கீழ்க் கட்டம்' அல்லது முதல் கட்டம் என்று மார்க்ஸ் அழைத்தார். 'முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றுவதும், ஆகவே, தான் உதித்த அந்த பழைய சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பிறவிக் குறிகள் ஒவ்வொரு வழியிலும்' (1) பதிந்திருப்பதுமான சமுதாயம் என்று அதைக் குறிப்பிட்டார். 'இந்த மாறுதல் காலகட்டம் மடிந்துவரும் முதலாளித்துவத்துக்கும், இளம் பருவத்தில் உள்ள கம்யூனிசத்துக்கும் இடையிலான போராட்ட காலகட்டமாகும்' (2) என்று கூறினார் லெனின்.

இதன் பொருள் சோசலிசத்தில் முதலாளித்துவ கூறுகளும், கம்யூனிச கூறுகளும் இணைந்திருக்கின்றன என்பதாகும். சோசலிச சமுதாயத்தில், உற்பத்தி சாதனங்களில் தனியுடைமை ஒழிக்கப்படுகிறது. உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் பொதுவுடைமையாக்கப்படுகின்றன. அந்த அளவுக்கு அங்கே 'முதலாளித்துவ உரிமை' ஒழிக்கப்பட்டு கம்யூனிசம் நடைமுறைக்கு வருகிறது. ஆனால் அதே நேரத்தில் உற்பத்தியின் மற்றோர் அம்சத்தில், நுகர்வுப் பொருட்களின் வினியோகத்தில் 'முதலாளித்துவ உரிமை' ஒழிக்கப்படுவதில்லை.

உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டதன் விளைவாக 'உழைக்காதவர்களுக்கு

உணவில்லை' என்ற சோசலிசக் கோட்பாடும், 'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற மற்றொரு சோலிசக் கோட்பாடும் நடைமுறைக்கு வந்துவிடுகிறது. 'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற கோட்பாடு, ஒவ்வொருவரும் அவரின் உழைப்பின் மதிப்பை ஊதியமாகப் பெறுகிறார் என்பதைப் புலப்படுத்துகிறது. இதன் பொருள், நுகர்வுப் பொருள்களின் வினியோகத்தை 'சம மதிப்புள்ள பண்டங்களின் பரிவர்த்தனை' என்ற முதலாளித்துவக் கோட்பாடுதான் ஒழுங்குபடுத்துகிறது என்பதாகும். எனினும் இது முதலாளித்துவ சமுதாயத்தின் 'சம மதிப்புள்ள பண்டங்களின் பரிவர்த்தனை'யிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டதாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில், உற்பத்தி சாதனங்களின் தனி உடமையின் காரணமாக தொழிலாளி பெறும் ஊதியம், அதிகபட்சம் உழைப்பு சக்தியின் மதிப்புக்குச் சமமாக இருக்குமே தவிர உழைப்பின் மதிப்புக்கு சமமாக இருப்பதில்லை. அதாவது சமுதாயத்திற்காக அவர் உழைப்பின்மூலம் எவ்வளவு உற்பத்தி செய்து கொடுத்தாரோ அதை அவர் ஊதியமாகப் பெறுவதில்லை. உற்பத்தி சாதனங்களில் உள்ள தனியுடமையினைப் பயன்படுத்தி, முதலாளி உழைப்பின் மதிப்புக்கும், உழைப்பு சக்தியின் மதிப்புக்கும் இடையில் உள்ள உபரி மதிப்பை லாபமாக அபகரித்துக் கொள்வதன் விளைவாக, சம மதிப்புள்ள பண்டங்களின் பரிவர்த்தனை என்ற முதலாளிய கோட்பாட்டுக்கும், நடைமுறைக்கும் முரண்பாடு நிலவுகிறது. ஆனால் உற்பத்தி சாதனங்களில் அனைத்தும் பொதுவுடமையாக்கப்பட்ட பின் தொழிலாளி, அவருடைய உழைப்பின் மதிப்பை, நேரடி நுகர்வுக்கான ஊதியமாகவும், சமூக நிதிக்காக ஒதுக்கியதை சமூக நலன்கள் மூலமான நுகர்வாகவும், முழுவதுமாகப் பெறுகிறார். எனவே சோசலி

சத்தில் 'சம மதிப்புள்ள பண்டங்களின் பரிவர்த்தனை' என்ற முதலாளியக் கோட்பாட்டிற்கும், நடைமுறைக்கும் முரண்பாடு நிலவுவதில்லை.

'நுகர்வு சாதனங்களின் வினியோகம் எவ்வகையில் இருந்தபோதிலும், அது உற்பத்தி நிலைமைகளின் வினியோகத்தின் விளைவுதான்' (3) என்று மார்க்ஸ் கூறினார். 'சமமதிப்புள்ள பண்டங்களின் பரிவர்த்தனை' என்ற முதலாளியக் கோட்பாடே நுகர்வுப் பொருள் வினியோகத்தை சோசலிசத்திலும், முதலாளித்துவத்திலும் ஒழுங்குபடுத்தும் கோட்பாடாக இருப்பினும் உற்பத்தி சாதன உடைமை முறைகளில் உள்ள வேறுபாடு இக்கோட்பாட்டை முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்தில் அடிப்படையிலேயே மாற்றியமைத்துவிட்டது- சோசலிசக் கோட்பாடாக்கி விட்டது.

எனினும் 'சமமதிப்புகளின் பரிவர்த்தனை' என்பது இன்றும் முதலாளித்துவ உரிமையாகவே கோட்பாட்டளவில் இருக்கிறது. 'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற கோட்பாடு 'சம உழைப்புக்கு சம ஊதியம்' என்ற வகையில் சமத்துவத்தை ஏற்படுத்துகிறது எனினும், அது மற்றொரு வகையில் சமத்துவமின்மையையும் கொண்டிருக்கிறது. இக்கோட்பாட்டின்படி ஒவ்வொருவரும் அவர் சமுதாயத்திற்கு எவ்வளவு உழைப்பு செலுத்தினாரோ அவ்வளவு பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவர் மற்றவரைவிட பலமானவராகவோ, பலமற்றவராகவோ, திருமணமானவராகவோ, திருமணம் ஆகாதவராகவோ இவ்வாறு வேறுபட்ட தன்மைகள் கொண்டிருக்கும்போது அவர் மற்றவர்களைவிட கூடுதலாகவோ, குறைவாகவோதான் பெறுகிறார். இது ஒரு சமத்துவமின்மையேயாகும். சமத்துவமற்ற இடத்தில் சமத்துவம் என்பது உண்மையில் சமத்துவமின்மையேயாகும். மார்க்ஸ் கூறுவதுபோல 'சம உரிமை

இங்கே இருக்கிறது தான். ஆனால் இன்னமும் இது முதலாளித்துவ உரிமையேதான். ஒவ்வொரு உரிமையையும் போல சமத்துவமின்மையைக் கொண்டதே தான்'' (4).

''சோசலிச சமுதாயம், உற்பத்தி சாதனங்கள் தனிநபர்களால் கைப்பற்றப்பட்டுவிட்டதில் உள்ள அநீதியை மட்டுமே ஒழிக்கிறது. மற்றோர் அநீதியை, அதாவது நுகர்வுப் பண்டங்களை (தேவைகளுக்கு ஏற்ப அல்லாமல்) ஆற்றிய உழைப்புக்கு ஏற்ப வினியோகிப்பதில் உள்ள அநீதியை அகற்றுவதில்லை... இந்தக்குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டத்தில் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் இந்தச் சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்போதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும், இதனால் நெறிப்படுத்தப்பட்ட அதன் கலாச்சார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகிவிட முடியாது'' (5).

இக்குறைபாடு கம்யூனிச சமுதாயத்தின் உயர்கட்டத்தில் மட்டுமே நீக்கப்பட முடியும். ''தனிநபரை உழைப்புப்பிரிவினைக்கு கீழ்படுத்தி அடிமைத்தளையிடுவதும், அதனுடன் கருத்துழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்தபின்- உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டுமின்றி வாழ்வின் முதற்பெரும் தேவையும் ஆகியபின்-தனி நபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடு கூட உற்பத்தி சக்திகளும் அதிகரித்துவிட்டபின்-பொதுச் சமுதாயச் செல்வத்தின் கருவிகள் எல்லாம் மேலும் அபரிமிதமாக பெருக்கெடுத்து ஓடுகையில்- அப்போதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு சமுதாயம் தன் பதாகையில் ஒவ்வொருவரிடமிருந்தும்

அவருடைய ஆற்றலுக்கேற்ப; ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கேற்ப என்பதாகப் பொறித்துக் கொள்ளும்'' (6).

எனவே சோசலிச சமுதாயத்தில் 'முதலாளித்துவ உரிமை' தவிர்க்க முடியாததாகும். அது மட்டுமல்ல அது ஒரு சோசலிசக் கோட்பாடும் ஆகும். எனவேதான் லெனின் கூறினார்: "'கம்யூனிசம் அதன் முதற்கட்டத்தில் முதலாளித்துவ உரிமையில் குறுகிய வரம்பை விட்டொழிக்காமல் வைத்துக் கொள்ளும் சுவாரசியமான நிகழ்வு ஏற்படுகிறது. நுகர்வுப் பொருட்களின் வினியோகம் குறித்த இந்த முதலாளித்துவ உரிமைக்கு முதலாளித்துவ அரசு இருப்பது தவிர்க்க முடியாத முன் நிபந்தனையாகும். ஏனெனில், உரிமைக்குரிய தராதரங்கள் அனுசரிக்கப்படுமாறு உறுதிப்படுத்தவல்ல இயந்திரம் இல்லையேல் உரிமை அர்த்தமற்றதாகிவிடும். இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில் கம்யூனிசத்தில் சில காலத்திற்கு முதலாளித்துவ உரிமை மட்டுமின்றி முதலாளித்துவ வர்க்கம் இல்லாத முதலாளித்துவ அரசும் கூட இருக்கும்'' (7).

இதன் பொருள் சோசலிசத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு, முதலாளித்துவ உரிமையைக் காக்கும் பொறுப்பு கொண்டிருக்கிறது என்பதன்றி வேறல்ல. ''உற்பத்தி சாதனங்களின் பொதுவுடமையைப் பாதுகாப்பதுடன், உழைப்பிலும் உற்பத்திப் பொருள்களின் வினியோகத்திலும் சமத்துவத்தைப் பாதுகாக்கவும்'' (8) ''உண்மையில் சமத்துவமின்மையைப் புனிதமாக்கிவிடும் 'முதலாளித்துவ உரிமை'யைப் பாதுகாக்கவும்'' (9) தொடர்ந்து அரசு தேவைப்படுகிறது என லெனின் இதைத்தான் சொன்னார். இக்கால கட்டத்தில் முதலாளித்துவ உரிமை பற்றிய சித்தாந்தம் அனைத்தையும் ஒழித்துக் கட்டு

வதை மாவோவும் எதிர்த்தார். 'முதலாளித்துவ உரிமைக்கான சித்தாந்தம் முழுவதையும் ஒழித்துக் கட்டுவதற்கு பிரச்சாரத்தைத் தொடங்குவது எவ்விதத்திலும் அர்த்தமுள்ளதாகாது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று அவர் எச்சரித்தார். முதலாளித்துவ வகையினங்களான பண்ட சுழற்சி, பண்ட வடிவம், மதிப்பு விதி ஆகியவற்றை ஒழிக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டிய மாவோ அதிகார வர்க்கப் போக்கு, குறுங்குழுவாதம், அகநிலைவாதம் மற்றும் தேவையற்ற தலையீடு, மூர்க்கத்தனம், உணர்வுகளை மதிக்காதிருத்தல், வீண் விரயம், ஆடம்பரம் போன்றவற்றுக்கு எதிரான இயக்கத்தை, முதலாளித்துவ உரிமை பற்றிய சித்தாந்தங்களின் ஒரு பகுதியை ஒழிப்பதற்கான போராட்டமாக முன்வைத்தார் (10).

ஆனால் சீனத்தில் மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது 'நால்வர் குழுவினர்' 'முதலாளித்துவ உரிமையைப்' பாதுகாக்கும் அவசியத்தை எதிர்த்தனர். 'முதலாளித்துவ உரிமையே புதிய வகை முதலாளிகளும், முதலாளித்துவமும் தோன்றுவதற்கான பொருளாதார அடிப்படையாக நிலவுகிறது' என்றும் 'எனவே இதைப் படிப்படியாக கட்டுப்படுத்தி, மங்கச் செய்து ஒழித்துக் கட்ட வேண்டும்' என்றும் 'இல்லைஎனில் முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப் பட்டு விடும்' (11) என்றும் வாதிட்டனர். சீனத்தில் மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போது 'இடதுசாரி' 'நால்வர் குழுவினரால்' முன் வைக்கப்பட்ட மார்க்சிய- லெனினியத்துக்கு விரோதமான இந்தக் கோட்பாடு, சோசலிச கட்டுமானத்தில் கடும் சேதம் ஏற்படுவதற்கு காரணமாக அமையக் கூடியது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இதற்கு மாறாக முதலாளித்துவப் பாதையாளர்கள் 'முதலாளித்துவ உரிமை' பற்றிய சித்தாந்தத்துக்கு எதிராக விமர்சிப்பதையே எதிர்க்கிறார்கள். மேலும் 'முதலாளித்துவ உரிமை'யை சோசலிச நோக்கங்களுக்கு எதிராகப் பிரயோகிக்கிறார்கள். 'திறமைக் கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற சோசலிசக் கோட்பாட்டில் 'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்பதை பொருளாதார ஊக்கமளிக்கும் (Material incentive) கொள்கையாக அறிமுகப் படுத்துகின்றனர். தொழிலாளர்களின் அர்ப்பணிப்பையும் முன்னூக்கத்தையும் ஊக்குவிப்பதற்கான சாதனமாக பொருளாதார ஊக்குவிப்புகளை முன்வைக்கின்றனர். இது சோசலிச நோக்கங்களுக்கு எதிரானதாகும்.

சோசலிச மாற்றம் என்பது இரண்டு பணிகளைக் கொண்டிருக்கிறது. ஒன்று அமைப்பு முறை மாற்றம் மற்றொன்று மனித மாற்றம். உற்பத்தி உறவுகளிலும், மேல்கட்டுமானத்திலும் மாற்றம் கொண்டுவருவதன் மூலம் அமைப்பு முறையை மாற்றும் அதே வேளையில் மனிதனையும் சோசலிச மனிதனாக மாற்றுவதன் மூலமே சோசலிச மாற்றத்தில் வெற்றிபெறமுடியும்.

ரசியாவில் 'கம்யூனிஸ்ட்சுபோத்னிக்குகள்' (12) உருவானபோது லெனின் அதைப் பற்றி பெருமையாகவும், விரிவாகவும் எழுதினார். "கம்யூனிசத்தின் மெய்யான தொடக்கம்' என்று அதை அவர் குறிப்பிட்டார். சமுதாயத்திற்காக தாமே இவ்வாறு முன்வந்து இலவசமாக உழைப்பது கம்யூனிசத்தின் தொடக்கமாகும். உழைக்கும் மக்கள் தாமே சுதந்திரமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாகக் கொண்ட 'சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பு' இன்றி கம்யூனிசம் இல்லை. இது உழைக்கும் மக்களின் அரசியல்-சித்தாந்த உணர்வால் கிடைக்

கும் ஆன்மீக ஊக்கத்தின் (Spiritual inspiration) விளைவேயன்றி வேறல்ல.

கலாச்சாரத் தரமோ, வாழ்க்கைத் தரமோ அல்ல, அரசியல்—சித்தாந்த உணர்வால் கிடைக்கும் ஆன்மீக ஊக்கமே ஒருவனுடைய அர்ப்பணிப்புக்கும், முன்னூக்கத்திற்கும் காரணமாக அமைகிறது. இதற்கு மாறாக 'முதலாளித்துவ உரிமையை' (சோசலிச கோட்பாட்டை) பின்பற்றுவது என்ற பெயரில் 'பொருளாதார ஊக்கத்தை' உழைக்கும் மக்களின் அர்ப்பணிப்பையும், முன்னூக்கத்தையும் வளர்ப்பதற்கான காரணியாக முன்வைப்பது தனிநபர்வாதத்தையும், முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தையும் வளர்ப்பதற்கு அடிப்படையாக அமையுமேயன்றி சோசலிசத்தைவளர்க்காது. உழைக்கும் மக்களில் பின்தங்கிய உணர்வுள்ளவர்களின் அர்ப்பணிப்பையும், ஊக்கத்தையும் கட்டவிழ்த்து விடுவதற்குக்கூட 'பொருளாதார ஊக்கம் காரணமாக அமைய முடியாது. அவர்கள் விமர்சிக்கப் பட்டும், போதிக்கப்பட்டும், அவர்களுடைய அரசியல் சித்தாந்த உணர்வை வளர்ப்பதன் மூலமே இது முடியும். சோசலிச சமுதாயத்தில் 'பொருளாதார ஊக்கத்தை' அங்கீகரிப்பது எப்போதுமே தனிநபர் நலன் என்ற அடிப்படையிலிருந்து அல்ல. அவ்வாறு இருக்குமேயாயின் அது தவிர்க்க முடியாதபடி சோசலிசத்துக்கு எதிரான விளைவுகளையே உண்டாக்கும். மாறாக 'பொருளாதார ஊக்கத்தை' சோசலிசத்தில் அங்கீகரிப்பது, தனிநபர் நலன் கூட்டு நலன்களுக்கு உட்படுவது என்ற முறையிலும், பகுதிநலன் முழுமையின் நலனுக்கு உட்படுவது என்ற முறையிலும், தற்காலிக நலன் தொலைநோக்கான நலனுக்கு உட்படுவது என்ற முறையிலும் மட்டுமே.

முதலாளித்துவ சமுதாயத்தில் கூட 'ஆன்மீக ஊக்கம்' அளிக்கும் கொள்கையை முதலாளித்துவ

வர்க்கம் மேற்கொள்கிறது. ஆனால் அதை வழிநடத்து வது முதலாளித்துவ வர்க்கம் என்பதால் அது போலி யானதாகவும், தற்காலிகமானதாகவும் ஏமாற்றமளிப் பதாகவும் இருக்கிறது. சோசலிச சமுதாயத்தில் சோசலிச அரசியல் சித்தாந்தத்தினால் வழிகாட்டப் பட்ட ஆன்மீக ஊக்கம் பொருளாதார சக்திகளின் வளர்ச்சியை சமூகநலனுக்காக சாதிப்பதில் வெற்றி பெறுவதால் அது உண்மையானதாகவும், தொடரக் கூடியதாகவும், மேலும் ஊக்கமூட்டக்கூடியதாகவும் இருக்கிறது.

லியூ-டெங் கும்பல் கூட சோசலிச ஆன்மீக ஊக்கம் (Socialist spiritual inspiration) மற்றும் நாகரீகம்(Socialist spiritual civilization) பற்றி பேசுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடரும் கோட்பாட்டை கைவிட்டபின், உற்பத்தி சக்திகள் பற்றிய முதலாளித்துவக் கோட்பாட்டை முன் தள்ளிய பின், அது சோசலிச ஆன்மீக ஊக்கம் பற்றியும் ஆன்மீக நாகரிகம் பற்றியும் பேசுவது 'முதலாளித்துவ சோசலிசமே' அன்றி பாட்டாளி வர்க்க சோசலிசம் அல்ல. மாவோ 'ஒரு கம்யூனிச இயக்கம் இன்றி கம்யூனிசம் சாத்தியமில்லை' (13) என்று சொன்னபோது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் மேல்கட்டுமானத்திலும், உற்பத்தி உறவுகளிலும் புரட்சிகரமான மாற்றத் திற்கான போராட்டத்துடன், மனிதனையும் சோசலிச மனிதனாக மாற்றுவதற்கான போராட்டம் இணைந்த வடிவிலின்றி கம்யூனிசம் சாத்தியமில்லை என்றே அர்த் தப்படுத்தினார்.

'உழைப்புக்கேற்றஊதியம்' என்றசோசலிசக் கோட் பாட்டிலிருந்து 'தேவைக்கேற்ற பங்கீடு' என்ற கம்யூனிச கோட்பாட்டிற்கு மனித சமுதாயம் மாறும் புரட்சிகர

நிகழ்ச்சி, வெறும் உற்பத்தி சாதன உடமை மாற்றம் மற்றும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, அபரிமிதமான செல்வக்குவிப்பு ஆகியவற்றால் மட்டும் சாத்தியமாகக் கூடியதல்ல. மாறாக கூடவே மேல் கட்டுமானத்திலும் மனிதர்களிலும் கூட புரட்சிகர மாற்றங்கள் சாதிக்கப் படும் போது மட்டுமே சாத்தியமாகக் கூடியதாகும். எனவேதான் ‘சோசலிசப் புரட்சி அரசியல், பொருளா தாரம், சித்தாந்தம், கலாச்சாரம் ஆகிய அனைத்து முனைகளிலும் இறுதிவரை நடத்தப்பட வேண்டும்’ (14) என்று மாவோ கூறினார். ●

# 10. சோசலிசமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டமும்

பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் சோசலிச சமுதாயம் பிரதானமாக இரண்டு கட்டங்களைக் கடந்து கம்யூனிசத்தை அடைகிறது. முதலாவதாக சுரண்டும் வர்க்கங்களை வர்க்கம் என்ற அடிப்படையில் ஒழித்துக் கட்டுவதும், பெருவீத மற்றும் சிறுவீத தொழில்களை சோசலிச உடைமையாக மாற்றம் செய்வதும், இரண்டாவதாக மூன்று பெரும் வேறுபாடுகளை(நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான வேறுபாடு, உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான வேறுபாடு, விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான வேறுபாடு) களைவது. இவ்விரண்டு கட்டங்களிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதன் மூலமே—தொடர்ந்து வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் மூலமே—கம்யூனிசத்தை அடைய முடியும். 'அந்த காலகட்டம் முழுவதும் வர்க்கங்களும், வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப் போராட்டங்களும் இருக்கின்றன. சோசலிசப் பாதைக்கும், முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் நிலவுகின்றன' (1). இக் கால கட்டத்தை புரட்சிகர மாற்றத்துக்கான கால கட்டம் (2) என்று மார்க்ஸ் அழைத்தார்.

பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றிய உடனேயே இந்த மாற்றத்துக்கான போராட்டம் தொடங்கிவிடுகிறது. பாட்டாளிவர்க்கம், விவசாய வர்க் கத்தை பிரதான நட்பு சக்தியாக சேர்த்துக் கொண்டு தான் அதிகாரத்தை (ரசியாவிலும் சரி, சீனாவிலும் சரி) கைப்பற்றியது. இதன் விளைவாக விவசாயிகளுக்கு நில மும், அதிகாரமும்கிடைத்தது. நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப் பட்டது. அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், நிலச் சீர் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின் உடனடியாக முத லாளித்துவ உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அந்த வர்க்கம், வர்க்கம் என்ற அடிப்படையில் ஒழிக்கப்பட வேண்டிய கடமை முன்னுக்கு வந்தது. அனைத்து உற் பத்தி சாதனங்களும் சோசலிசஉடைமையாக மாற்றப்படும் கடமை முன்னுக்கு வந்தது. பாட்டாளி வர்க்கம் அர சியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், தன் 'அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளி வர்க்கத்திட மிருந்து படிப்படியாக மூலதனம் முழுவதையும் கைப்பற் றும், (3) என்று மார்க்சும் ஏங்கல்சும் கூறினர். மூலதனம் முழுவதையும் படிப்படியாகக் கைப்பற்றுவதற்கான வழி முறையாக அரசு முதலாளித்துவத்தை முன் வைத்தார் லெனின். 'அரசு முதலாளித்துவம் என்பது நம்மால் கட்டுப்படுத்த இயலும் முதலாளித்துவம் ஆகும். அதன் வரம்புகளை நம்மால் நிர்ணயிக்க முடியும். இந்த அரசு முதலாளித்துவம் அரசுடன் தொடர்புள்ளது' (4). இருபதாம் ஆண்டுகளில் ரசியாவில் தனியார் முதலாளித் துவம், அரசு முதலாளித்துவம், சோசலிச உடைமை ஆகிய மூன்று உடைமைமுறைகளும் பெருவிகிதத்தொழிலில் இருந் தன. 1934க்கு முன்னதாக தனியார் முதலாளித்துவமும் அரசு முதலாளித்துவமும் படிப்படியாக ஒழிக்கப்பட்டு அனைத்தும் சோசலிச உடைமையாக்கப் பட்டதை 17வது காங்கிரசில் ஸ்டாலின் அறிவித்தார்.

சீனத்திலும் வரலாறுகாணாத உக்கிரமானபோராட்டத்தின் மூலம் (5) நிலச்சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின் 1953ல் முதலாளித்துவ உடமைகளை சோசலிச உடமைகளாக மாற்றம் செய்வதற்கானவழிமுறையாக அரசு முதலாளித்துவம் முன்வைக்கப்பட்டது. 'அரசு முதலாளித்துவத்தின் இந்தப்புதுவகை, சோசலிசத் தன்மை பெற்றிருக்கிறது. அது அரசுக்கும் தொழிலாளருக்கும் தான் கூடுதல் பயன் தருகிறது' (6) என்றார் மாவோ.

இவ்வாறு முதலாளித்துவ வர்க்கத்தை படிப்படியாகக் கட்டுப்படுத்தி, முதலாளித்துவ தொழில்களை சோசலிச உடமையாக மாற்றம் செய்வது சோசலிசப் பாதையாகும். இதற்கு மாறாக, முதலாளித்துவ வர்க்கத்துக்கு முழு சுதந்திரத்துடன் இயங்க அனுமதியளிக்க வேண்டும் என்று கோருவது முதலாளித்துவப் பாதையாகும். ரசியா, சீனா ஆகிய இரு நாடுகளுமே அரைநிலப்பிரபுத்துவ நாடுகளாயிருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சி நடத்தவை. எனவே பின்தங்கிய பொருளாதார நிலைகளில் சோசலிசத்தைக் கொண்டு வரக்கூடாது என்றும், முதலாளித்துவ தொழில்வளர்ச்சியை சுதந்திரமாக அனுமதிப்பதன் மூலம் சோசலிசத்திற்கு போதிய பொருளாதார அடித்தளத்தை உருவாக்க வேண்டும் என்றும் முதலாளித்துவப் பாதையாளர்கள் கோரினர். ரசியாவில் டிராட்ஸ்கி, புகாரின் போன்றோர் முதலாளித்துவத்திற்கு முழு சுதந்திரமும் வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர் (7). சீனத்தில் 'புதிய ஜனநாயகப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது' என்றும் 'இன்னும் சில பத்தாண்டுகளுக்கு முதலாளித்துவ பொருளாதாரம் வளர அனுமதிக்க வேண்டும்' என்றும் 'முதலாளித்துவ சுரண்டல் பயனுள்ளதே' (8) என்றும் லியூசோஷி வாதிட்டார். 'வரிவிதிப்பில் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் இரண்டுமே சமமாக நடத்தப்பட வேண்டும்'

என்று (1953ல்) போ-அய்-போ.ஆல் முன்வைக்கப் பட்டது (9). மேலும் 'நான்கு பெரும் சுதந்திரம்' (நிலக்குத்தகை, கூலியுழைப்பு, வியாபாரம், வட்டித் தொழில் ஆகியவற்றில் கட்டுப்பாடற்ற சுதந்திரம்) என்ற கருத்தும் (10) (1955ல்) முன் வைக்கப்பட்டது. இவை அனைத்தையும் மாவோவின் தலைமையில், சீனக் கம் யூனிஸ்ட் கட்சி முறியடித்தது. தொழிற்துறையை படிப் படியாக சோசலிசமயமாக்கும் கொள்கையை நிறைவேற் றியது. 'புதிய ஜனநாயக சமுதாயத்தை உறுதிப்படுத்து வது என்ற முழக்கம் தவறான தீங்கு விளைவிக்கக்கூடிய தாகும். ஒவ்வொரு நாளும் சோசலிச காரணிகள் வளர்ந்து வரும்போது புதிய ஜனநாயக சமுதாய அமைப்பை எப்படி உறுதிப்படுத்த முடியும்? நாம் படிப்படியாக சோசலிசத்திற்கு மாறிச் செல்வதை முன் வைக்கிறோம்' (11) என்றார் மாவோ. சமத்துவ வரிவிதிப்பு பற்றிய கொள்கையையும் மாவோ எதிர்த்தார். 'சோசலிசத்திற்கும், தனியார் துறைக்கும் இடையிலான உறவு, தலைவருக்கும், வழி நடத்தப் படுகின்றவருக்கும் இடையில் ஆனதாகும். தனியார் துறை முதலாளித்துவப் பொருளாதாரம் தங்கு தடையின்றி வளர்ந்து செல்வதை அனுமதிக்க கூடாது. பல கோணங்களிலும்— அது இயங்கும் முறை, வரிக் கொள்கை, சந்தை விலை மற்றும் செயல்படும் நிலைமை களின் மூலம் அதைக் கட்டுப்படுத்த வேண்டும். புதிய ஜனநாயக அரசில் கட்டுப்படுத்துவதும், கட்டுப் பாட்டுக்கு எதிர்ப்பும் வர்க்கப் போராட்டத்தின் பிர தான வடிவம்ஆகும். இப்போது பொது மற்றும்தனியார் துறைக்கு ஒரே மாதிரியான வரிமுறை வேண்டும் எனக் கோருவதாக உள்ளது. இதுஅரசுத்துறை பொருளா தாரம் தலைமையானது என்பதை மறுப்பதாகும்' (12). மேலும் 'நான்கு பெரும் சுதந்திரம்' பற்றி மாவோ கூறி னார்; 'நாம் நகர, கிராமப்புற முதலாளிகள்மீது கட்டுப்

படுத்தும் கொள்கையைப் பின்பற்றி வருகிறோம். எனவே நான்கு பெரும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் என்பது தவறானதாகும். நான் நான்கு சிறு சுதந்திரங்கள் என்கிறேன். சிறியதா, பெரியதா என்பதே முரண்பாடாகும். கட்டுப்பாட்டின் கீழ் இந்த சுதந்திரங்களை மிகச்சிறிய அளவு பெற்றிருக்கிறார்கள். நாம் நகர, கிராம பூர்சுவாக்களிடம் பயன்படுத்துவது, கட்டுப்படுத்துவது, மாற்றுவது என்ற கொள்கையைப் பின்பற்றி வருகிறோம். தோழர் டெங் சுஹய் கோட்பாடுதவறானது ஏனெனில் அவர் கட்டுப்படுத்துவது பற்றி ஏதும் கூறவில்லை'. (13)

அரசு முதலாளித்துவம் என்பது 'வர்க்கப் போராட்டம் மற்றொரு முறையில் தொடர்வதாகும்' என்று லெனின் சொன்னார். முதலாளித்துவ வர்க்கத்தைப் படிப்படியாக அரசுமுதலாளித்துவத்தின்மூலம் கட்டுப்படுத்தி சோசலிச உடைமையாக மாற்றும் கொள்கையை முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிரான போராட்டத்திலேயே சீனக்கம்யூனிஸ்ட்கட்சி நடைமுறைப்படுத்தியது. மேலும் இக்கொள்கைகளுக்கு எதிராக கட்சியிலும், அரசாங்கத்திலும் இருந்த எதிர்ப்புரட்சிகர சக்திகளை நசுக்கவும், முதலாளித்துவ வர்க்கத்தில் இருந்த எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்கவும் "மூன்று குற்றங்கள்' (ஊழல், ஊதாரித்தனம், அதிகாரத்துவம்)மற்றும் 'அய்ந்து குற்றங்களுக்கு' (கொள்ளை, அரசு சொத்துக்களை திருடுவது, வரி ஏய்ப்பு, அரசு ஒப்பந்தங்களை ஏமாற்றுவது, பொருளாதார தகவல்களைத் திருடுவது, உளவறிவது) எதிரான இயக்கத்தையும் 1951-52ல் நடத்தியது. இவ்வியக்கங்களில் 1953 க்குள் 4.5 லட்சம் தனியார் துறை தொழில் நிறுவனங்கள் சோதனை இடப்பட்டன. 3.4 லட்சம் நிறுவனங்கள் குற்றம் இழைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஏறக்குறைய 10லட்சம் ஊழியர்கள் கட்சியி

லிருந்து வெளியேற்றப்பட்டனர் அல்லது தண்டிக்கப் பட்டனர்.

அரசு முதலாளித்துவத்தின் கீழ் முதலாளி வர்க்கம் முற்றிலும் ஒழிக்கப்படுவதில்லை. ரசியாவில் 1934க்கு சற்று முன்பே ஒழிக்கப்பட்டது. சீனத்தில் 1956ல் தான் ஒழிக்கப்பட்டது. அதன்பின் கூட 1966வரையிலும் அவர்கள் லாபத்தில் பங்கு பெற்று கொண்டிருந்தனர். அதன் பின்னும் லாபத்தில் பங்கு இல்லாமல் தொழிற்சாலைகளில் நிர்வாகிகளாகவும், நிபுணர்களாகவும் ஊதியத் துக்குப் பணியாற்றி வந்தனர். தமது சொந்த வீடு வசதிகளை தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர்.

எனவே அரசு முதலாளித்துவத்தின் கீழ் வீழ்த்தப் பட்ட, ஆனால் ஒழிக்கப்படாது இன்னும் தொடரும் முதலாளி வர்க்கம் தன் அழிவுக்கு முன்பாக முதலாளித்துவ ஆட்சியை, முதலாளித்துவ சமுதாயத்தை, இழந்த சொர்க்கத்தை மீண்டும் பெற எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனபதைப் பற்றி லெனின் எச்சரித் தார். அவர் கூறினார், ''சுரண்டலாளர்கள்-நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளி வர்க்கம்-மறைந்து விடவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் திடீரென மறைந்து விடமுடியாது. சுரண்டலாளர்கள் தகர்க்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அழிக்கப்படவில்லை. அவர்களுக்கு சர்வதேச மூலதனம் என்ற வடிவத்தில் இன்றும் ஓர் சர்வதேச அடித்தளம் இருக்கிறது. அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் மிகவும் விரிவான சமுதாய தொடர்புகள் இருக்கிறது. அவர்கள் தோற்கடிக்கப்பட்டதால் அவர்களது எதிர்ப் பின் சக்தி நூறுமடங்கு, ஆயிரம் மடங்கு அதிகரித்திருக் கிறது'' (14).

முதலாளித்துவ உடைமைகளை சோசலிச உடைமையாக்குவதற்கான நடவடிக்கைகளுடன் (நேரடியாகவும்,

அரசு முதலாளித்துவத்தின் மூலமும்)பெருமளவில் உள்ள சிறுவீத உற்பத்தியாளர்களின் உடமைகள்பால் என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்ற பிரச்சனையும், இரு வர்க்கங்களுக்கிடையிலான, இருபாதைகளுக்கிடையிலான போராட்டமாக சோசலிச சமுதாயத்தில் முன் வருகிறது.

சிறுநில விவசாயிகளைப் பொருத்தவரை எத்தகைய பாதையைப் பின்பற்றவேண்டும் என்பது பற்றி ஏங்கல்ஸ் கூறினார்: ''சிறு விவசாயி சம்மந்தமாக நமது பணி என்ன என்றால், முதலில் அவரது தனியான உற்பத்தியையும், தனியுடமையையும் கூட்டுறவு உற்பத்தியாகவும், கூட்டுறவுடமையாகவும் மாற்றுவதுதான். இதைபலாத்காரமாகச் செய்யாமல் உதாரணத்தைக் கொண்டும், இந்த நோக்கத்திற்காக சமுதாய உதவியைத் தந்தும் செய்துவைப்போம்''(15). இதுதான் சோசலிசப்பாதையாகும். சிறுவடிவ விவசாயம் காலாவதியாகிவிட்ட உற்பத்தி முறையாகும். பெருவீத தொழில்களுக்கு அது பலியாகி வருகிறது. அதனால் விவசாயிகள் தமது வயல்களிலிருந்தும், வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தினுள் தூக்கி எறியப்படுவது தவிர்க்க முடியாததாகும். இந்நிலைமையிலிருந்து விவசாயிகளைக் காப்பது கூட்டுறவு முறை மட்டுமே. இது விவசாயிகளின் நலனுக்கு உகந்தது. அவர்களுடைய விமோசனத்திற்குரிய ஒரே வழி. அதுமட்டுமல்ல நில பிரபுத்துவத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்துடன் அரசியல் அதிகாரத்திற்காகவும், நிலத்திற்காகவும் போராடிய விவசாயிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், நிலமும் அதிகாரமும் பெற்ற பின்னர்,தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குமானகூட்டணி இந்தசோசலிச பாதையில் விவசாயிகளை வழிநடத்துவதன் மூலம் மட்டுமே தொடரமுடியும். அவர்களுடைய தனிஉற்பத்தி

நீடிக்குமானால் தவிர்க்க முடியாமல் அது பெருவீத முதலாளித்துவ உற்பத்தியால் விழுங்கப்பட்டு அழிக்கப் பட்டுவிடும். கூட்டுறவுமயமாக்கம் விவசாயிகளைக் காப்பாற்றுவதுடன், சிறுவீத உற்பத்தியை சோசலிச வழியில் பெருவீத உற்பத்தியாக மாற்றுவதற்கும் வழி வகை செய்கிறது'' ''கூட்டுறவு என்பதும் அரசு முதலாளித்துவத்தின் ஒரு வடிவமேயாகும்''(16). அரசு முதலாளித்துவம் ''சலுகைகளில் இருந்து சோசலிசத் துக்கு மாறிச் செல்வது, பெருவீத உற்பத்தியின் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாறிச் செல்வதாகும். சிறு உடமையாளர் கூட்டுறவுகளிலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்வது சிறுவீத உற்பத்தியி லிருந்து பெருவீத உற்பத்திக்கு மாறிச் செல்வதாகும்'' (17)என்றார் லெனின். சிறுவீத விவசாய உற்பத்தியை கூட்டுறவு மூலம் சோசலிசத்துக்கு வழி நடத்த வேண்டும் என்று ஏங்கல்ஸ் கருதினார். ரசியாவில் லெனினும், ஸ்டாலினும், சீனத்தில் மாவோவும் சிறுவீத உற்பத்தியை கூட்டுறவு மயமாக்கும் கொள்கையை முன் வைத்து செயல்படுத்தினர்.

ஆனால் இதற்கு மாறாக முதலாளித்துவ பாதை யாளர்கள் கூட்டுறவுமயமாக்கத்தை எதிர்த்தனர். ரசியாவில் டிராட்ஸ்கியும், புகாரினும் விவசாயிகளின் கூட்டுப்பண்ணை முறைக்கு பதிலாக குலாக்குகளின் பண்ணை முறையை ஆதரித்தனர். சீனத்தில் ''தனிச் சொத்துடமையை நிலை நிறுத்துவது'' என்ற முழக் கத்தை முன்வைத்த லியூசோசி, விவசாயத்தை கூட்டுறவு மயமாக்கும் கொள்கைக்குஎதிராக 'தவறான, அபாயகர மான, விவசாய சோசலிசத்தின் கற்பனாவாதத் தன்மை யானது' (18) என்று விவசாயத்தில் சோசலிச மாற்றத்தை விமர்சித்தார்.

சிறு விவசாயப் பொருளாதாரத்தைத் தொடர்ந்து நீடிக்க விடுவது, மீண்டும் முதலாளித்துவத்தை நிலை நாட்டுவதற்கு வழிவிடுவது என்றே அர்த்தமாகும். ஏனெனில் அத்தகைய நாட்டில் ''கம்யூனிசத்தை விட முதலாளித்துவத்துக்குத் தான் மேலும் உறுதியான பொருளாதார அடித்தளம்'' (19)இருக்கிறது ''இந்தப் பொருளாதாரம் ஒரு முதலாளித்துவ வர்க்கமும், முதலாளித்துவமும் தோன்றுவதற்கு இடமளிக்கிறது'' (20). ''சிறு விவசாயி மற்றும் கைவினையாளர் பொருளாதாரம் இந்த முதலாளித்துவத்தை இடையறாதும், தவிர்க்க முடியாதவாறும், அவசியமாகவும் தோற்றுவிக்கிறது'' (21). எனவே முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் சோசலிசத்தைக் கட்டியமைக்க கூட்டுறவின் அவசியத்தை லெனின் வலியுறுத்தினார்.

'புதிய பொருளாதாரக் கொள்கை'யின் போது ''கூட்டுறவுகளின் மிகுந்த முக்கியத்துவத்தை மறக்கத் தொடங்கி விட்டதை'' சுயவிமர்சனமாகக் குறிப்பிட்ட லெனின், எல்லாப் பெருவீத உற்பத்திசாதனங்களும் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருப்பது, அரசியல் ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருப்பது, கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் பாட்டாளிவர்க்கம் கூட்டணி கொண்டிருப்பது, விவசாயிகளுக்கு பாட்டாளி வர்க்கம் தலைமையளிப்பது ஆகிய நிலைமைகளின் கீழ் 'கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு முழுநிறை சோசலிசத்தைக் கட்டியமைப்பது' (22) பற்றி எழுதினார்.

லெனினுக்குப் பின் ரசியாவில் சோசலிச கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட ஸ்டாலின், கூட்டுறவு மயமாக்கலுக்கு எதிராக குலாக்குகளை ஆதரித்த வலதுசாரிகளுக்கு எதிராகப் போராடினார். நாடு எந்தப் பாதை

யில் முன்னேறுவது, சோசலிசப் பாதையிலா, முதலாளித்துவப் பாதையிலா என்ற கேள்வி எழுப்பப்பட்டு சோசலிசப் பாதையில் என 14வது காங்கிரஸ் தீர்மானகரமாக முடிவெடுத்தது (23). ஸ்டாலின் நாட்டின் முன் உள்ள இரு பாதைகள் குறித்து கூறினார்: ''இரண்டு பாதைகள் மட்டுமே உள்ளன; முன்னேறி உயரச் செல்லும் புதிய கூட்டுப் பண்ணை முறை அல்லது பின்னேறி கீழே செல்லும் பழைய குலாக் முதலாளித்துவ முறை. மூன்றாவது பாதை எதுவும் இல்லை'' (24) ''கூட்டுப் பண்ணை பாதை சோசலிசப் பாதை. அது மட்டுமே உழைக்கும் விவசாயிகளுக்கு சரியான பாதை'' (25). இதற்கு மாறாக குலாக்குகளின் பண்ணை முறையை ஆதரிப்பது முதலாளித்துவப் பாதையாகும். டிராட்ஸ்கி, புகாரின் போன்றோர் முதலாளித்துவப் பாதையையே ஆதரித்தனர். 'கட்சியில் வலதுசாரி விலகல் பாதைக்குக் கிடைக்கும் வெற்றி, முதலாளித்துவ சக்திகளைக் கட்டவிழ்த்து விடும்' என்றும், 'முதலாளித்துவத்தை மீண்டும் நிலை நாட்டுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகப்படுத்தும்' (26) என்றும் ஸ்டாலின் கூறினார்.

சீனத்தில் கூட்டுறவு மயமாக்கத்திற்காக மாவோவின் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. 1953ல் நிறைவேற்றப்பட்ட பொதுவழி 'நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு விவசாயம், கைவினைத் தொழில் மற்றும் முதாளித்துவ தொழில்கள், வாணிகம் ஆகியவற்றை சோசலிச உடமை மாற்றத்துக்கு இன்னும் 10-15 ஆண்டுகள் அல்லது இன்னும் சற்று நீடித்த காலத்துக்குள் கொண்டுவர வேண்டும், (27) எனக்கூறியது. நாட்டை தொழில் மயமாக்குவதற்கு 'தனிச் சொத்துடமையை நிலை நிறுத்த வேண்டும்', 'நான்கு பெரும் சுதந்திரங்கள்' வேண்டும் என்ற கருத்துக்களுக்கு இது

நேர் எதிரானதாகும். 'தனிச் சொத்துடைமையை நிலை நாட்டுவதும், நான்கு பெரும் சுதந்திரத்தை அனுமதிப்பதும் சிறு எண்ணிக்கையிலான பணக்கார விவசாயிகள் வளர வசதி செய்து கொடுப்பதும், முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றுவதும் ஆகும்' (28) என்றார் மாவோ. மேலும் விவசாயிகள் பரஸ்பர உதவிக்குழு (Mutual aid team) மற்றும் கூட்டுறவு முறை (Cooperativisation) மூலம் கூட்டுடைமைக்கு (Collectivisation) மாறிச் செல்லும் பாதையை எதிர்த்து போ-அய்-போ குறை கூறியபோது, மாவோ சொன்னார்: ''தற்போது இரண்டு அய்க்கிய முன்னணிகள், இரண்டு கூட்டணிகள் உள்ளன. ஒன்று தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி. இது அடிப்படையானது. மற்றொன்று தொழிலாளி வர்க்கத்துக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணி. விவசாயிகள் சுரண்டலாளர்கள் அல்ல, மாறாக உழைப்பாளர்கள் என்பதால் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி நீண்டகாலம் கொண்டதாகும்'' என்றும் ''விவசாயிகள் படிப்படியாக தனிச் சொத்துடைமையிலிருந்து கூட்டறவு உடைமை முறைக்கு தாமே முன் வந்து சேரும் கோட்பாட்டின் அடிப்படையில் மாற வழிகாட்ட வேண்டும்'' (29) என்றும் கூறினார். மேலும் 'தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணியை உறுதிப்படுத்த விவசாயிகள் சோசலிசப் பாதையை மேற்கொள்ள உதவ வேண்டும்' என்றும், தேசிய முதலாளிகள் மற்றும் விவசாயிகளுடன் பாட்டாளி வர்க்கம் கொண்டிருக்கும் கூட்டணியில், 'விவசாயிகளுடனான கூட்டணியே பிரதானமானது, அடிப்படையானது, முதன்மையானது; தேசிய முதலாளிகளுடனானது இரண்டாம் பட்சமானது, தற்காலிகமானது' என்றும் (30), 'விவசாய கூட்டுறவுகள் பாட்டாளி வர்க்க சோசலிச அடிப்படையில்—பூர்சுவா

ஜனநாயக அடிப்படையில் அல்ல—விவசாயிகளுடனான கூட்டணியை உறுதிப்படுத்துவதை சாத்தியமாக்கிற்று' (31) என்றும் கூறிய மாவோ 'கிராமப்புறத்தில் சோசலிசம் இல்லை என்றால் முதலாளித்துவம் தவிர்க்க முடியாமல் தோன்றும்', ஏனெனில் 'முதலாளித்துவமும் சோசலிசமும் அல்லாத வேறுபாதை எதுவும் இல்லை' (32) என்று எச்சரித்தார்.

1934க்குள் ரசியாவில் குடும்பப் பொருளாதார அமைப்பும், தனிநபர் முதலாளித்துவ மற்றும் அரசு முதலாளித்துவ பொருளாதார அமைப்புகளும் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு விட்டன. சோசலிச பொருளாதார அமைப்பு எவராலும் எதிர்க்க முடியாதவாறு மேலோங்கிய அமைப்பாகவும் தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் அதிகாரம் செலுத்துகிற ஒரே சக்தியாகவும் மாறியது. சிறுபண்ட உற்பத்திப் பொருளாதார அமைப்பு (விவசாயம், கைவினைத் தொழில், வணிகம் ஆகிய மூன்றிலும்) பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டது. சீனத்தில் பெருவீத தொழில்களிலும், சிறுபண்ட உற்பத்தி தொழில்களிலும் சோசலிச உடமை மாற்றம் பிரதானமாக 1956க்குள் நடந்தேறியது. இங்கு சோசலிச உடமை மாற்றம், வலது சாரிகளின் முதலாளித்துவப் பாதைக்கு எதிரான போராட்டத்தை மட்டுமின்றி, அரசு முதலாளித்துவம், பரஸ்பர உதவிக் குழுக்கள், மற்றும் கூட்டுறவு முறை மூலம் படிப்படியாக மாறிச் செல்லும் கொள்கையை எதிர்த்த இடது சாரிகளுக்கு எதிரான போராட்டத்தையும் எதிர்கொண்டே வெற்றி பெற்றது என்பதை குறித்துக்கொள்வது அவசியமாகும்.

இரசியாவில் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளி வர்க்கம், வர்க்கம் என்ற வகையில் ஒழிக்கப்பட்டு சோசலிச உடமை மாற்றம் நிறைவேற்றப்பட்ட பின்

உள்நாட்டில் இனி ஒடுக்குவதற்கு ஒரு வர்க்கம் இல்லை என்று ஸ்டாலின் கருதினார். ''அக்டோபர் புரட்சியிலிருந்து சுரண்டும் வர்க்கங்களை ஒழித்துக்கட்டியவரை முதல் கட்டம்... இக்கட்டத்தில் அரசுக்கு இரண்டு பணிகள் இருந்தன (அ) உள்நாட்டில் சுரண்டும் வர்க்கங்களைத் தூககி எறிவது (ஆ) அந்நியர்களிடமிருந்து நாட்டைக் காப்பது. இரண்டாவது கட்டம் நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் முதலாளித்துவக் கூறுகளை ஒழித்து முழுமையான சோசலிசப் பொருளாதார அமைப்பை உருவாக்கிய காலம்... நாட்டுக்குள் ராணுவ ஒடுக்குமுறை பணி இல்லை. சுரண்டல் ஒழிக்கப்பட்டு விட்டது. இனியும் சுரண்டுவோர் இல்லை. எனவே ஒடுக்கப்படுவதற்கு யாரும் இல்லை. இந்த ஒடுக்குமுறையின் இடத்தில் அரசின் பணி சோசலிச சொத்துக்களையும், மக்களின் உரிமைகளையும் திருடர்களிடமிருந்து காப்பது என்பதாக மாறுகிறது'' (33) என்று 18வது காங்கிரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் ஸ்டாலின் கூறினார். ஆனால் ஸ்டாலின் கணித்ததற்கு மாறாக அவருடைய மறைவுக்குப்பின் ரசியாவில் முதலாளித்துவ மீட்சி நடந்தேறி விட்டது.

ரசியாவின் இந்த அனுபவங்களையும், ஒரு சோசலிச நாட்டில் உற்பத்தி சாதனங்களில் பிரதானமாக உடமை மாற்றம் நிறைவுற்ற பின்னரும் நிலவும் முரண்பாடுகளையும் ஆய்வு செய்த மாவோ கம்யூனிச சமுதாயம் நிறுவப்படும்வரை வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் இரண்டு பாதைகளுக்கு இடையிலான போராட்டமும் இருக்கும் என்பதை வெளிப்படுத்தினார்.

1956 பிப்ரவரியில் கூடிய ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ் மூன்று 'சமாதானக் கோட்பாடு' களை முன்வைத்ததன் மூலம்திருத்தல்வாதப்பாதையைத்

திறந்து வைத்தது. அதே ஆண்டில், செப்டம்பர் மாதம் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசில் பேசிய லியூசோசி 'சீனா சோசலிச மாற்றத்தில் தீர்மானகரமான வெற்றியடைந்து விட்டது' என்றும் 'முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படையில் தீர்க்கப்பட்டு விட்டது' என்றும் 'சீன சோசலிச சமுதாயத்தின் தற்போதைய அடிப்படை முரண்பாடு முன்னேறிய சோசலிச அமைப்புக்கும், பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதே' என்றும் அறிவித்தார். இந்த முடிவுகள் சீனக்கட்சியின் 8வது காங்கிரஸ் ஆவணங்களிலும் இடம் பெற்றன. அதே ஆண்டில் செப்டம்பரில் நடைபெற்ற 8வது மத்திய கமிட்டியின் முதலாவது பிளீன கூட்டத்தில் இதே கருத்துக்களை வலியுறுத்தியதுடன் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ் 'உலக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நிகழ்ச்சி' என்றும் 'சமாதான யுகத்திற்கான உறுதியான நம்பிக்கை' என்றும் பாராட்டினார். அதே காலத்தில் மீண்டும் கூட்டுறவு முறைக்கு எதிராக 'நான்கு சுதந்திரங்கள்' (Sell and buy land, free market, free for usury, To plant crops as wishes,) பற்றிய கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்தார்.

'பாராளுமன்றப் பாதை மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சாத்தியப்பாடு பற்றிய ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானம் லெனினிசத்தைத் தூக்கி எறிந்துவிட்டது' (34) என்று மாவோ 8வது மத்திய கமிட்டியின் இரண்டாவது கூட்டத்தில் குறிப்பிட்டார். ரசியாவில் ஏற்பட்டு வந்த மாற்றத்தையும், போலந்து, ஹங்கேரி நிகழ்ச்சிகளையும், சீனத்தின் முரண்பாடுகளையும் ஆய்வு செய்த மாவோ, ஹங்கேரியில் நடந்ததுபோல் சீனத்திலும் வலதுசாரி எதிர்ப்புரட்சிக் கும்பலின் நட

வடிக்கைகளுக்கு வாய்ப்பு இருப்பதை அறிந்து 'நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்' இயக்கத்தையும், 'சீர் செய் இயக்கத்தையும்', வலதுசாரிகளுக்கு எதிரான போராட்டத்தையும் 1957ல் தொடங்கினார். வர்க்கப்போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்ற லியூவின் கோட்பாட்டை மாவோ மறுத்தார். தொடர்ந்து உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும், அடித்தளத்துக்கும் மேல்கட்டுமானத்துக்கும் இடையிலான முரண்பாடுமே அடிப்படை முரண்பாடுகளாக நிலவுவதைச் சுட்டிக் காட்டிய மாவோ, புதிய பொருளாதார அமைப்பு ''இறுதியான உறுதிப்பாட்டை அடைய சோசலிச தொழில்மயமாக்கல் செய்வதும், பொருளாதார அரங்கில் சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதும் மட்டும் போதாது. அரசியல் சித்தாந்த அரங்கில் சோசலிசக் கல்வியும், போராட்டமும் உறுதியாக நடத்தப்பட வேண்டும்'' (35) என்றும் உற்பத்தி உறவுகளில் அடிப்படையான மாற்றங்களைச் சாதித்திருந்த போதிலும் ''சித்தாந்த அரங்கில் யார் வெல்லுவது முதலாளியா, பாட்டாளியா என்பது இன்னும் உண்மையில் தீர்க்கப்படவில்லை'' (36) என்றும் 'வர்க்கப் போராட்டம் எவ்விதத்திலும் முடிவுக்கு வரவில்லை-பிரதானமாக அரசியல் சித்தாந்த அரங்கில்-அது இன்னும் சில சமயங்களில் மூர்க்கமாகக் கூட வரலாம்' (37) என்றும் சுட்டிக் காட்டினார்.

சோசலிச உடமை மாற்றத்தையும், சோசலிசப் பாதையையும், கம்யூனிஸ்ட் கட்சி தலைமையையும் எதிர்த்த பூர்சுவா வலதுகளுக்கு எதிரான போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மாவோ ''இது அரசியல் - சித்தாந்த அரங்கில் மாபெரும் சோசலிசப் புரட்சியுமாகும்; 1956ல் பொருளாதார அரங்கில் நடைபெற்ற சோசலிசப் புரட்சி (உற்பத்தி சாதன உட

மைகளில்) போதுமானதல்ல; பாதுகாப்பானதும் அல்ல. ஹங்கேரியின் நிகழ்ச்சிகளிலிருந்து இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசியல் சித்தாந்த அரங்கிலும் சோசலிசப் புரட்சியை இறுதிவரை நடத்த வேண்டும்... நமது உலகத்தில் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் இருக்கும்வரை உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்களும், முதலாளித்துவ வலதுகளும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுவர். அவர்கள் அன்னிய பிற்போக்காளர்களுடன் சேர்வர்'' (38) என்றும் எச்சரித்தார். மேலும் பிரதான முரண்பாடு பற்றி அவர் கூறினார்: 'பிரதான முரண் பாடு முதலாளித்துவத்துக்கும், சோசலிசத்துக்கும் இடை யிலானது. கூட்டுடமைக்கும், தனியுடமைக்கும் இடையி லானது. அல்லது சோசலிசப் பாதைக்கும், முதலாளித் துவப் பாதைக்கும் இடையிலானது. 8வது காங்கிரஸ் இப்பிரச்சினையைக் குறிப்பிடவில்லை. முன்னேறிய சோசலிச அமைப்புக்கும், பின்தங்கிய உற்பத்தி சக்தி களுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண் பாடு என்று அது தவறாகக் குறிப்பிடுகிறது' (39). 'உடமை பற்றிய பிரச்சினை அடிப்படையில் தீர்க்கப்பட் டிருக்கிறது. ஆனால் முழுமையாகத் தீர்க்கப்பட வில்லை. வர்க்கப் போராட்டம் மறைந்துவிடவில்லை' (40).

1957 நவம்பரில் 'மாபெரும் பாய்ச்சலு'க்கான பொதுவழியை மத்திய கமிட்டி நிறைவேற்றியது. உற் பத்தி சாதன உடமைகளில் அடிப்படையில் சோசலிச மாற்றம் சாதிக்கப்பட்டபின், சோசலிசப் புரட்சியை மேலும் முன்னெடுத்துச் செல்ல அது வழிகாட்டியது. அரசியல் சித்தாந்த அரங்கிலான சோசலிசப் புரட்சி யுடன் கூடவே, தொழில் நுட்பம் மற்றும் கலாச்சாரப் புரட்சியையும் நடத்தவேண்டும் என்றும், கனரக தொழி லுக்கு முதன்மையளிக்கும்போதே தொழில்துறை மற்

றும் விவசாய துறை வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும் என்றும், மையத் தலைமையில் ஒட்டு மொத்த மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மைய மற்றும் உள்ளூர் தொழிற்துறைகள் வளர்க்கப்பட வேண்டும் என்றும், பெருவீத, நடுத்தர மற்றும் சிறுவீத தொழில்கள் ஒரு சேர வளர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது. இதன்படி தொடங்கப்பட்ட 'மாபெரும் பாய்ச்சலில்' புதிய கம்யூன் வடிவங்கள் தோன்றின. லட்சக் கணக்கான மக்கள் தொழிற்துறை, ரயில்வே, பாசன திட்டங்களை நிறைவேற்றுவதில் எழுச்சியாய் பங்கேற்றனர். 1956லிருந்து 1966க்குள் தொழிற்துறை செல்வம் நான்கு மடங்கு அதிகரித்தது. எனினும் சில இடது தவறுகளும் நிகழ்ந்தன. கம்யூன்களை உருவாக்குவதில் அதிகார வர்க்க முறைகள் சில இடங்களில் தோன்றின. அரசாங்க உத்தரவுகள் மூலம் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுய முயற்சியில் கட்டப்பட்ட சில இரும்பு எஃகு துறைகள் பொருளாதார தொழில் நுட்ப ரீதியில் பலவீனமாக இருந்தன. சில இடங்களில் பூர்சுவாக்களுக்கு எதிரான போராட்டத்தில் சிலர் தவறாக அணுகப்பட்டனர். இத்தவறுகள் அனைத்தும் உடனடியாகத் திருத்தப்பட்டன. கம்யூனிசம் அடையப்பட்டு விட்டதாகக் கூறி நடைமுறையை மேற்கொண்டவர்கள் விமர்சிக்கப்பட்டனர். 8வது மத்தியக்கமிட்டியின் ஆறாவது பிளீனம் (1958 நவம்பர் 28—டிசம்பர் 10) 'இவ்வாறு கூறுவது பொறுப்பற்றது...உயர்ந்த கம்யூனிச கருத்துக்களை கேலிக்குரியதாக்குவது' எனக்கண்டித்தது, மேலும் மற்றொரு தீர்மானம் 'நல்லெண்ண விருப்பங்கள் போதுமானவையல்ல, கம்யூன்கள் கம்யூனிசத்தில் நுழைந்துவிட்டன என்று ஆதாரமற்று பிரகடனப் படுத்தக்கூடாது' என்று எச்சரித்தது. 1959ல் மாவோ சொன்னார்: ''சமத்துவ போக்குகள் உற்பத்தி குழுக் களுள்ளும், தனிநபர்களுக்குள்ளும் வருமானத்தில் உள்ள

ஏற்றத் தாழ்வை மறுக்கிறது. இது 'உழைப்புக்கேற்ற ஊதியம், அதிக வேலைக்கு அதிக ஊதியம்' என்ற சோசலிச கோட்பாட்டை மறுப்பதாகும்.'' (41)

'கம்யூன் மற்றும் மாபெரும் பாய்ச்சலில்' நிகழ்ந்த இடது தவறுகள் உடனே திருத்தப்பட்டன. ஆனால் 1959ல் நடைபெற்ற லுசான் பிளீனத்தில், அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த பெங்டு ஹை என்பவர் 'சிலதோழர்கள் அரசியலை எல்லாவற்றுக்கும் பதிலியாக ஆணையில் வைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். பொருளாதார விதிகளுக்கு இது பதிலியாக இருக்க முடியாது' என்று சோசலிச கட்டுமானம் பற்றிய பொதுவழியையே தாக்கினார். இதே ஆண்டில் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 21வது காங்கிரஸ் 'ரசியாவில் முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் எதுவும் இல்லை' என்றும் 'சோசலிசம் இறுதியாகவும் உறுதியாகவும் வெற்றி பெற்றுவிட்டது' என்றும்' ஒரு நாட்டில் சோசலிசம் கட்டப்பட முடியுமா என்ற கேள்வி இறுதியாக, முழுமையாக, வெற்றிகரமாக தீர்க்கப் பட்டு விட்டது' என்றும் அறிவித்தது. தான் எழுதிய கட்டுரை ஒன்றில் லியூசோஷி அதை அப்படியே பிரதிபலித்தார். (சீனத்தில் மார்க்சிய- லெனியத்தின் வெற்றி என்ற அவருடைய கட்டுரையில், 1959 செப்) சீனத்திலும் இறுதியாகவும், உறுதியாகவும் சோசலிசம் வெற்றி பெற்றுவிட்டது என்றும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் இல்லை என்றும் அதில் அவர் கூறினார். லுசான் பிளீனத்தில் பேசிய மாவோ ''கடந்த பத்தாண்டுகளாக சோசலிசப் புரட்சியில் நடந்து கொண்டிருக்கும் போராட்டம், பிரதான பகை வர்க்கங்களான பாட்டாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் இடையிலான வாழ்வா சாவா என்ற போராட்டம், தொடர்ந்து நடக்கும் வர்க்கப் போராட்டம்'' (42) என்று கூறினார்.

இதையடுத்து 1961ல் லியூசோஷி, கூட்டுறவு முறை தோல்வி அடைந்துவிட்டது என்றும், எனவே தனியுடைமைப் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்றும் வாதிட்டார். அதற்கு ஆதரவான 'நான்கு சுதந்திரங்களைப்' பிரச்சாரம் செய்தார். 1961ல் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது காங்கிரஸ் திருத்தல்வாதத்தை சகல பரிமாணங்களிலும் நிறைவு செய்தது. ரசியாவில் பாட்டாளிவர்க்க கட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை இனியும் தேவை இல்லை என்றும், அனைத்து மக்கள் கட்சி, அனைத்து மக்கள் அரசு என்றும் அறிவித்தது. இந்தப் பின்னணியில் 8வது மத்திய கமிட்டியின் 8வது பிளீனக் கூட்டத்திலும், 1962ல் நடைபெற்ற 7000 ஊழியர்கள் மாநாட்டிலும் 'கம்யூன்கள்' மாபெரும் தோல்வியடைந்துவிட்டன; இது சில மனிதர்களின் அகநிலை விருப்பங்களால் விளைந்த சேதம் என்றும் 'கூட்டுப் பண்ணைகளால் எந்த நன்மையும் ஏற்படவில்லை' என்றும் தாக்கிய லியூசோஷி, உற்பத்தியை இலக்குகள் அடிப்படையில் இல்லாமல் லாப அடிப்படையில் அமைப்பது பற்றியும், கொள்கைக்கு அல்ல நிபுணத்துவத்துக்கு முதன்மை யளிப்பது பற்றியும், சேவை அல்ல சுயநலத்தை அடிப் படையாகக் கொள்வது பற்றியும் போதித்தார். வர்க்கப் போராட்டம் முடிவடையவில்லை என்பதை மாவோ மீண்டும் நினைவூட்டினார். ''சோசலிசம் நீண்ட வரலாற்றுக் கால கட்டம் கொண்டது. அது வர்க்கங் களும், வர்க்க முரண்பாடுகளும், வர்க்க போராட்டங் களும், சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான போராட்டமும் கொண்டது. முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் இருக் கிறது''(43) என்றார்.

1963 மே 20ல் 'தற்போதைய நாட்டுப்புற பணி களில் சில பிரச்சினைகள்' என்ற நகல் தீர்மானம்

மத்திய கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது. பின்னர் வந்த கலாச்சாரப் புரட்சியின் ஆவணத்தில் இதன் முதல் பத்து குறிப்புகள் இடம் பெற்றன.

மாவோ தொடங்கி வைத்த சோசலிச கல்வி இயக்கம் 'நான்கு சுத்தங்களு'க்கான இயக்கமாக நடத்தப் பட்டது. கணக்குப் புத்தகம், தானிய பொது இருப்பு, வேலைப் புள்ளி, திருட்டு, வட்டி போன்றவற்றில் குற்றங்கள், ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப் படவேண்டும் என்று இந்த இயக்கத்தில் கோரப்பட்டது. இது சித்தாந்தப் போராட்டமல்ல, கற்றுக் கொடுக்கும் போக்கிலானதுமல்ல. புரட்சிகர சோசலிச வர்க்கப் போராட்டமாகும் அரசியல், பொருளாதார, சித்தாந்த மற்றும் அமைப்பு துறையில் அடிப்படையை நிறுவுவதற் கான இயக்கமாகும். கணக்குப் புத்தகங்களையும் தானியக்கிடங்குகளையும் முறைப்படுத்துவது, விதிகளை உருவாக்குவது, குற்றங்களைத் தண்டிப்பது ஆகியவை இதன் நோக்கமாகும். ஆனால் இந்நோக்கங்களை எல்லாம் முறியடிக்கும்படியாக லியூசோஷி மற்றொரு பத்து குறிப்பாணைகளை அனுப்பினார். சோசலிச கல்வி இயக்கம் மேலிருந்து நடத்தப்பட வேண்டுமே தவிர கீழிருந்து கூடாது என அது கூறியது. 'விமர்சனங்கள் எப்போதும் மேலிருந்து இருப்பது மட்டுமே சரியானது. கீழிருந்து வருவது குழப்பமே' (44) என்பது அவர் கருத்து. இது மக்களின், அணிகளின் பங்கேற்பை மறுத்து இயக்கத்தை செயலிழக்கச் செய்தது. வர்க்கப் போராட்டத்தை மறுத்து 'நான்கு சுத்தங்களுக்கும் நான்கு அசுத்தங்களுக்கும் இடையிலான முரண்பாடு' என்ற கோட்பாட்டை முன்வைத்தது.

லியூசோஷியின் இக்கோட்பாட்டை நிராகரித்த மாவோ சோசலிச கால கட்டம் முழுவதும் பிரதான முரண்பாடு இரு வர்க்கங்களுக்கு இடையிலானது,

இரண்டு பாதைகளுக்கு இடையிலானது என்பதை உறுதிப்படுத்தினார். இயக்கம் இருவேறு வழிகளிலும் நடைபெற்றது. திருத்தப்பட முடியாத முதலாளித்துவ பாதையாளர்கள் அதிகாரத்தில் இருக்கும்வரை சோசலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமில்லை. எனவே 1965 ஜனவரியில் நடைபெற்ற பொலிட்பீரோ கூட்டத்தில் கலாச்சாரப் புரட்சிக்கான நகல் திட்டம் ஒன்றை நிறைவேற்றினார் மாவோ. அது கலாச்சாரப் புரட்சியின் இரண்டு கடமைகளை தெளிவுபடுத்தியது. (அ) அதிகாரத்தில் இருப்பவர்களிடம் தவறுகள் பிரதானமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது அவர்கள் சீரழிந்தவர்களாகவோ எதிர்ப்புரட்சியாளர்களாகவோ இருந்தாலோ அவர்கள் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். (ஆ) கட்சி அமைப்பு சீர்கெட்டிருந்தால் தற்காலிகமாக அதிகாரத்தை ஏழை நடுத்தர விவசாயீகள் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். கட்சி அமைப்பு சீரமைக்கப்படும்வரை தற்காலிகமான ஏற்பாடுதான் இது. கூடவே 'புரட்சியை முன்வைத்து உற்பத்தியைப் பெருக்குங்கள்' (Grasp revolution, promote production) என்ற முழக்கத்தையும் முன்வைத்தது. கலாச்சாரப் புரட்சியை வழிநடத்துவதற்காக அய்வர் குழு ஒன்றையும் நியமித்தது (45).

கலாச்சாரப் புரட்சிக்குப் பொறுப்பேற்ற அய்வர் குழு பிப்ரவரியில் தயாரித்த 'வழிகாட்டும் அறிக்கை' (Outline report) வர்க்கப் போராட்டத்தையும், மக்கள் திரள் வழியையும் கைவிட்ட பூர்சுவா வலதுகளின், முதலாளித்துவ பாதையாளர்களின் அறிக்கையாகவே இருந்தது. எனவே 1966 மே 16ல் கூடிய மத்திய கமிட்டி அந்த அறிக்கையையும், அய்வர் குழுவையும் ரத்து செய்தது. புதிய குழு ஒன்றை நியமித்து, தானே நேரடியாக கலாச்சாரப் புரட்சிக்கு தலைமையேற்று, அதிகார

பூர்வமாக கலாச்சாரப் புரட்சியைத் தொடங்கி வைத்தது. அப்போது வெளியிடப்பட்ட அறிக்கை ''கட்சி, அரசாங்கம், ராணுவம் ஆகியவற்றுள்ளும், பல்வேறு கலாச்சார அமைப்புகளிலும் முதலாளி வர்க்க பிரதிநிதிகளின் ஓர் கூட்டமாக எதிர்ப் புரட்சி திரிபுவாதிகள் ஊடுருவியுள்ளனர். ஒருகால் நிலைமை பக்குவமடைந்ததும் அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்றி விடுவர்'' (46) என எச்சரித்தது.

அதன்பின் ஆகஸ்டு 5ல் கூடிய மத்திய கமிட்டி கலாச்சாரப் புரட்சிக்கு வழிகாட்டும் 16 குறிப்புகள் அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அது தற்போது கலாச்சாரப் புரட்சியின் 'நமது பிரதான தாக்குதல் இலக்கு, அதிகாரத்தில் இருந்து கொண்டு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் நபர்கள்' (47) என சுட்டிக்காட்டியது. மேலும் 'அதிகாரத்தில் இருக்கும் முதலாளித்துவ பாதையாளர்களை எல்லா தலைமை பதவிகளிலிருந்தும் அகற்றிவிட்டு பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள் தலைமையைக் கைப்பற்றும்' (48) படி அறைகூவல் விடுத்தது.

மேலும் அந்த அறிக்கை கூறியது: ''மாபெரும் பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியில் மக்களின் சிந்தனையை புரட்சிகரமயமாக்க வேண்டும். அதன் மூலம் பெரிய, விரைந்த, சிறந்த பொருளாதார நல விளைவுகளை எல்லாத் துறைகளிலும் பெற வேண்டும். மக்கள் முழுமையாகத் தட்டி எழுப்பப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். கலாச்சார அரங்கிலும், உற்பத்தி அரங்கிலும் ஒன்றையொன்று பாதிக்காமல் இதை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமே. நமது எல்லாப் பணிகளிலும் உயர்ந்த

தரத்துக்கு உத்திரவாதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாபெரும் பாட்டாளிவர்க்க கலாச்சாரப் புரட்சி, நமது நாட்டில் உற்பத்தி சக்திகளின்வளர்ச்சிக்கு மாபெரும் உந்து சக்தியாகும். கலாச்சாரப் புரட்சியை உற்பத்தியின் வளர்ச்சிக்கு எதிராக நிறுத்தும் கருத்து தவறானதாகும்'' (49).

கலாச்சாரப் புரட்சி பரந்துபட்ட மக்களின் வெகுஜன இயக்கமாக நடத்தப்பட்டது. 1967ல் மாவோ கூறினார்: ''கடந்த காலத்தில் கிராமப் புறங்களிலும், தொழிற்சாலைகளிலும், கலாச்சார வட்டாரங்களிலும் சோசலிச கல்வி இயக்கத்தை நாம் நடத்தினோம். அதில் நாம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை வெளிப்படையாகவும், எல்லா வகையிலும் நமது இருண்டபக்கங்களை அம்பலப்படுத்தி. பரந்த மக்களைத் திரட்டும் முறையை நாம் வகுப்பதில் வெற்றி பெறாததே காரணம். தற்போது நாம் தீர்வு கண்டு விட்டோம், மாபெரும் பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியில்'' (50). மேலும் கலாச்சாரப் புரட்சி உச்சகட்டத்தில் இருந்தபோது அவர் கூறினார், ''தற்போதைய கலாச்சாரப் புரட்சி முதலாவது, இதைப் போன்று பல எதிர் காலத்தில் நடத்த வேண்டியிருக்கும். புரட்சியின் விளைவு நீண்ட வரலாற்றுக் காலத்துக்குப் பின்பே தீர்மானிக்கப்படும். நமது பணிகளை நாம் சரிவர நிறைவேற்றாவிட்டால் முதலாளித்துவம் எப்போது வேண்டுமானாலும் மீண்டும் நிலை நாட்டப்படலாம். கட்சியின் அனைத்து உறுப்பினர்களும், நாட்டின் அனைத்து மக்களும் 3 அல்லது 4 கலாச்சாரப் புரட்சிகளே போதும் என்று நினைத்துவிடக் கூடாது-தேசத்தின் அமைதிக்காக நீங்கள் எப்போதும் கவனத்துடன் இருக்க வேண்டும். ஒரு கணம் கூட உங்கள் கவனத்தைத் தளர்த்தி விடக்கூடாது'' (51).

கலாச்சாரப் புரட்சியில் லியுசோஷியின் முதலாளித்துவ தலைமை தகர்க்கப்பட்டது. அதன் பின் நடைபெற்ற கட்சியின் 9வது காங்கிரசில் மீண்டும் வர்க்கப் போராட்டத்தை பின்னுக்குத் தள்ளும் கோட்பாட்டை லின்பியாவோ முன் வைத்தார். 1969 ஏப்ரலில் நடைபெற்ற 9வது காங்கிரசில் லின்பியாவோவின் 'உற்பத்தி சக்திகள்' பற்றிய கோட்பாடு திருத்தப் பட்டது. வர்க்கப் போராட்டம் தொடர்வது பற்றி குறிப்பிடப்பட்டது. 7வது மத்திய கமிட்டியின் முதல் பிளீனத்தில் மாவோ கூறினார், ''மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை நடத்தியிருக்கா விட்டால் நமது அடிப்படையை உறுதிப்படுத்தியிருக்க முடியாது. எனது கணிப்பின்படி பெரும்பான்மையான தொழிற்சாலைகளில்—எல்லாவற்றையும் நான் அர்த்தப் படுத்தவில்லை, பெரும்பான்மை என்றே கூறுகிறேன்— தொழிலாளர்கள் மற்றும் உண்மையான மார்க்சிஸ்டுகள் கையில் அதிகாரம் இல்லை என்று அஞ்சுகிறேன். கட்சி கமிட்டி செயலர்கள், துணைச் செயலர்கள், கட்சி கமிட்டி உறுப்பினர்கள், கிளைச் செயலர்களிடையே நல்லவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் லியூவின் வழியைப் பின்பற்றி 'பொருளாதார ஊக்கம்', 'லாபத்தை ஆணையில் வைப்பது', 'பாட்டாளி வர்க்க அரசியல் உணர்வை வளர்ப்பதற்கு பதில் போனஸ் வழங்குவது' போன்றவற்றைப் பின்பற்று கிறார்கள். ஆனால் தொழிற்சாலைகளில் மோசமான மனிதர்களும் இருக்கிறார்கள். புரட்சி இன்னும் முடிவடையவில்லை என்பதையே இது குறிக்கிறது'' (52).

பிழைப்புவாதியும், இரட்டை வேடதாரியுமான லின் பியாவோ அம்பலப் பட்டுப் போன பின் டெங்சியாவோ பிங் தலைமையில் முதலாளித்துப் பாதையாளர்கள்

முன்கையெடுத்தனர். கலாச்சாரப் புரட்சியில் தூக்கி எறியப்பட்ட டெங்சியாவோ பிங் சொல்லிக் கொள்ளப் படும் சுயவிமர்சனத்தின் மூலம் 1973ல் மீண்டும் கட்சிக் குள் வந்தார். 1975ல், 'பொதுத் திட்டம்' என்றபெயரில் வர்க்கப் போராட்டத்தைக் கைவிடும் திட்டம் ஒன்றை வைத்தார். மாவோ வெவ்வேறு நேரங்களில் கூறிய அய்க் கியம், ஸ்திரத்தன்மை, வர்க்கப் போராட்டம் ஆகிய வற்றை ஒன்றிணைத்து 'பொருளாதார வளர்ச்சிக்கு மூன்று பிரதான கண்ணிகள்' என்ற கோட்பாட்டை முன் தள்ளினார். 'பொது திட்டத்துடன்' இவர் முன்வைத்த 'விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்', 'தொழிற்துறை நிர்வாகம்' பற்றிய ஆவணங்கள் சகல பரிமாணங்களிலும் மூதலாளித்துவப் பாதையை போதித்தன. அவற்றை 'மூன்று விஷ விதைகள்' என்றழைத்தார் மாவோ. அவர் கூறினார் "என்ன, மூன்று ஆணைகளை கேந்திரகண்ணி களாகக் கொள்வதா? ஸ்திரத் தன்மையும், அய்க்கியமும் என்பது வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவது என்று அர்த்தம் அல்ல. வர்க்கப் போராட்டமே கேந்திர கண்ணி; மற்றதெல்லாம் அதைத் தொடர்வதேயாகும்' (53). இந்த கோட்பாட்டை முன்வைத்த டெங் சியாவோபிங் பற்றி 1974லிலேயே ''இந்த மனிதர் வர்க்க போராட்டத்தை புரிந்து கொள்ளவில்லை. இந்த கேந்திர கண்ணியை இந்த மனிதர் குறிப்பிடாமல் இருக்கிறார். அவருடைய 'வெள்ளைப் பூனை, கறுப்புப் பூனை' கோட்பாடு மார்க்கியத்திற்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் வேறுபாடு காட்டுவதில்லை'' (54) என்று விமர்சித்திருக்கிறார். இதையடுத்து 'டெங்சியாவோ பிங்கிற்கு எதிரான விமர்சன இயக்கம்', 'வலது விலகல் காற்றைத் துரத்தியடிப்பதற்கான இயக்கம்' தொடங்கப் பட்டதுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவ சியம் பற்றிய மா—லெ கோட்பாட்டை ஆழ்ந்து கிர

சித்து கொள்வதற்கான இயக்கம் ஒன்றையும் மாவோ தொடங்கி வைத்தார்.

சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தை குறைத்து மதிப்பிடுகின்றவர்களைப் பார்த்து சொன்னார்: "1949-ல் நமது நாட்டில் பிரதான முரண்பாடு பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையிலானது என்று அது குறிப்பிட்டது. 13 ஆண்டுகளுக்குப் பின்னால் வர்க்கப் போராட்டம் பற்றிய பிரச்சினை மீண்டும் எழுந்தது; நிலைமைகள் நல்லநிலமைக்கு வந்ததாகக்கருதப் பட்டது. பின் கலாச்சாரப் புரட்சி ஏன் நடத்தப்பட்டது? வர்க்கப்போராட்டத்தை நடத்துவதற்குத்தான். வர்க்கப் போராட்டம் காலாவதியாகி விட்டது என்று போதித்த லியுசோஷி கூட வர்க்கப் போராட்டத்தைக் கைவிடவில்லை. அவர் தன்னைச் சார்ந்த துரோகிகள் கும்பலையும், உறுதியான தனது ஆதரவாளர்களையும் காப்பாற்ற விரும்பினார். லின்பியாவோ பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரு கவிழ்ப்பு சதி நடத்த விரும்பினார். வர்க்கப் போராட்டம் காலாவதியாகி விட்டதா என்ன?... நாம் சிக்கல் வாய்ந்த வர்க்கப் போராட்டத்தை வெறும் படிப்பறைவாதமாக, மிக எளிமைப்படுத்தி விடக்கூடாது" (55).

சோசலிச சமுதாயத்தின் வர்க்கப் போராட்டம் பற்றி தொகுத்துரைத்த அவர் முதலாளித்துவ மீட்சிக்கு எதிராக விழிப்புடன் இருக்கும்படி கோரினார். "சோசலிச சமுதாயம் மிக நீண்ட வரலாற்றுக் காலம் கொண்டதாகும். சோசலிசத்தின் இந்த வரலாற்றுக் காலம் முழுவதும் வர்க்கங்களும், வர்க்கமுரண்பாடுகளும் வர்க்கப் போராட்டமும், சோசலிசப் பாதைக்கும், முதலாளித்துவ பாதைக்கும் இடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் நிலவுகின்றன. நமது கவனத்தை மிகக் கூர்மையாக வைத்துக்

கொள்ள வேண்டும். சோசலிசக் கல்வியை நாம் நடத்த வேண்டும். வர்க்கப் போராட்டத்தையும், வர்க்க முரண்பாடுகளையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நமக்கும் எதிரிகளுக்கும் இடையேயான முரண்பாட்டையும் மக்களுக்கு இடையேயான முரண்பாட்டையும் வேறுபடுத்திக் கையாள வேண்டும். அவற்றைச் சரியாகவும் கையாள வேண்டும். இல்லாவிடில் நம்மைப் போன்ற ஒரு சோசலிச நாடு அதன் எதிர்மறையாக மாறி சீரழிந்து முதலாளித்துவ மீட்சி நடந்தேறும்'' (56).

இதற்கான வர்க்க அடிப்படை தொடர்ந்து நிலவுவதையும் அவர் தொகுத்து உரைத்தார். ''சிறுவீத உற்பத்தி முதலாளித்துவத்தையும், முதலாளிகளையும் தொடர்ச்சியாக, தினமும், மணிதோறும், தன்னியல்பாகவும், பெரும் அளவிலும் உற்பத்தி செய்கிறது என்று லெனின் சொன்னார். அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினுள்ளும், கட்சியினுள்ளும் கூட உற்பத்தியாகிறார்கள். பாட்டாளி வர்க்க அணிகளுள்ளும், அரசு மற்றும் பிற அமைப்புகளின் அலுவலர்களுள்ளும் அவர்கள் முதலாளித்துவ வாழ்க்கை முறையை மேற்கொண்டிருக்கிறார்கள்'' (57). மேலும் கூறினார்: ''ஜனநாயகப் புரட்சிக்கு பின் தொழிலாளர்களும் ஏழை, கீழ், மத்திய தர விவசாயிகளும் தொடர்ந்து புரட்சியை நடத்த விரும்புகிறார்கள். அதற்கு மாறாக கட்சி உறுப்பினர்களில் பலர் தொடர்ந்து முன்னேற விரும்பவில்லை. சிலர் பின்வாங்கவும், புரட்சியை எதிர்க்கவும் செய்கிறார்கள். ஏன்? ஏனெனில் அவர்கள் உயர் அதிகாரிகளாக இருக்கிறார்கள். தமது அதிகார நலன்களைக் காத்துக் கொள்ள விரும்புகிறார்கள்'' (58). சோசலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல தாக்குதல் இலக்கையும் அவர் சுட்டிக் காட்டினார். 'நீங்கள் சோசலிசப் புரட்சியை நடத்திக்கொண்டிருக்

கிறீர்கள். ஆனால் முதலாளிகள் எங்கிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியவில்லை. அவர்கள் கட்சிக்குள்ளாக இருக்கும் வலதுசாரிகள். அவர்கள்அதிகாரத்தில் இருந்து கொண்டு, முதலாளித்துவ பாதையை மேற் கொண்டிருக்கிறார்கள்' (59).

1976 ஜனவரியில் சூயென்லாய் மறைந்தார். ஏப்ரல் 1976ல் டியன் அன் மென் சதுக்கத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் நிகழ்ந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்காக டெங்சியாவோ பிங் கட்சிக்கு உள்ளும் வெளியிலும் இருக்கும் அனைத்து பதவிகளிலிருந்தும் மத்திய கமிட்டியின் பொலிட் பீரோவால், மாவோவின் ஆலோசனையின் பேரில் வெளியேற்றப்பட்டார். செப்டம்பர் 9, 1976ல் நடந்த உலகின் துயர்மிகு நிகழ்ச்சியான மாவோவின் மறைவுக்குப் பின் மீண்டும் படிப்படியாக டெங்கும்பல் அதிகாரத்துக்கு வந்து, 'நான்கு நவீன மயமாக்கல்' கேந்திரக் கண்ணி என்றும், வர்க்கப் போராட்டம் பிரதானமானது அல்ல என்றும் மீண்டும் பகிரங்கமாக பிரகடனப்படுத்தி இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதை மறுதலித்திருக்கிறது. இவ்வாறு சீனத்தில் உள்ளிருந்தே முதலாளித்துவ பாதையாளர்கள் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். 1966லேயே மாவோசொன்னதைநாம்நினைவுபடுத்திக்கொள்வோம். 'வலது சாரிகள் கம்யூனிச விரோத கவிழ்ப்புச் சதியை சீனத்தில் நிகழ்த்துவார்களானால் அவர்கள் ஒருபோதும் அமைதியாக இருக்க முடியாது. அவர்களுடைய ஆட்சி மிகக்குறுகிய ஆயுள் கொண்டதாகவே இருக்கும் என்று நான் நிச்சயமாக சொல்கிறேன். ஏனெனில் மொத்த ஜனத்தொகையில் 90%க்கு மேற்பட்ட மக்களின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புரட்சியாளர்கள் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்' (60). ●

# 11. சோசலிசத்தில் வர்க்கப் போராட்டம்: லியூ-டெங் திருத்தல்வாதம்

குருசேவ் திருத்தல்வாதக்கும்பல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசில் 'மூன்று சமாதானக் கோட்பாடுகள்' மூலம் திருத்தல்வாதத்தை உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தொடங்கிவைத்த அதே ஆண்டில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 8வது காங்கிரசில் பேசிய லியுசோஷி 'சீனா சோசலிச மாற்றத்தில் தீர்மானகரமான வெற்றியடைந்துவிட்டது' என்றும் 'முதலாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படையில் தீர்க்கப்பட்டுவிட்டது' என்றும் 'சீன சமுதாயத்தில் தற்போதைய அடிப்படை முரண்பாடு முன்னேறிய சோசலிச அமைப்புக்கும் பின் தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதே' என்றும் அறிவித்தார். இந்த முடிவுகள் எட்டாவது காங்கிரஸ் ஆவணங்களிலும் இடம் பெற்றன. மேலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 21வது காங்கிரஸ் "ரசியாவில் முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் எதுவும் இல்லை' என்றும் "சோசலிசம் ஒரு நாட்டில் கட்டப்பட முடியுமா என்ற கேள்வி இறுதியாக, முழுமையாக, வெற்றிகரமாக தீர்க்கப்பட்டுவிட்டது' என்றும் அறிவித்தது. அதை அடுத்து லியுசோஷி தான்எழுதிய கட்டுரைஒன்றில்'சீனத்திலும் இறுதியாகவும், உறுதியாகவும் சோசலிசம் வெற்றி

பெற்றுவிட்டது' என்றும் 'முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் எதுவும் இல்லை' என்றும் கூறினார்.

மாவோவின் மறைவுக்குப் பின் சீனத்தில் ஆட்சியிலும், கட்சியிலும் அதிகாரத்துக்கு வந்திருக்கும் டெங் கும்பல் லியூவின் அதே கருத்துக்களை முன்னுக்குத் தள்ளியிருக்கிறது. 11வது மத்தியக் கமிட்டியின் 6வது பிளீனக் கூட்டத்தொடரில் (ஜீன், 1981) நிறைவேற்றப்பட்ட "சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு பற்றிய தீர்மானம்' என்ற ஆவணமும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது காங்கிரஸ் (செப்டம்பர், 1982) ஆவணமும் சீனத்தில் இனியும் "வர்க்கப் போராட்டம் பிரதான முரண்பாடு அல்ல' என்றும் "வர்க்கப் போராட்டத்தை கேந்திர கண்ணியாகக் கொள்க' என்ற கோட்பாடும், 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது' பற்றிய கோட்பாடும் தவறானது என்றும் கூறுகின்றன. லியூவின் கொள்கைகளுக்கு மட்டுமின்றி, கலாச்சாரப் புரட்சியில் தகர்த்தெறியப்பட்ட மறைந்திருந்த துரோகியான லியூ சோஷிக்கும், மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளன் எனப் புகழாரம் சூட்டி மறுவாழ்வு கொடுத்துள்ளது டெங் கும்பல்.

லியூ-டெங் கும்பலின் இந்த கோட்பாடுகள், சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், வர்க்கப் போராட்டத்தையும் கைவிடும் குருச்சேவ் கும்பலின் வர்க்க ஒடுக்குமுறைக் கோட்பாட்டின் மறுபதிப்பே என்பதை, சோசலிச சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளைப் பற்றி அறிந்த யாரும் எளிதில் கூறிவிட முடியும்.

முந்திய சமுதாய அமைப்புகளைப் போலவே சோசலிச சமுதாயத்திலும் உற்பத்தி உறவுகளுக்கும்

உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும், மேல் கட்டுமானத்துக்கும், அடித்தளத்துக்கும் இடையிலான முரண்பாடுமே அடிப்படை முரண்பாடுகளாக இருக்கின்றன. எனினும் இது பழைய சமுதாயங்களின் அடிப்படை முரண்பாடு களிலிருந்து அடிப்படையிலேயே இயல்பிலும், சாராம்சத்திலும் வேறுப்பட்டதாகும்.

பட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றுவதிலிருந்து சோசலிச சமுதாயம் தொடங்குகிறது. பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றியவுடன் சுரண்டும் வர்க்கங்களை வர்க்கம் என்ற முறையில் ஒழித்துக்கட்டுகிறது. பெருவீத முதலாளித்துவ தொழில்களை நேரடியாகவும், அரசு முதலாளித்துவத்தின் மூலமும் சோசலிச உடமையாக்குகிறது. சிறுவீத உற்பத்திகளை கூட்டுடமை முறை மூலம் சோசலிச உடமைக்கு வழிநடத்துகிறது. இவ்வாறு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் உற்பத்தி உறவுகள் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி சாதன உடமை முறையில் பிரதானமாக தனியுடமை முறை ஒழிக்கப்பட்டபின் கூட்டுடமை முறைக்குள்ளும், கூட்டுடமைமுறைக்கும் அரசுடமை முறைக்கும் இடையிலும் முரண்பாடுகள் நிலவுகின்றன. உண்மையில் கூட்டுடமைக்கும் அரசுடமைக்கும் இடையிலான முரண்பாடு விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான முரண்பாடாகும். உற்பத்தி சாதனங்களில் தனியுடமை ஒழிக்கப்பட்டிருந்தபோதிலும் இன்னும் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான முரண்பாடும், அறிவுழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாடும், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான முரண்பாடும் மறையவில்லை. இம்முரண்பாடுகளும் ஒழிக்கப்பட்டு விவசாயமும், தொழிலும் வெவ்வேறு வர்க்கங்களால் செய்யப்படும்.

நிலைமாறி ஓரே மக்களால் செய்யப்படும் நிலை தோன்றுவது கம்யூனிச முறையின் அம்சமாகும். எனவே உற்பத்தி சாதன உடமைகளில் தனியுடமை பிரதானமாக ஒழிக்கப்பட்டபின், கூட்டுடமை முறைக்கும் அரசுடமை முறைக்கும் இடையிலான முரண்பாடும் ஒழிக்கப்பட வேண்டும். அதாவது கூட்டுடமை முறை அரசுடமை முறைக்கு வளர்க்கப்பட வேண்டும்.

பாட்டாளி வர்க்கசர்வாதிகாரத்தின் கீழ் தனியுடமை முறை கூட்டுடமை முறைக்கும், கூட்டுடமை முறை அரசுடமை முறைக்கும் மாறுவது உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாபெரும் பாய்ச்சலாகும். இது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தைத் தூக்கிஎறிவது போன்ற புரட்சியல்ல, எனினும் உற்பத்தி உறவுகளில் ஏற்படும் இந்தப் பாய்ச்சல் 'ஒரு சமூகப் புரட்சியாகும்'

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் உற்பத்தி உறவுகளில் ஏற்படும் இந்தப் புரட்சியை உற்பத்தி சக்திகளின் 'போதாக் குறையான' வளர்ச்சியைக் காரணம் கூறி முதலாளித்துவப் பாதையாளர்கள் எதிர்க்கிறார்கள். முதலாளித்துவத் தனியுடமையை அரசு முதலாளித்துவத்தின் மூலமும், நேரடியாகவும் சோசலிச உடமையாக மாற்றும் கொள்கையையும், சிறுவீத உற்பத்தியை கூட்டுறவு முறை மூலம் சோசலிச உடமையாக வளர்க்கும் கொள்கையையும் ரசியாவில் டிராட்ஸ்கி, புகாரின்போன்றோரும், சீனத்தில் லியூ-சோஷி தலைமையில் இருந்தவர்களும் எதிர்த்தனர். முதலாளித்துவத் தொழில் வளர்ச்சியும், விவசாயத்தில் எந்திரமயமாக்கலும், சோசலிச உடமை மாற்றத்துக்கு முன்நிபந்தனை என்பதாக அவர்கள் வாதிட்டனர். உற்பத்தி சக்திகளில் 'போதிய' வளர்ச்சி இன்றி உற்பத்தி உறவுகளை மாற்றியமைக்க முடியாது என்பது அவர்கள் வாதம்.

ஆனால் கூட்டுடமைமயமாக்கத்திற்கு தொழில் மயமாதலும் எந்திரமயமாதலும் முன் நிபந்தனை அல்ல.

மாறாக எந்திரமயமாவதற்கும், தொழில் மயமாவ தற்கும் சிறுவீத உற்பத்தி கூட்டுடமையாக்கப்படுவதும் முதலாளித்துவ தொழில்கள் சோசலிச உடமையாகவோ அரசு முதலாளித்துவமாகவோ மாற்றப்படுவதும் கூடுதல் துணைபுரியக் கூடியதாகும். அதை துரிதப் படுத்தக் கூடியதாகும். இது மட்டுமே தொழிலாளர், விவசாயிகள் கூட்டணியை பலப்படுத்தி விவசாயி களிடையே வர்க்க வேறுபாடுகள் விரிவடைவதைத் தடுக்கும். இதற்கு மாறாக தொழில்மயமாக்குவதற்கும், இயந்திரமயமாக்குவதற்கும் முதலாளித்துவத் தொழில் களையும், சிறுவித உற்பத்தியையும் அனுமதிப்பது தொழிலாளர், விவசாயிகளிடையிலான கூட்டை நிரந்தரமாகப் பிரிப்பதும், விவசாயிகளிடையே வர்க்க வேறுபாட்டை வளர்ப்பதுமேயாகும். இது சோசலிசத்துக்கு எதிரான முதலாளித்துவப் பாதையே யாகும்.

உற்பத்தி சாதனங்களில் பிரதானமாக உடமை மாற்றம் சாதிக்கப்பட்ட பின்பு கூட்டுறவு உடமை முறை அப்படியே நீடிக்க முடியாது. அது அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற வேண்டும். எந்திரமயமாக்கலின் மூலம் தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணி உறுதிப்பட வேண்டும். இல்லையெனில் விவசாயிகளிடையே வர்க்க வேறுபாடுகள் உருவாவதும், தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணி பலவீனப்படுவதும் தவிர்க்க முடியாது. இவ் வாறு கூட்டுறவு அமைப்புகள் எந்திரமயமாக்கலுடனும் அரசுடமையாக்கலுடனும் இணைக்கப்பட வேண்டும். அப்போது கூட்டுறவுக்கும் அரசுடமைக்கும் இடை யிலான முரண்பாடு தீர்வதுடன் விவசாயிகள் தொழி லாளர் கூட்டணி உறுதிப்படும். அவர்களுக்கிடையி லான வேறுபாடும் படிப்படியாக ஒழியும். சீனத்தின் நிலைமைகளில் இது குறித்து மாவோ கூறியது கவனத் துக்குரியதாகும். ''தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணி

ஏற்கனவே இரண்டு கட்டங்களைத் தாண்டிச் சென்றுள்ளது. முதலாவது நிலப்புரட்சி அடிப்படையிலானது. இரண்டாவது கூட்டுறவு இயக்கம். கூட்டுறவு மயமாக்கம் தொடர்ந்து முன்னோக்கிய இயக்க நிலையில் வைக்கப்படவில்லையெனில், விவசாயிகளிடையே வர்க்க வேறுபாடு வருவது தவிர்க்க முடியாதது. தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணியும் உறுதிப்பட முடியாது... தற்போது நமது தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணி அடுத்த அடி எடுத்து வைத்துள்ளது. அது எந்திரமயமாக்கத்தின் அடிப்படையில் தன்னை நிலை நாட்டிக் கொள்ளும். கூட்டுறவு மற்றும் கம்யூன் இயக்கங்களில் எந்திரமயமாக்கம் இல்லையானால் இந்தக்கூட்டணி உறுதிப்படுத்தப்பட முடியாது. நாங்கள் இப்போது கூட்டுறவுகளை கம்யூன்களாக வளர்க்கிறோம். அடிப்படை உடைமை முறையாக கம்யூன் டீம் இருப்பதிலிருந்து கம்யூன் முறைக்கு வளர்க்கிறோம். மேலும் அரசுடைமை முறைக்கு வளர்க்கிறோம். அரசு உடைமை முறையும், இயந்திரமயமாக்கலும் ஒருங்கிணைக்கப்படும்போது நாங்கள் உண்மையிலேயே தொழிலாளர்-விவசாயிகள் கூட்டணியை உறுதிப்படுத்த முடியும். தொழிலாளர்-விவசாயிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் படிப்படியாக நிச்சயமாகஅகற்றப்படும்''. (1)

இவ்வாறு தொடர்ந்து உற்பத்தி உறவுகளைப் புரட்சிகரமாக மாற்றுவது, உற்பத்தி சக்திகளின் தங்கு தடையற்ற வளர்ச்சிக்கு வகை செய்கிறது; தொழிலாளர் விவசாயிகளின் கூட்டணியை பலப்படுத்தி அவர்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் படிப்படியாக களையவும், கம்யூனிச சமுதாயத்தை நோக்கி வளரவும் வகை செய்கிறது. இது சோசலிச சமுதாயத்திலேயே உற்பத்தி உறவுகளுக்கும், உற்பத்தி சக்திகளுக்கும் இடையி

லான முரண்பாட்டைத் தீர்த்து அது கம்யூனிச சமுதாயமாக மாறும் ஒரு சமூகப் புரட்சியாக நிகழ்கிறது.

ஆனால் ஒரு சமூக புரட்சி என்பது வெறும் உடமை முறை மாற்றம் பற்றிய விசயம் மட்டுமல்ல. அது உடமை முறை மாற்றத்துடன் மேல்கட்டுமானம் மற்றும் மனிதனின் மாற்றத்தையும் உள்ளடக்கியதாகும். மேல்கட்டுமானத்தில் பிரதானமாக அரசு அமைப்புகளும், சித்தாந்தமும் உள்ளடக்கியதாகும். எனவே சோசலிச சமுதாயத்தில், உற்பத்தி உறவுகளில் தொடர்ந்து (சமூகப்) புரட்சிநடை பெறுவதற்கு மேல் கட்டுமானத்திலும்—அரசியல் சிந்தாந்த அரங்கில் பிரதானமாக—தொடர்ந்து புரட்சி நடப்பது அவசியமாகும். இதுவே குறிப்பிட்ட அடித்தளத்துக்கும், மேல் கட்டுமானத்துக்கும் உள்ள முரண்பாட்டைத் தீர்த்து கம்யூனிச சமுதாயத்திற்கு வழிநடத்தும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழே மட்டுமே சோசலிச சமுதாயத்தின் அமைப்புக்குள்ளாகவே நிலவும் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், அடித்தளத்துக்கும் மேல் கட்டுமானத்துக்கும் இடையிலான முரண்பாட்டையும் தீர்த்து சமூகப் புரட்சியை சாதிப்பது சாத்தியம்.

எவ்வாறாயினும் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும், அடித்தளத்துக்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடுமே சோசலிச சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடாக—சோசலிச சமுதாயம் முதிர்ந்த கம்யூனிச சமுதாயமாக மாறுவதற்கான உந்து சக்தியாக-இருக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

இதற்கு மாறாக, சோசலிச சமுதாயத்தில் முன்னேறிய உற்பத்தி முறைக்கும் பின்தங்கிய உற்பத்தி

சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என்று கூறுவது, உற்பத்தி உறவுகளிலும் மேல்கட்டுமானத்திலும் தொடர்ந்து புரட்சி நடத்த வேண்டியதன் அவசியத்தை மறுப்பதாகும். உற்பத்தி உறவுகளை "நிலைப்படுத்தி' விட்டு உற்பத்தி சக்திகளை வளர்ப்பது பற்றி பேசுவதாகும். இது அப்பட்டமான முதலாளித்துவக் கோட்பாடே அன்றி வேறல்ல. உற்பத்தி சக்திகள் முன்னோக்கி வளரும்போது உற்பத்தி உறவுகளோ, உற்பத்தி உறவுகளை மேல் கட்டுமானமோ தாமாக பின்தொடர்வதில்லை. எப்போதுமே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஏற்ப உற்பத்தி உறவுகளும் மேல் கட்டுமானமும் மாற்றப்படுகின்றன. இயல்பாகவே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு உற்பத்தி உறவுகள் தடையாகிவிட்டால் அது மாற்றியமைக்கப்பட மேல் கட்டுமானத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்று வதும், அதற்காக பொதுக்கருத்தை உருவாக்குவதும் முதன்மையாகி விடுகிறது. முதலில் உற்பத்தி உறவுகள் மாற்றியமைக்கப்பட்ட பின் - மாற்றியமைக்கப்பட்ட பின்பு மட்டுமே-உற்பத்தி சக்திகள் பரந்த வளர்ச்சியைக் காணுகின்றன. எனவே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு முதலில் மேல்கட்டுமானத்தில், குறிப்பாக அரசியல் சித்தாந்த அரங்கில் மாற்றமும், தொடர்ந்து உற்பத்தி உறவுகளில் மாற்றமும் அவசியமாகும். உற்பத்தி சக்தி களின் வளர்ச்சி உற்பத்தி உறவுகளை மாற்றுவதற்கு ஓரளவு அவசியம் என்பது உண்மையே. ஆனால் எப்போதுமே உற்பத்தி உறவுகளின் மாற்றத்திற்கு பின்பே உற்பத்தி சக்திகளின் பிரமாண்டமான வளர்ச்சி ஏற்படுகிறது என்பதுதான் விதியாக இருக்கிறது.

முதலாளித்துவப் புரட்சிகளை எடுத்துக்கொண்டால் பட்டறை உற்பத்திக் கட்டத்திலேயே முதலாளித்துவ உறவுகள் எந்திரங்கள் இன்றியே உற்பத்தியை நடத்தின.

அது பின்னர் பிரமாண்டமான தொழில் நுட்ப வளர்ச்சியின் தேவைகளை முன்வைத்து நிறைவேற்றியிருக்கிறது. எனவே உற்பத்தி உறவுகளின் மாற்றத்திற்கு உற்பத்தி சக்திகளின் பிரமாண்டமான வளர்ச்சி முன் நிபந்தனை அல்ல. முதலாளித்துவப் புரட்சிகளை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டோமானால் தொழிற்புரட்சிக்கு முன்னதாகவே பூர்சுவாதேசங்கள் உருவாகி விட்டன. முதலாளிகள் முதலில் மேல்கட்டுமானத்தை மாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். பின்னர் உற்பத்தி உறவுகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். உற்பத்தி சக்திகளின் பிரமாண்டமான வளர்ச்சியை சாதித்தார்கள். பிரிட்டனில் முதலாளித்துவ புரட்சி 16ஆம் நூற்றாண்டில் நடைபெற்றது. ஆனால் தொழில் புரட்சி 18-19ம் நூற்றாண்டில்தான் நடைபெற்றது. ஜெர்மன், ஜப்பான், பிரான்ஸ் அமெரிக்கா இப்படி எந்த நாட்டை எடுத்து கொண்டாலும் இதுதான் உண்மை. முதலில் மேல்கட்டுமானத்தில் மாற்றம், பின்னர் உற்பத்தி சக்திகளில் பிரமாண்ட மாறுதல் ஏற்படுவதற்கு முன்னதாகவே உற்பத்தி உறவுகளில் மாற்றம்.

முதலாளித்துவப் புரட்சிகள் அனைத்தும் முதலில் மேல்கட்டுமானத்திலும் பின்னர் உற்பத்தி உறவுகளிலும் மாற்றத்தைக் கொண்டு வந்து உற்பத்தி சக்திகளில் மாபெரும் வளர்ச்சியை சாதித்திருந்தபோதும், மீண்டும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டபோது, முதலாளித்துவ வர்க்கம் தானே உற்பத்தி உறவுகளை மாற்றுவதுபற்றி முன்வைப்பது இல்லை என்பது மட்டுமல்ல, பாட்டாளி வர்க்கம் உற்பத்தி உறவுகளை மாற்றும் திட்டத்தை முன்வைக்கும்போது மூர்க்கமாக எதிர்க்கிறது. இதில்

வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை ஈவிரக்கமின்றி உடைத்தெறிந்த போதும் சரி, தற்போது முதலாளித்துவ உற்பத்தி உறவு களை மாற்ற மறுக்கும்போதும் சரி, அதனிடம் இருப்பது முதலாளி வர்க்க நலன் மட்டுமே. எனவேதான் முதலாளித்துவ அமைப்பில் ஏற்படும் நெருக்கடிகளை, அது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை சோசலிச உற்பத்தி உறவாக மாற்றியமைப்பது மூலமாகவன்றி, உழைக்கும் மக்களின் முதுகின் மீது முதலாளித்துவ உற்பத்தி சக்திகளை அரக்கவேகத்தில் வளர்ப்பதன் மூலம் தீர்க்க முயல்கிறது.

அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகள் மட்டு மல்ல, குருசேவ்- கோர்பசேவ் 'முதலாளித்துவ கம்யூ னிஸ்ட்' கும்பலும் இதையே செய்கிறது. லியூ-டெங் திருத்தல் வாதமும் இதையே முன்வைக்கிறது. உற்பத்தி உறவுகள் மற்றும் மேல்கட்டுமானங்களிலான தொடர் புரட்சியை நிராகரித்து 'நான்கு நவீன மயமாக்கலை' கேந்திர கண்ணியாக அறிவித்திருப்பதன் சாரம் இது தான். ஆனால் பாட்டாளி வர்க்கம் அத்தகையதல்ல. அது எல்லாவித வர்க்க உறவுகளையும் ஒழிப்பதையே தனது இலக்காகக் கொண்டிருக்கிறது. எனவே அது மேலும் மேலும் உற்பத்தி உறவுகளை மாற்றியமைப்ப தற்கும், அதற்காக மேல்கட்டுமானத்தை மாற்றியமைப் தற்கும், அதன் மூலம் உற்பத்தி சக்திகள் தங்கு தடை யற்ற முறையில் பிரமாண்ட வளர்ச்சி காண்பதற்கும், உற்பத்தி பெருவதற்கும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத் தைப் பயன்படுத்துகிறது,

'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி யைத் தொடர்ந்து நடத்துவது' என்பதும், 'அரசியலை ஆணையல் வைப்பது' என்பதும் 'புரட்சியைப் பற்றி

நின்று உற்பத்தியைப் பெருக்குக' 'வர்க்கப் போராட்டத்தைக் கேந்திரக் கண்ணியாகக் கொள்க' என்பதும் இதுவே. லியூ-டெங் கும்பல் இதைத் தான் எதிர்க்கிறது. சோசலிச சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டை மறுத்து 'பின் தங்கிய உற்பத்தி சக்திகள்' 'முன்னேறிய உற்பத்தி முறை' என்ற கோட்பாட்டை முன் வைப்பதன் மூலம் அப்பட்டமான முதலாளித்துவப் பாதையை முன் தள்ளுகிறது. 'நான்கு நவீனமயப் படுத்தும் கொள்கையே இன்று கேந்திர கண்ணி' என்றும், அதுவே பாட்டாளி வர்க்க அரசியல் என்றும், அதை ஆணையில் வைப்பதே பாட்டாளி வர்க்க அரசியலை ஆணையில் வைப்பது என்றும், இதை எதிர்க்கும் தீங்கு பயக்கும் சக்திகளுக்கு எதிரான போராட்டமே வர்க்கப் போராட்டத்தின் பிரதான அம்சம் என்றும் பொருளாதார வாதத்தை முன் தள்ளுகிறது.

இதுவே இரண்டு பாதைகளுக்கு இடையிலான போராட்டமாகவும், இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமாகவும் வெளிப்படுகிறது. தொடர்ந்து மேல்கட்டுமானத்திலும், அடித்தளத்திலும் — அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய அனைத்து துறைகளிலும்- புரட்சியை நடத்துவது என்பது பாட்டாளி வர்க்க சோசலிசப் பாதையாகும், அது கம்யூனிசத்திற்கு வழி நடத்துவதாகும். தொழிலாளிகள்-விவசாயிகள் கூட்டணியை உறுதிபடுத்தி இறுதியில் வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதாகும். 'தனிமனிதனின் சர்வாம்சவளர்ச்சியோடு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் பொது செல்வத்தின் அபரிமித வளர்ச்சியையும்' சாதிப்பதாகும். இதற்கு மாறாக, உற்பத்தி உறவுகளிலும் மேல் கட்டுமானத்திலும் புரட்சியை மறுத்து, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை முன்னிறுத்துவது முதலாளித்துவப் பாதையாகும். தொழிலாளர் —விவசாயிகள் கூட்

டணியை உடைப்பதும் விவசாயிகளிடையே வர்க்க வேறுபாட்டைக் கூர்மைப்படுத்துவதும் ஆகும். தனிமனிதனின் ஆன்மீக வளர்ச்சியை சீரழித்து பொது செல்வத்தை சிலர் கரங்களில் குவித்து சமுதாயத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதாகும்.

இது வர்க்கப் போராட்டத்தினால் அன்றி தீர்க்கப் படமுடியாது. பழைய, புதிய முதலாளிகளும், நிலப்பிரபுகளும், பணக்கார விவசாயிகளும், கட்சிக்குள்ளும் அரசாங்கத்திலும் இருக்கும் இவர்களின் ஏஜெண்டுகளும் தொடர்ந்து சோசலிச மாற்றத்தை எதிர்க்கின்றனர். நீண்டகாலம் நிலவிவந்த முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சித்தாந்தம் மக்களிடையே செல்வாக்கு செலுத்துகிறது. சர்வதேச முதலாளித்துவம் எப்போதும் புரட்சிக்கு எதிராக சதிவேலையில் இறங்க தயாராயிருக்கிறது. உள்நாட்டின் பிற்போக்காளர்களும், எதிர் புரட்சியாளர்களும் அவர்களோடு கூட்டுச்சேரத் தயாராய் இருக்கிறார்கள். எனவே எதிர்ப்புரட்சி திரிபுவாதிகளை நசுக்குவது, பரந்துபட்ட மக்களுக்கு சோசலிச கல்வியளிப்பது இன்றி, அதற்கான இயக்கங்களும், அமைப்புகளும் இன்றி சோசலிசப்பாதையில் முன்னேற முடியாது. இது தொடர்ந்ததாகவும், நீடித்ததாகவும், சில சமயங்களில் கூர்மையானதாகக் கூட மாறும். பாட்டாளி வர்க்கம் அதன் சொந்த நோக்கத்தின் படி உலகை மாற்ற விரும்புகிறது. முதலாளிவர்க்கம் அதன் நோக்கத்தின்படி உலகை மாற்ற விரும்புகிறது, எனவே இது தவிர்க்க முடியாததாகும். இப்போராட்டத்தை நடத்துவதில் பாட்டாளி வர்க்கம் தவறிழைத்தால், முதலாளியம் மீட்டமைக்கப்படுவது தவிர்க்க முடியாததே.

சோசலிசம் என்பது மடிந்துவரும் முதலாளித்துவத்துக்கும், இளம் பருவத்தில் இருக்கும் கம்யூனிசத்

திற்கும் இடையிலான போராட்ட கால கட்டம் என்று லெனின் சொன்னார். இக்கால கட்டத்தில் எது வெல்லும், முதலாளித்துவமா? சோசலிசமா? என்பது நீண்டகாலத்திற்கு தீர்க்கப்படுவதில்லை. எனவேதான் மாவோ சொன்னார் ''சோசலிச சமுதாயம் ஒரு நீண்ட கால கட்டம் கொண்டதாகும். சோசலிசத்தின் இந்த வரலாற்றுக் காலகட்டம் முழுவதும் வர்க்கங்களும், வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப் போராட்டங்களும், முதலாளித்துவப்பாதை, சோசலிசப் பாதை ஆகிய வற்றிற்கிடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் நிலவுகின்றன. நமது கவனத்தை மிகவும் கூர்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். சோசலிசக் கல்வியை நடத்த வேண்டும். வர்க்கப் போராட்டத்தையும், வர்க்க முரண்பாடுகளையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நமக்கும் எதிரி களுக்கும் இடையிலான முரண்பாட்டையும், மக்க ளுக்கு இடையிலான முரண்பாட்டையும் வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். அவற்றைச் சரியாகக் கையாள வேண்டும். இல்லாவிடில்நம்மைப் போன்ற ஒரு சோசலிச நாடு அதன் எதிர்மறையாக மாறி, சீரழிந்து, முதலா ளித்துவ மீட்சி நடந்தேறும்'' (2). இது ஒன்றும் வரலாற்றில் புதிய விசயமல்ல. இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற அய்ரோப்பிய நாடுகளில் நடந்த முதலாளித் துவ புரட்சிகள் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளன. நிலபிரபுத்துவத்தை தூக்கி எறிந்தபின் பலமுறை மீட்ட மைப்பும் மாற்றமும் நிகழ்ந்துள்ளன. இத்தகைய மீட்ட மைப்பும், மாற்றமும் சோசலிச நாடுகளிலும் சாத்தி யமே. எவ்வாறாயினும் இறுதி வெற்றி சோசலிசத் துக்கே. வரலாறு இதற்கு எதிராகச் செல்ல முடியாது.

# 12. திருத்தல்வாதத்துக்கு எதிராக தேசிய, சர்வதேசிய ரீதியில் கம்யூனிஸ்டுகள் அய்க்கியப்பட வேண்டும்.

இன்று தேசிய அளவிலும், சர்வ தேசிய அளவிலும் கம்யூனிச இயக்கத்தையும், பாட்டாளி வர்க்கத்தையும் பிளவுபடுத்தும் பேரபாயமாக விளங்குவது திரிபு வாதமே. திரிபுவாதம் என்பது உண்மையில் முதலாளித் துவ சித்தாந்தமாகும். அது பாட்டாளி வர்க்கத்தைதத்து வார்த்த ரீதியில் நிராயுதபாணியாக்கி முதலாளிகளிடம் சரணடையச் செய்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தையும் புரட்சிகர நடவடிக்கைகளையும் கைவிடச் செய்து பாராளுமன்ற சட்டவாத நடவடிக்கைகளில் உணர்விழக்கச் செய்கிறது. சோவியத் திருத்தல்வாதிகள் உலகம் எங்கும் பாட்டாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தி 'முதலாளித்துவ கம்யூனிஸ்ட்' கட்சிகளை உருவாக்கி இருக்கிறார்கள். டெங் கும்பலும் தன் பங்கிற்கு உலகம் முழுவதும் உள்ள புரட்சியாளர்களையும், புரட்சியையும் காட்டிக் கொடுத்து எல்லாத் திரிபுவாதிகளையும் அணி சேர்த்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் குறிப்பான நிலைமைகள் குறித்து அந்நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி, மார்க்சியத்தின் அடிப்படையையே மறுத்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையே கைவிட்ட சீர்திருத்தவாத 'யூரோ கம்யூனிஸ்ட்' கட்சிளையும் யுகோஸ்லொவிகியா, போலந்து, ருமேனியா போன்ற

வற்றின் திரிபுவாத 'கம்யூனிஸ்ட்' கட்சிகளையும் மற்றும் உலகமெங்கும் இருக்கும் முதலாளித்துவ கம்யூனிஸ்டு கட்சிகள் பலவற்றையும் தன் நட்பு முகாமில் சேர்த்துக் கொண்டிருக்கிறது. உள்நாட்டிலும், சர்வதேசிய அளவிலும் புரட்சியைக் கைவிட்டிருக்கும் டெங் கும்பலும், ரசிய குருசேவ் — கோர்பசேவ் கும்பலும், இவற்றின் அடியொற்றிச் செல்லும் முதலாளித்துவ திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரண்டாவது அகில சந்தர்ப்ப வாதிகளே அன்றி வேறல்ல. மேலும் கொரியா, வியட்நாம் போன்ற நாடுகளில் இருக்கும் 'கம்யூனிஸ்ட் கட்சிகள்' தேசியவாத சந்தர்ப்பவாதக் கட்சிகளேயாகும். இது தவிர சோவியத் திருத்தல் வாதத்தை எதிர்த்து தோழர் மாவோவுடனும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தோளோடு தோள் சேர்ந்து போராடிய அல்பேனிய தொழிலாளர் கட்சி, மாவோவையும், அவர் தலைமையிலான புகழ்மிக்க சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், மகத்தான சீனப் புரட்சியையும், மாசேதுங் சிந்தனையையும் ரசிய குருசேவ் கும்பலின் வசை மொழிகளிலேயே இழித்தும் பழித்தும் கூறி, வறட்டுவாத நிலையில் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தை தன் பங்கிற்கு பிளவுபடுத்தியுள்ளது.

உலக கம்யூனிஸ்ட் இயக்கம் இரண்டாவது அகிலத்தின் இறுதிக் காலத்தில் இருந்தது போல பலவீனமாகவே இருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை எதிர்த்துப் போராடியபோது லெனின் தனியாக நின்றார். மார்க்சியத்துடன் லெனினியமும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமாகியது. வெற்றிபெற்ற சோசலிச சோவியத் யூனியன் உலக கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களுக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ஆதர்சமாகியது. குருசேவ் திருத்தல்வாதத்தை

எதிர்த்து மாவோ போராடிய போது, பெரும்பாலான கட்சிகள் திருத்தல்வாதத்துக்குப் பலியாகி நின்றன. ஆனால் உலகம் முழுவதும் புரட்சியாளர்களும், கட்சிகளும் மார்க்சிய லெனினியத்தின் கீழ் குருசேவ் புரட்டல்வாதத்திற்கு எதிராக அணி திரண்டனர். மாபெரும் இளம் சோசலிச சீனமும் அதன் தலைவரும் உலகப் புரட்சிகர இயக்கத்திற்கு, உத்வேகமூட்டும் தலைமையாகத் திகழ்ந்தனர். இன்று நமக்கு அத்தகைய தலைவர்களும், சோசலிச நாடும் இல்லை. சர்வதேச திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இது ஒரு பலவீனமான அம்சம் என்பது உண்மையே. ஆனால் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளையும், குருசேவ் புரட்டல்வாதத்தையும், லியூ - டெங் கும்பலையும் எதிர்த்துப்போராடிய கோட்பாட்டு ஆயுதங்கள் இன்றும் நம்மிடம் விட்டு வைக்கப்பட்டுள்ளன. இதைவிட பலமான ஆயுதங்கள் இதற்குமுன் இல்லை. இந்த ஆயுதங்களை கையில் ஏந்திட வேண்டியது மட்டுமே உலகப் புரட்சியாளர்களின் அய்க்கியத்துக்கும், தொழிலாளி வர்க்கத்தை அய்க்கியப் படுத்துவதற்கும், உலகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும் இன்றுள்ள ஒரே நிபந்தனையாகும்.

உலகின் சோசலிச நாடுகள் பலவற்றிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள், திரிபுவாதக் கட்சிகளாக மாறி முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டிருப்பது தற்காலிகமானதே. உலக வரலாறு முன்னோக்கிப் பாய்வதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. பாட்டாளி வர்க்கம், எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் போலவே, முதலாளித்துவ மீட்சி நடைபெற்றிருக்கும் முன்னாள் சோசலிச நாடுகளிலும் கூட அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற வரலாற்று விதியை யாராலும் மாற்ற முடியாது. இது தொடர்ச்சியான கடினமான போராட்

டத்தின் மூலமே சாத்தியமாகும். திரிபுவாதக் கட்சிகள் தமது வேலைகள் அனைத்தையும் பாட்டாளி வர்க்க உணர்வில் அல்ல, முதலாளித்துவ உணர்விலேயே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மார்க்சியம் பேசுவது உதட்டளவில் மட்டுமே. வறட்டுவாதிகளையும், இடது திரிபுகளையும் இவர்கள் தாக்குகிறார்கள் என்பது உண்மையே. உண்மையில் வறட்டுவாதிகளையும், இடது திரிபுகளையும் இவர்கள் தாக்கும்போது மார்க்சியத்தின் புரட்சிகர ஜீவனையே தாக்குகிறார்கள். எனவே ஒப்பீட்டளவில் 'இடது'களை விட வலது திரிபு கூடுதல் அபாயகரமானதாகவும் திருத்த முடியாததாகவும் இருக்கிறது. இதன் பொருள் இடது திரிபும், வறட்டுவாதமும் நல்லது என்பது அல்ல. புரட்சிக்கு சேதம் விளைவிப்பதில் இந்த இரண்டுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இந்திய கம்யூனிச இயக்க வரலாறு இதற்கு கூடுதலான நிருபணமாகும்.

நமது நாட்டில் இருக்கும் இ.பொ க., இ.பொ.க(மா) ஆகியவை ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் அடியொற்றி நிற்கும் 'முதலாளித்துவ கம்யூனிஸ்ட்' கட்சிகளாகும். நமது நாட்டில் பாட்டாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதிலும், பாராளுமன்றவாதத்துக்குப் பலியாக்குவதிலும், முதலாளி வர்க்கத்தின் கடைசியான, நம்பகமான சேவகனாக அவை பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. குருசேவ் திருத்தல்வாதத்தை எதிர்த்து சர்வதேச ரீதியில் போராட்டம் தொடங்கப்பட்ட போது, குருசேவ் திருத்தல்வாத நிலைப்பாட்டில் ஊன்றி நின்ற இ. பொ. க. வினரிடமிருந்து பிரிந்த இ. பொ. க. (மா)வினர் மிகக் காலம் தாழ்த்தி தமது சந்தர்ப்பவாத நிலைபாடுகளை அறிவித்தனர். குருசேவ் கும்பல் திருத்தல்வாதம் என்று அதில் பிரகடனப்படுத்திய இந்தப் பேர் வழிகள் அங்குமுதலாளித்துவம் மீட்டமைக்கப் பட்டதை

யும்,அது சமூக ஏகாதிபத்தியமாக சீரழிந்ததையும்மறுக்கிறார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியில் 'பூர்சுவா செல்வாக்கு' நிலவுவதுதான் திருத்தல் வாதத்துக்குக் காரணம் என்றனர். அதன் தர்க்க ரீதியான முடிவாக இன்று ரசிய திருத்தல்வாதத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளே அல்ல எனப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின், அதற்கு ஆதரவான உள்நாட்டு முதலாளிய வர்க்கத்தின் நம்பிக்கைக்குரிய சேவகர்களாக இ. பொ. க., இ. பொ.க. (மா) வினர் தமது பணிமுழுவதையும் முதலாளித்துவ உணர்விலேதான் — பாட்டாளி வர்க்க உணர்வில் அல்ல — நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இந்தியத் தொழிலாளி வர்க்கத்திடம் முதலாளித்துவ செல்வாக்கை உருவாக்குவதிலும் பெரும் பங்கை செலுத்தி வருகிறார்கள். இந்திய ஆளும் வர்க்கங்கள், ஆட்சியாளர்கள் இத்தூண்கள் இன்றி நீடித்து இருந்திருக்க முடியாது.

திரிபுவாதம் என்பது முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஒரு வடிவம். திரிபுவாதம் ஆட்சிக்கு வருவது என்பது முதலாளித்துவம் அதிகாரத்துக்கு வருவதேயாகும். தொழிலாளர்களிடையே திரிபுவாதம் பரப்பப்படுவது, முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பாட்டாளி வர்க்கத்தைப் பலியாக்குவதேயாகும். இதற்கு எதிரான போராட்டம் வறட்டுவாதிகள் மற்றும் இடது தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தைவிட நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு கடினமானது என்பதில் சந்தேகம் இல்லை. குட்டி முதலாளித்துவ வர்க்கத்தையும், தொழிலாளி வர்க்க பிரபுக்குல பிரிவையும் தனது சமூக அடிப்படையாகக் கொண்டிருக்கும் திரிபு வாதத்திலிருந்துபாட்டாளி வர்க்கத்தின், உழைக்கும் மக்களின் பரந்த பிரிவினரை விடுவிக்காமல் உள் நாட்டு பிற்போக்காளர்களையும்

ஏகாதிபத்திய வாதிகளையும் தூக்கி எறிவதில் வெற்றி பெறமுடியாது.

இந்தியப் பொதுவுடமை இயக்கத்தில் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் தீர்க்கமான திருப்புமுனையாக விளங்கியது இ. பொ. க.(மா-லெ)யின் தோற்றமாகும். அதன் பிறப்பில் எத்தனை குறைபாடுகள் இருந்தபோதிலும் இந்த உண்மை மறுக்க முடியாததாகும். தேசிய, சர்வதேசிய புரட்சியை அது தனது ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அதன் இடது தவறுகள் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தைக் குறைத்து மதிப்பிட்டதில் அடங்கியிருக்கிறது. இதன் விளைவாக இ. பொ. க. (மா—லெ) இந்திய மக்களிடமிருந்து, பாட்டாளி வர்க்கத்திடமிருந்து திரிபுவாதிகளைத் தனிமைப் படுத்துவதில் வெற்றி பெற முடியவில்லை என்பது மட்டுமல்ல தானே கூட தனது ஒற்றுமையைக் காத்துக்கொள்ள முடியவில்லை.

திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் சகல பரிமாணங்களிலும் நடத்தப்படுவது இந்திய கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அய்க்கியமும், ஏன், சர்வதேச கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அய்க்கியமும் கூட சாதிக்கப்படுவதற்கு முதற்தேவையாகும். குருசேவ் திருத்தல்வாதத்துக்கு எதிராக மாவோ தொடக்கி வைத்த போராட்டம் இன்றைய நிலைமைகளில் புதிய தேவைகளுடன் இணைந்து தொடரப்பட வேண்டும். சர்வதேசக் கம்யூனிச இயக்கம் பற்றிய பிரச்சினையில் ஒற்றுமை நிலவுவது, தேசிய, சர்வதேசிய ரீதியில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அய்க்கியத்திற்கு ஒரு முக்கியமான, அவசியமான அடிப்படை என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய (மா—லெ) புரட்சியாளர்களிடையே குருசேவ் புரட்டல்வாதிகளுக்கு எதிராக மாவோ தொடக்கிய

போராட்டத்தில் காணப்படும் ஒற்றுமை மேலும் வளர்க்கப்பட வேண்டும். இன்றைய புதிய நிலைமைகளில் காணப்படும் வேறுபாடுகள் அய்க்கியம்—விமர்சனம்—அய்க்கியம் என்ற அணுகு முறையில் களையப்பட வேண்டும். இது சாத்தியமே. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றிய பிரச்சினையில், குறிப்பாக லியூ—டெங் திருத்தல் வாதக் கும்பலின் தேசிய, சர்வதேசியக் கொள்கைகள் மீது இந்தியப் புரட்சியாளர்களிடையே இடது, வலது விலகலும், திரிபும் காணப்படுகின்றன. சிலர் லியூ—டெங் கும்பலின் தேசிய, சர்வதேசிய புரட்டல்வாதக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர் அல்லது சமரசம் செய்து கொண்டிருக்கின்றனர் (உ. ம்: வி. மி. குழு). வேறு சிலர் லியூ—டெங் கும்பலின் உள்நாட்டு திருத்தல்வாதக் கொள்கைகளை மறுதலிக்கும் அதே வேளையில், அதன் சர்வதேச வர்க்கசமரசக்கொள்கையை புதிய விளக்கங்களுடன் உறுதியாக ஆதரிக்கின்றனர் (உ. ம்: மா. அ. க). வேறு சிலர் லியூ—டெங் கும்பலின் சர்வதேச வர்க்க சமரசக்கொள்கையை எதிர்த்து 'உலக யுத்தம் மூண்டால், உலக யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவோம்' என்று சரியாகக் கூறினாலும், உலகில் சோசலிச நாடு ஒன்று இல்லாததால் என்று ஒரு நிபந்தனை விதிக்கின்றனர் (உ. ம்: ம.யு.குழு). சிலர் லியூ—டெங் கும்பலின் உள், வெளிக் கொள்கைகள் அனைத்தையும் எதிர்த்த போதிலும் சீனக் கலாச்சாரப் புரட்சியின் இடது தீவிரவாத குழுவைத் தலைமையாக கொண்டிருக்கிறார்கள் (உ.ம்:சி. ஆர்.சி). எவ்வாறாயினும் இந்தியப் புரட்சியாளர்களிடையே சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றி நிலவும் வேறுபாடுகள் தீர்க்கப்படக் கூடியவையே.

மாபெரும் தலைவர் தோழர் மாசேதுங் தலைமையில், மாபெரும் மக்களைக் கொண்ட மக்கள் சீனம் அறுபதாம் ஆண்டுகளில் குருசேவ் திருத்தல்வாதத்துக்கு

எதிரான போராட்டத்தின்போது, உலகப் புரட்சியாளர் களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் மாபெரும் ஆதர்ச மாய் விளங்கியது. அது மார்க்சிய—லெனினியத்தைக் கட்டிக்காத்தது மட்டுமல்ல மேலும் வளர்த்தது.

தடையற்ற போட்டி நிலவிய முதலாளித்துவத்தின் சகாப்தத்தில் மார்க்ஸ் முதலாளித்துவ சித்தாந்தங்கள் அனைத்தையும் முறியடித்து பாட்டாளி வர்க்க தத்து வார்த்த ஆயுதமாக மார்க்சியத்தை வார்த்தெடுத்தார்.

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்த கால கட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையில் எழுந்த அனைத்து திரிபுகளையும் முறியடித்து நிலை நாட்டினார் லெனின்.

சோசலிச நாடுகளில் திரிபுவாத ஆதிக்கமும், முதலாளித்துவ மீட்சியும் நடைபெறும் கால கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் பாட்டாளி வர்க்கப் புரட்சியை இறுதி வரை நடத்துவது பற்றிய பிரச்சினையைத் தீர்த்து மார்க்சிய— லெனியத்தின் வெல்ல முடியாத புரட்சியாற்றலை நிலை நாட்டினார் மாசேதுங்.

இன்று உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் — பாட்டாளி வர்க்க இயக்கத்தில்-திருத்தல்வாதம் பிரதான போக்காக இருப்பதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்ற பல நாடுகளிலும் திரிபுவாதம் அதிகாரத்துக்கு வந்திருப்பதும், கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை சோர் வடையச் செய்ய வேண்டியதில்லை.

சர்வதேச ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் மற்றும் அனைத்து பிற்போக்கு திரிபுவாத சக்திகளையும் முறியடித்து, சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சியை

முன்னெடுத்துக் செல்வதற்கான மாபெரும் ஆயுதமான மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை இன்று கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் கரங்களில் உயர்ந்து நிற்கிறது. மார்க்சியத்தின் புரட்சியாற்றலை மலினப் படுத்த முயலும் அனைத்து பிற்போக்கு சித்தாந்தங்களை யும் அது முறியடித்திருக்கிறது. இந்த மாபெரும் ஆயுதத்தை கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் ஏந்திக் கொண்டிருக்கும் போது, அதன் அடிப்படையில் தேசிய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும் அய்க்கியப்படும்போது உலகின் ஏகாதிபத்தியசக்திகள் அனைத்தும், பிற்போக்கு கள் அனைத்தும் தூக்கி எறியப்படுவது நிச்சயம்.

**லெனின் சொன்னார்:**

''ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சுரண்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் தாக்குதல், குட்டி முதலாளித்துவ சக்திகளின் எதிர்ப்பையும், தொழிலாளர் பிரபு குலத்தின் சிறிய மேல்தட்டு பிரிவின் செல்வாக்கையும் வென்று, சமாளித்து, இதுவரை வரலாற்றின் வரம்புகளுக்கு அப்பால் நின்றிருந்த, வரலாற்றின் இலக்குப் பொருளாக மட்டுமே கருதப் பட்டு வந்த கோடிக்கணக்கான மக்களின் தாக்குதலுடன் இணையும்போது உலக ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைவது நிச்சயம்'' (1).

மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனை எனும் பேராயுதத்தை ஏந்தும் பாட்டாளி வர்க்கம் மட்டுமே இதைச் சாதிக்க முடியும். நிச்சயம் சாதிக்கும். ●

# மேற்கோள் நூல் பட்டியல்

## 1

1. மாவோ தொகுதி 5, பக். 435 (பிரச்சாரப் பணிகள் பற்றி கட்சியின் தேசிய மாநாட்டு உரை)
2. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 10வது பேராய ஆவணம்
3-8 லெனின் தொகுதி 23, பக். 112-113 (ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்)
9. லெனின் தொகுதி 22, பக். 283 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)
10-14 லெனின் தொகுதி 24, பக் 75-77 (நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் காண்க)
15. லெனின் தொகுதி 22, பக். 194 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)
16-17 லெனின் தொகுதி 22, பக். 112 (சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்)
18. லெனின் தொகுதி 31, பக். 231 (கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்)
19. மாவோ, குருசேவின் போலி கம்யூனிசமும் உலகிற்கு அதன் வரலாற்றுப் பாடமும்.
20. மாவோ, லெனினிசமா? சமூக ஏகாதிபத்தியமா?
21. லெனின் தொகுதி 23, பக். 112 (ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்)

22-23. லெனின் தொகுதி 22, பக். 285-86 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)

24. லெனின் தொகுதி 29, பக். 501 (மூன்றாவது அகிலத்தின் பணிகள்)

25. லெனின் தொகுதி 24, பக். 75 (நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்)

26. மாவோ தொகுதி 5, பக். 485 (புரட்சியை வளர்ப்பதில் செயல் வீரர்களாய் இருங்கள்)

27,28. மாவோ, மே 16 சுற்றறிக்கை, மாவோ மற்றும் மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவாக பின்னிணைப்பு காண்க:

29. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை.

30. பீஜிங் ரிவ்யூ 18.6.76. Mao Makes 5, P. 363)

31. பீஜிங் ரிவ்யூ 23.3.75

32. பீஜிங் ரிவ்யூ 9. 4. 76 (MM-5,P. 268)

33. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, 12வது பேராய ஆவணம்.

34. 1977 நவ. 1, 'மக்கள் தினசரி' தலையங்கம்.

35. லெனின் தொகுதி 23, பக். 129 (ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும் காண்க)

36. லெனின் தொகுதி 21, பக். 257, இரண்டாவது அகிலத்தின் தகர்வு

37. லெனின் தொகுதி 21, பக். 32 (போரும் ரசியசமூக ஜனநாயகமும்)

38. லெனின் தொகுதி 23, பக். 119 (ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்)

## 2

1. லெனின் தொகுதி 22, பக். 299 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)
2. லெனின் தொகுதி 22, பக். 190 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)
3. லெனின் தொகுதி 23, பக். 107 (ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்)

4,5 லெனின் தொகுதி 23, பக். 80 (பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத் திட்டம்)

6. ஸ்டாலின் தேர்வு நூல், பக். 49 (லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்)
7. மாவோ, சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக். 50

## 3

1. கம்யூனிஸ்ட் எண் 11, 1963
2. லெனின் தொகுதி 22, பக். 190 (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்)

3,4 கம்யூனிஸ்ட் எண் 11, 1963

5. லெனின் தொகுதி 24, பக். 67 (நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்)

6. லெனின் தொகுதி 20, பக். 288 (பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்)

7. லெனின் தொகுதி 21, பக். 232 (இரண்டாவது அகிலத்தின் தகர்வு)

8. லெனின் தொகுதி 21, பக். 341 (ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் வேண்டும் என்ற முழக்கத்தைப்பற்றி)

9. லெனின் தொகுதி 23, பக். 81 (பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத் திட்டம்)

10. கம்யூனிஸ்ட் எண் 11, 1963

11. லெனின் தொகுதி 21, பக். 233 (இரண்டாவது அகிலத்தின் தகர்வு)

12. ஸ்டாலின், (சோவியத் யூனியனில் சோசலிசத்தின் பொருளாதாரப்பிரச்சினை)

13. லெனின் தொகுதி 23, பக். 82 (பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத்திட்டம்)

14. லெனின் தொகுதி 21, பக். 299 (சோசலிசமும் போரும்)

15-17 லெனின் தொகுதி 23, பக். 84, 86, 87 (பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத் திட்டம்)

18. ஸ்டாலின், (சோவியத் யூனியனில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினை)

19, 20 கம்யூனிஸ்ட் எண் 11, 1963

21 லெனின் தொகுதி 21, பக். 231 (இரண்டாவது அகிலத்தின் தகர்வு)

## 4

1. லெனின் தொகுதி 21, பக். 342 (அய்க்கிய அய்ரோப்பிய நாடுகள் வேண்டும் என்ற முழக்கத்தைப்பற்றி)
2. லெனின் தொகுதி 21. பக். 404 (பல்வேறு ஆய்வுரைகள்)
3. லெனின் தொகுதி 27, பக். 333 (இடது சாரி இளம்பிள்ளைத்தனமும் குட்டி முதலாளிய மனோபாவமும்)
4. லெனின் தொகுதி 26, பக். 146 (துரதிர்ஷ்ட சமாதானம் எனும் பிரச்சினையின் வரலாறு குறித்து)
5. லெனின் தொகுதி 27, பக். 64 (வேதனை தரும் ஆனால் அவசியமான படிப்பினை)
6. கம்யூனிஸ்ட் எண் 11, 1963

7, 8. ஸ்டாலின் தொகுதி 10, பக். 295-7 (சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி (போ)யின் 12வது காங்கிரஸ்)

9-11. கம்யூனிஸ்ட் எண் 11, 1963

12. லெனின் தொகுதி 23, பக். 78 (பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத் திட்டம்)

## 5

1. லெனின் தொகுதி 13, பக். 86-87 (ஸ்டுட்காட்டில் நடைபெற்ற சர்வதேச சோசலிஸ்டு காங்கிரஸ்)

2. சமூக ஏகாதிபத்தியம் பற்றிய புள்ளி விபரங்களுக்கு ஆதாரம் : 1977 நவ. 1, மக்கள்தினசரி தலையங்கம், லெனினிசமா சமூகஏகாதிபத்தியமா, மற்றும் பின்வரும் பீஜிங் ரிவ்யூ இதழ்கள்: 11.1.74 29. 3. 74, 7. 1. 75, 6. 2. 76, 2. 12. 77, 16. 12. 77, 2. 6. 78, 17. 11. 78, 1. 6. 79.

3. லெனின் தொகுதி 24, பக். 75 (நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்)

# 6

1. லெனின் தொகுதி 33, (சோவியத்துக்களின் 9வது அகில ரசிய மாநாடு), 1977, நவ. 1 மக்கள் தினசரி தலையங்கத்தில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது)

2. லெனின் தொகுதி 31, பக். 240 (கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்-தேசிய, காலனி பிரச்சினைகள் பற்றிய கமிஷனின் அறிக்கை.)

3. ஸ்டாலின் தொகுதி 14 (இரு முகாம்கள்)

4. ஸ்டாலின் தேர்வு நூல் தொகுதி1, பக். 64 (லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்)

5. லெனின் தொகுதி31, பக். 216(சர்வதேசநிலைமை பற்றிய அறிக்கையும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் அடிப்படை கடமைகளும் காண்க)

6. ஸ்டாலின் தொகுதி 10 (சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது மாநாட்டிற்கு மத்திய கமிட்டியின் அறிக்கை காண்க)

7-8. 1977, நவ. 1. மக்கள் தினசரி தலையங்கம் காண்க,

9. மாவோ தொகுதி 4 (அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ் ஸ்ட்ராங்குடன் உரையாடல் காண்க)

10. மாவோ தொகுதி 5 (மாநகராட்சி, சுயாட்சி பிரதேச கட்சிக் கமிட்டிகளின் செயலர் மாநாடு உரை)

11,12. 1977, நவ. 1. மக்கள் தினசரி தலையங்கம்.

13. லெனின் தொகுதி 28, பக். 11 அமெரிக்கத் தொழிலாளர்களுக்குக் கடிதம்

14. லெனின் தொகுதி 27, பக். 333 (இடது சாரி சிறு பிள்ளைத் தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும்)

15. லெனின் தொகுதி 27, பக். 379 (அகில ருசிய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மாஸ்கோ சோவியத்தினுடைய கூட்டுக் கூட்டத்தில் வெளி நாட்டுக் கொள்கை பற்றிக் கொடுத்த அறிக்கை 14.5.1918)

16. லெனின் தொகுதி 26, பக். 448 (துரதிர்ஷ்ட சமாதானம் குறித்து)

17. லெனின் தொகுதி 26, பக். 252 (சோவியத்துக்களின் 2வது அகில ரசிய காங்கிரஸ்)

## 7

1. லெனின் தொகுதி 30, பக். 151 (கீழ்திசைமக்களின் கம்யூனிஸ்ட் நிறுவனங்களின் இரண்டாவது அகில ரசிய காங்கிரஸில் ஆற்றிய உரை, 1919 நவ. 22-ம்

   லெனின் தொகுதி 31, பக், 240 (தேசிய காலனி பிரச்சினை மீதான அறிக்கை, 1920 ஜூலை 26)ம் காண்க.

2. ஸ்டாலின் தொகுதி 7, பக். 109 (ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போ)யின் 14 வது மாநாட்டின் வேலைகள் பற்றி)

3. லெனின் தொகுதி 30, பக். 159 (கீழ் திசை மக்களின் கம்யூனிஸ்ட் நிறுவனங்களின் இரண்டாவது அகில ரசிய காங்கிரசில் ஆற்றிய உரை, 1919, நவ. 22)

4. ஸ்டாலின் தேர்வு நூல் தொகுதி 1, பக், 64. (லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்)

5. லெனின் தொகுதி 21, பக். 301 (சோசலிசமும் போரும்)

## 8

1. மார்க்ஸ், கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சன உரை

2. லெனின் தொகுதி 25, பக். 466; (அரசும் புரட்சியும்)

3-4. லெனின் தொகுதி 29, பக். 420-21 (மாபெரும் தொடக்கம்)

5. லெனின் தொகுதி 29, பக். 419 (மாபெரும் தொடக்கம்)

6. மார்க்ஸ், பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்

7. லெனின் தொகுதி 29, பக். 420 (மாபெரும் தொடக்கம்)

8-9. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, 27வது காங்கிரஸ் ஆவணங்கள் காண்க

## 9

1. மார்க்ஸ், கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சன உரை

2. லெனின் தொகுதி30, பக்.107 (பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும்)

3. மார்க்ஸ், கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சன உரை

4-9. லெனின் தொகுதி 25, பக். 469-476 (அரசும் புரட்சியும்)

10. மாவோ, சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக்.131 காண்க

11. பீஜிங் ரிவ்யூ 18-6-1976

12. லெனின் தொகுதி 29, பக். 123 (மாபெரும் தொடக்கம் காண்க)

13. மாவோ, சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக். 136

14. மாவோ, மாபெரும் விவாதம் ,பக். 330 (9வது விமர்சனம்)

# 10

1. பீஜிங் ரிவ்யூ 6-2-1976, மாவோ, 8வது மத்திய கமிட்டியின் 10வது பிளீன கட்டத்தில் பேசியது (செப் 1962)

2. மார்க்ஸ், கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சன உரை

3. மார்க்ஸ்-ஏங்கல்ஸ், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

4. லெனின் தொகுதி 33, பக். 278 (ரசிய பொது வுடமைக் கட்சியின் 11வது காங்கிரஸ்)

5. மாவோ தொகுதி 5,பக். 34 (எல்லா திசைகளிலும் தாக்காதீர்)

6. மாவோ தொகுதி 5, பக். 101 (அரசு முதலாளித் துவம் பற்றி)

7. ஸ்டாலின், சோ. யூ. பொ. க. (போ) வரலாறு பக்.456 காண்க

8. மாவோ தொகுதி 5, பக். 93-94 (பொது வழியிலிருந்து விலகிச் செல்லும் வலது விலகல் கண்ணோட்டங்களை நிராகரியுங்கள்)

9. மாவோ தொகுதி 5, பக். 103 (கட்சிக்குள் முதலாளித்துவ சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடுங்கள் காண்க)

10. மாவோ தொகுதி 5, பக். 224 (கூட்டுறவு மாற்றத்தின் மீதான விவாதம் காண்க)

11. மாவோ தொகுதி 5, பக். 93-94 (பொது வழியிலிருந்து விலகிச் செல்லும் வலது விலகல் கண்ணோட்டங்களை நிராகரியுங்கள்)

12. மாவோ தொகுதி 5, பக். 105 (கட்சிக்குள் முதலாளித்துவ சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடுங்கள்)

13. மாவோ தொகுதி 5, பக். 224 (கூட்டுறவுமாற்றத்தின் மீதான விவாதம்)

14. லெனின் தொகுதி 30, பக். 115 (பாட்டாளிவர்க்க சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும்)

15. ஏங்கல்ஸ், பிரான்சிலும், ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை

16. 17. லெனின் தொகுதி 32, பக். 348 (பண்டவரி குறித்து)

18. மாவோ தொகுதி 5, பக். 71 (விவசாயத்தில் பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவை பிரதான பணியாகக் கொள்ளுங்கள்)

19. லெனின் தொகுதி 31, பக். 516 (சோவியத்துகளின் 8வது அகில ரசிய காங்கிரஸ்)

20, 21. லெனின் தொகுதி 29, பக். 189-90 (ரசிய பொதுவுடமைக் கட்சியின் 8வது காங்கிரஸ்)

22. லெனின் தொகுதி 33, பக். 468 (கூட்டுறவு குறித்து)

23. ஸ்டாலின், சோ. யூ. பொ. க. (போ) வரலாறு பக். 482 காண்க

24. ஸ்டாலின் தொகுதி 13, பக். 249

25. ஸ்டாலின் தொகுதி 13, பக். 251

26. ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக். 233

27. மாவோ தொகுதி 5, பக். 93-94 (பொதுவழியி லிருந்து விலகிச் செல்லும் வலது விலகல் கண்ணோட்டங்களுக்கு எதிராகப் போராடுங் கள்)

28. மாவோ தொகுதி 5, பக். 139 (பரஸ்பர உதவி மற்றும்கூட்டுறவு பற்றிய உரை)

29. மாவோ தொகுதி 5, பக். 105 (கட்சிக்குள் பூர்சுவா சித்தாந்தத்துக்கு எதிராகப் போராடுங் கள்)

30, 31. மாவோ தொகுதி 5, பக். 214 (கூட்டுறவு மாற்றத்தின் மீதான விவாதம்)

32. மாவோ தொகுதி 5, பக். 132 (பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு பற்றிய உரை)

33. ஸ்டாலின் தேர்வு நூல் தொகுதி 2, பக். 52 (சோ. யூ. பொ. க. (போ)யின் 18வது காங்கிர சுக்கு மத்திய கமிட்டியின் வேலை பற்றிய அறிக்கை)

34. மாவோ தொகுதி 5, பக். 341 (8வது மத்திய கமிட்டியின் 2வது கூட்டத்தில் உரை)

35. மாவோ தொகுதி5, பக். 423(பிரச்சாரப்பணிகள் பற்றி கட்சியின் தேசிய மாநாட்டு உரை)

36. மாவோ தொகுதி 5, பக். 434(பிரச்சாரப் பணிகள் பற்றி கட்சியின் தேசிய மாநாட்டு உரை)

37. மாவோ தொகுதி 5,பக். 435(பிரச்சாரப் பணிகள் பற்றி கட்சியின் தேசிய மாநாட்டு உரை)

38. மாவோ தொகுதி 5,பக். 479 (1957ன் கோடை காலச் சூழ்நிலைமை)

39. மாவோ தொகுதி 5,பக். 493(புரட்சியை வளர்ப் பதில் செயல் வீரராயிருங்கள்)

40. மாவோ தொகுதி 5,பக். 494 (புரட்சியை வளர்ப் பதில் செயல் வீரராயிருங்கள்,

41. பீஜிங் ரிவ்யூ 18-8-1978

42. பீஜிங் ரிவ்யூ 6-2-1976

43. பீஜிங் ரிவ்யூ 6-2-1976

44. Wind in the tower, P. 116 (Han Suyin)

45. Wind in the tower, P. 26

46. MM 5, P. 60

47. MM 5, P. 57

48-51. மாவோ மற்றும் மாசே துங் சிந்தனைக்கு ஆதரவாக பின்னிணைப்பு

52. MM 5, பக். 60

53. MM 5, பக். 57

54. பீஜிங் ரிவ்யூ 4-4-1975

55. MM 5, பக். 274; செங்கொடி 1976

56. MM 5, பக். 288; ஆய்வும் விமர்சனமும் 14-4-74

57. MM 5, பக். 231 பீஜிங் ரிவ்யூ 9-4-76

58. MM 5, பக். 275; செங்கொடி 76

59. பீஜிங் ரிவ்யூ 23-3-75

60. பீஜிங்ரிவ்யூ 18-6-76, MM 5, P. 363

61. பீஜிங் ரிவ்யூ 9-4-76, MM 5, P. 278

62. MM 5, P. 50

## 11

1. மாவோ சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக். 46-7

2. பீஜிங் ரிவ்யூ 6-2-76

## 12

1. லெனின் தொகுதி 31, பக். 232 (கம்யூனிஸ்ட் அகிலத்தின் 2வது காங்கிரஸ்)

●